
திருமந்திரக் கதைகள் - 03
கே.வி.குணசேகரம்

# ஐந்தாம் தந்திரம்.
# (வாதுளாகமம்)

## என்னுரை

திருமூலர் திருமந்திரத்தில் கடவுள், ஆருயிர், உலகம் பற்றி மிகவும் விரிவாகக் கூறியிருக்கிறார். அவர் என்னென்ன கூறியிருக்கிறார் என்பதை விட, அவர் எதைஎதைக் கூறவில்லையென ஆராய்ந்தால் எவற்றையும் காணமுடியவில்லை. உலகில் நடப்பன, உயிரில் கலப்பன, கடவுளோடு சேர்பன, கடவுளோடு சேரும் வழிவகைகள், உடலில் உண்டாகும் நோய் வகை, அவற்றிற்கான தீர்வும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் உடலில் உள்உறுப்புக்களின் எண்ணிக்கை, அவற்றில் உண்டாகும் நோய் வகை எனப் பலவும் கூறப்பட்டுள்ளன. விஞ்ஞானக் கருவிகள் இல்லாத காலத்தில் இவற்றை எவ்வாறு திருமூலர் கூறினார் என்பது அதிசயம். இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயர் அருமையான நூல்களையெல்லாம் எடுத்துச் சென்று அதை மொழிபெயர்த்து அதிலுள்ள விஞ்ஞானக் கருத்துக்களை நடைமுறைப்படுத்துகின்றனர் என்று மறைமலையடிகள் கூறியுள்ளார். அது உண்மையென்று திருமநதிரத்தைப் படித்த பின்பு உணரமுடிகின்றது. இந்நூலைப் படிக்க நேர்ந்தது கடவுளின் வரம். மிகமிகக் கடினமான தத்துவச் செய்யுள்களை என்னால் முடிந்தளவிற்கு உரையும் கதையும் எழுதியுள்ளேன். உரையைப் பலர் எழுதிய போதும் அது தத்துவமாக இருந்ததே தவிரப் புரியவில்லை. இப்போது கதைகளாக எழுதியமையால் புரியுமென்று நினைக்கின்றேன்.

கே.வி.குணசேகரம்

## 1. சுத்தசைவம்.

## (இயற்கைச் செந்நெறி)

**1394. ஊரும் உலகமும் ஒக்கப் படைக்கின்ற**
**பேரறி வாளன் பெருமை குறித்திடின்**
**மேருவும் மூவுல காளி யிலங்கெழுந்**
**தாரணி நால்வகைச் சைவமு மாமே.**

“சிவனடியார்களே, ஊர் உலகம் உடல் உறுப்பு உண்பொருள் இவற்றையெல்லாம் படைத்தருள்பவன் சிவபெருமான். அவன் இயல்பாகவே பேரறிவாளன். அவனது பெருமையைச் சொல்வதானால் மேருவாகிய பொன்மலையும், மூவுலகையும் ஒருங்கு ஆளும் அவன் படைத்தருளும் உலகங்களும் சுத்தமாகவும், மிகச்சுத்தமாகவும், மார்க்கம் கடுஞ்சுத்தம் என்னும் நான்கு வகையான சைவத்தையும் ஒப்பாகச் சொல்லலாம். நால்வகைச் சைவங்களான சுத்தவைசவம், அசுத்தசைவம், மார்க்கசைவம், கடுஞ்சுத்த வைசம் ஆகியன சிவபெருமானிடத்திருந்தே தோன்றியன” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1395. சத்தும் அசத்துஞ் சதசத்துந் தான்கண்டு**
**சித்தும் அசித்துஞ் சேர்வுறா மேநீத்த**
**சுத்தம் அசுத்தமுந் தோய்வுறா மேநின்று**
**நித்தம் பரஞ்சுத்த சைவர்க்கு நேயமே.**

“சிவனடியார்களே, மெய்ப்பொருளாகிய சிவமும், பொய்ப் பொருளாகிய மாயாகாரிய உலகமும் திருவருட்கண்ணால் கண்டு தூமாயை, தூயாமாயை ஆகிய இரண்டிலும் பற்றுக் கொள்ளாது நின்று சுட்டுணர்வு சிற்றுணர்வாகிய சித்தும், உணர்வில்லாத அசித்தும் தம்முள்த் தோன்றாமல் வாழும் உண்மைச் சைவர்களுக்கு என்றும் உள்ள மெய்ப்பொருள் சிவன். அச்சிவன் மெய்ச் சைவர்களுக்கு இன்ப வடிவாகத் தோன்றுவான். அவர்களும் இறவாத அன்பைச் செலுத்துவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1396. கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்**
**முற்பத ஞான முறைமுறை நண்ணியே**
**சொற்பத மேவித் துரிசற்று மேலான**
**தற்பரங் கண்டுளோர் சைவசித் தாந்தரே.**

“சிவனடியார்களே, மெய்யுணர்வைத் தரத்தக்க நூல்களைக் குருவின் உதவியோடு கற்று, கற்றபின் மெய்ப்பொருளை உணர்ந்து சிவயோகத்தைத் தரும் சீலம் நோன்பு என்பவற்றைக் கடைப்பிடித்தல் வேண்டும். அவை பயிலப் பயிலக் கைகூடுவன. அதன் மூலம் சிவனை அடைதல் வேண்டும். அப்போது மலக்குற்றங்கள் யாவும் அகலும். அவை அகன்றால் சிவனைக் காணலாம். அவ்வாறு கண்டவர்கள் தான் சைவசித்தாந்தராவர்” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1397. வேதாந்தஞ் சுத்தம் விளங்கிய சித்தாந்த**
**நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற காட்சியார்**
**பூதாந்த போதாந்த மாகப் புனஞ்செய்ய**
**நாதாந்த பூரணர் ஞானநே யத்தரே.**

“சிவனடியார்களே, மெய்ப்பொருளான சிவனை ஐயம்திரிபற விளக்குவதே உண்மையான சைவசித்தாந்தம் ஆகும். சித்தாந்திகள் சிவனைக் கண்டு இன்புறுவோராவார். அவர்கள் பிறப்பில்லாதவர்கள். பூதமுடிவும் அறிவு முடிவும் பெற்று மெய்க்கூட்டங்களை அடக்கி மெய்யுணர்வை அடைவர். இவர்கள் தத்துவங்களைக் கடந்த மெய்ப்பொருளான சிவனைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் சிவனை நினைத்து நினைத்து இன்பமடையும் மேலானவராவர். உணரப்படும் பொருளை உணர்ந்தவர்களாவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 2. அசுத்த வைசம்

### (மீ இயற்கைச் செந்நெறி)

**1398. இணையார் திருவடி ஏத்துஞ் சீரங்கத்து**
**இணையார் இணைக்குழை யீரணை முத்திரை**
**குணமா ரிணைக் கண்ட மாலையுங் குன்றாது**
**அணைவாஞ் சரியை கிரியையி னார்க்கே.**

“சிவனடியார்களே, ரவீந்திரனின் நண்பன் ஆரூரன் நூலுணர்வும், நுகர்வுணர்வும் ஆகிய இரண்டையும் பெற்றவன். ஏராளமான நூல்களைக்கற்று அதில் உள்ள மெய்யுணர்வுக் கருத்துக்களை நுகர்ந்து அவ்வாறு நடக்கும் பண்பாளன்

இத்தகையோரது உடம்பு சிறப்புடம்பாகும். இவர்கள் இரண்டு குண்டலங்களைக் காதில் அணிந்திருப்பர். உடலெங்கும் நீறணிந்து இருப்பார்கள். எவ்வேளையிலும் திருவைந்தெழுத்தை ஓதியபடி இருப்பார்கள். அறிவுடையாளமான அங்கையிலும் நற்பண்பு வாய்ந்த தலையிலும், மார்பிலும் சிவமணி மாலைகள் அணிந்திருப்பர். இவர்கள் சீலத்தார், நோன்பினர் என அழைக்கப்படுவர்''.

''சிவனடியார்களே, ஆருரன் நற்பண்புகள் பலவும் வாய்ந்தவன். அவனிடம் கல்வி கற்கும் பரிபூரணன் என்ற மாணவனின் தந்தைக்கு இருதயநோய். அதனால் பரிபூரணனைப் பாடசாலையால் மறித்து வேலையில் சேர்த்தனர். ஆரூரன் தொண்டு நிறுவனம் ஒன்றிடம் சென்று அவனது நிலையை எடுத்துக்கூறி அவர்களது குடும்பத்தினருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வித்தான். இப்போ பரிபூரணன் பாடசாலைக்குச் சென்று வருகிறான்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1399. காதுப்பொ னார்ந்த கடுக்கன் இரண்டுசேர்த்து**
**ஓதுந் திருமேனி யுட்கட் டிரண்டுடன்**
**சோதனை செய்து துவாதெச மார்க்கராய்**
**ஓதி யிருப்பார் ஒருசைவ ராகுமே.**

''சிவனடியார்களே, பொன்னாலாகிய இரண்டு காதணியும் , சிவமணிவடமாகிய உட்கட்டு இரண்டும் உடையவராகவும் வழியாறினையும் ஆசானருளால் கற்று தூய்மை பெற்று ஐந்தெழுத்தை உபதேசிக்கப்பெற்று அதை இடையறாது ஓதிக்கொண்டிருப்பவரே ஒப்பில்லாத சிறந்த சைவராவர். உபதேசத்தைப் பெற்றவர் மெய்கண்டவர் என அழைக்கப் பெறுவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1400. கண்டங்கள் ஒன்பதுங் கண்டவர் கண்டனர்**
**கண்டங்கள் ஒன்பதுங் கண்டாய் அரும்பொருள்**
**கண்டங்கள் ஒன்பதுங் கண்டவர் கண்டமாங்**
**கண்டங்கள் கண்டோர் கடுஞ்சுத்த சைவரே.**

''சிவனடியார்களே, நிலவுலகங்கள் ஒன்பது பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவ் ஒன்பது கண்டங்களையும் இறைவன் உறையும் திருப்பதிகளாகக் கண்டு அங்கு சென்று வழிபட்டு வந்தவர்கள், அங்கு விளங்கும் சிவபெருமானின் அருவத் திருமேனிகள் நான்கினையும், அருவுருவத்திருமேனி ஒன்றினையும் கண்டவராவர்.. இவர்கள் வேறுபட்டிருக்கும் கண்டங்களையும் அருட்காட்சியால் கண்டவராவர்.

இவர்கள் கடுஞ்சுத்த சைவர் என அழைக்கப்படுவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1401. ஞானி புவியெழுநன்னூ லனைத்துடன்**
**மோன திசையும் முழுஎண்ணெண் சித்தியும்**
**ஏனை நிலமும் எழுதா மறையீறுங்**
**கோனொடு தன்னையுங் காணுங் குணத்தனே.**

''சிவனடியார்களே, திருவடியுணர்வு கைவந்த ஞானிகள் ஏழு உலகங்களிலும் தோன்றிய நல்ல நூல்களைக் கற்றிருப்பர். அவர் பேசாது மௌன நிலையில் இருப்பர். அறுபத்து நான்கு கலைகளையும் உணர்ந்த அவர்கள் அறுபத்து நான்கு பேறுகளையும் பெறுவர். இவ்வுலகம் நீங்கிய ஏனைய உலகங்களை உணர்வினால் அறிந்து கொள்வர். எழுதாத மறைக்கும் உணர்வுகளால் முடிவும் காண்பர். சிவனையும், தன்னையும், உண்மை நிலையையும் குற்றமில்லாது கண்டு கொள்ளும் வாய்மையராவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 3. மார்க்க சைவம்.

### (மெய்யுணர்வுச் செந்நெறி.

**1402. பொன்னாற் சிவசாத னம்பூதி சாதனம்**
**நன்மார்க்க சாதனம் மாஞான சாதனந்**
**துன்மார்க்க சாதனந் தோன்றாத சாதனஞ்**
**சன்மார்க்க சாதன மாஞ்சுத்த சைவர்க்கே.**

''சிவனடியார்களே, பொன்னையொத்த சீலம் நோன்பு செறிவு அறிவு என்னும் நான்கு வகையான நன்நெறியும், திருநீற்றுத் துணையும் ஆகியன நன்நெறியாகிய சித்தாந்தச் சிவநெறி. பிறப்பு இறப்பு ஆகியவற்றுள்ப் புகுந்த போதும் தீய வழியில் புகாது சிவனை நினைத்திருப்பது நன்நெறியாகும். நன்நெறியில் வாழ்பவர்களே, உண்மையான சைவர் என்று அழைக்கப்படுவர்''.

‘‘சிவனடியார்களே, ஆரூரன் எல்லோருடனும் நல்லமுறையில் பழகுபவன். அவன் பெரியதொரு பாடசாலையின் அதிபராக இருப்பவன் அவனோடு சேர்ந்து வேலை செய்ய முடியாதவர்கள் தாமாகவே இடமாற்றம் கேட்டுச்செல்வர். அவ்வூரின் பெரும் பிரமுகரின் மகள் கெசல்யா. ஒழுங்காகக்கற்பிப்திதில்லை. அதனால் அவளை இடமாற்றம் செய்யுமாறு அவன் கல்வி அமைச்சுக்கு எழுதினான். பெரும்பிரமுகரின் நண்பர் கல்விப்பணிப்பாளர் கந்தசாமி. கந்தசாமி வந்து கௌசல்யா நல்ல ஆசிரியை என்று எழுதுமாறு வற்புறுத்தினார்ஆரூரன் மறுத்து விட்டான்.அதனால் அவனுக்கு தூர இடத்திற்கு இட மாற்றம் கிடைத்தது. அவன் கந்தசாமிக்குச் சொன்னான், ‘‘நான் ஒழுக்கம் தவறமாட்டேன். சிவனின் நினைவு அதுவாக இருந்தால் நான் அங்கு செல்கிறேன் என்று கூறிச் சென்று விட்டான்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1403. கேடறு ஞானி கிளர்ஞான பூபதி**
**பாடறு வேதாந்த சித்தாந்த பாகத்தின்**
**ஊடுறு ஞானோ தயனுண்மை முத்தியோன்**
**பாடுறு சுத்தசை வப்பத்த நித்தனே**

‘‘சிவனடியார்களே, கேடுகள் செய்யாத திருவடியுணர்வுகள் உள்வர்கள் ஞானிகளாவர். அவனே வேதாந்த சித்தாந்த மெய்யுணர்வு பெற்றவன். சிவ சிவ என ஓதும் மெய்யுணர்வு பெற்ற தவத்தோன். அவன் அவா இல்லாத வீடு பேற்றிற்குரியவன் அவன் தான். உண்மையான சைவக் கோட்பாடுகளைக் கைக் கொள்பவன். அவனே நிலை பெற்ற மெய்யுணர்வுச் செந்நெறியாளன்’’

‘‘சிவனடியார்களே, ஆருரன் ஒழுக்கசீலன். சைவக்கோட்பாடுகளைப் பின்பற்றும் செந்நெறியாளன். கௌசல்யா பாடசாலையில் கற்பிப்பதில்லை என்று எல்லோருக்கும் தெரியும். அவன் பெரும் சிவபக்தன். அவனுக்குத் தண்டனை கொடுத்தால் தீயவிழைவுகள் வரும் என அஞ்சிய கந்தசாமி கதிரேசனிடம் சென்று சொன்னார். ‘‘ஆரூரன் உலகைப் புரியாதவனாக வாழ்கிறான். ஒழுக்கத்திற்காகப் பெரும் பாடசாலையில் வகித்த பதவியை விட்டு விட்டுச் சென்று விட்டான். தெரியாத மாதிரிப் பலர் வாழ்ந்து தமது செயல்களில் வெற்றியடைகிறார்கள். கெசல்யா இப்போதும் அதே பாடசாலையில் தான் கற்பிக்கிறாள். அவளோடு முரண்படாவிட்டால் இடமாற்றத்தை ரத்துச் செய்யலாம்’’ என்றார். கதிரேசன் வெகுநேரத்தின் பின் சொன்னார், ‘‘அவன் சைவக்கோட்பாடுகளைக்கடுமையாகப் பின்பற்றும் மார்க்க சைவன். அவனை எக் காரணம் கொண்டும் மாற்ற முடியாது. நான் அதைச்

சொன்னால் இவ்வளவு காலமும் நான் செய்த சிவசேவை பாழாகிவிடும். இதை யாரும் அறிய வேண்டும் என்பதும் இல்லை. சிவனின் விருப்பம் எதுவோ அது நடக்கட்டும் என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1404. சுத்தம் அசுத்தந் துரியங்கள் ஓரெழுஞ்**
**சத்தும் அசத்துந் தணந்த பராபரை**
**உய்த்த பராபரை யுள்ளாம் பராபரை**
**அத்தன் அருட்சத்தி யாயெங்கும் மாமே**

''சிவனடியார்களே, அசுத்தமாகிய நனவுகளை உறக்கம் என்னும் மூன்றும், சுத்தமாகிய நனவு கனவு என்றும் இரண்டும், பேருறக்கம் உயிர்படங்கல் என்னும் இரண்டும் ஆகிய ஏழும், நிலைப்பதாகிய காரண மாயையும் நிலையாததாகிய காரியமாயையும் நீங்கிய ஆன்மாவுக்குள் இருந்து இயக்கும் சக்தியாக பராபரனாகிய திருவருளம்பை ஆருயிரோடு பொருந்தியும் உயிர்க்கு உயிராகவும் நிற்பவள். அவளே அத்தனின் அருளான அன்னை. அவளே எங்கும் நிறைந்திருந்து இயக்குபவள்''

''சிவனடியார்களே, கதிரேசன் மிகமிக நேர்மையானவர் என்று தெரிந்தபோதும் அப்பிரதேசத்தின் பெரும்பிரமுகரின் வேண்டுகோளுக்காக வந்தவர். அவர் நேர்மையான முறையில் நடவாமையால் தான் கல்வியின் தரம் மிகமிகக் குறைந்தது என்று கதிரேசனுக்குத் தெரியும். அதனால் கதிரேசன் சொன்னார், ''கந்தசாமி, ஆன்மாவிற்குள் பராபரையான திருவருளம்மை இருந்து அதை இயக்குகிறாள். அசுத்தமான ஆன்மாவுக்குள் அவள் இருக்காததால் அவர்களுக்கு நன்மை தீமை தெரிவதில்லை. தீயவற்றையே நல்லவை என்று நம்பி இயங்குகின்றனர். மற்றவர்களையும் சலுகைகளுக்காக இயங்கும்படி வற்புறுத்துகின்றனர். அதைச் சிவசக்தியான் பராபரை ஏற்கமாட்டாள் என்று கதிரேசன் சொன்னவர்'' என்றார் சுந்தரமூர்த்தி நாயனார்.

**1405. சத்தும் அசத்துந் தணந்தவர் தானாகிச்**
**சித்தும் அசித்துந் தெரியாச் சிவோகமாய்**
**முத்தியுள் ஆனந்த சத்தியுள் மூழ்கினார்**
**சித்தியு மங்கே சிறந்துள தானே**

“சிவனடியார்களே, சத்து அசத்துக்களாகிய காரணகாரிய மாயைகளை மலமற்றமையால் வேறுபடுத்தும் இயல்பு அகன்றவராவர். சிற்றுணர்வும் சுட்டுணர்வும் சிவனில் அடங்கிச் சிவனே தானாக வீற்றிருப்பவர் இறவாத இன்பமளிக்கும் இறைவியினுள் அடங்கியவராவர். அவர்களுக்குச் பெரும்பேறான திருவடி இன்பம் கிடைக்கும்”

“சிவனடியார்களே. கந்தசாமி கதிரேசனுக்குச் சொன்னார், “இந்தவிடயத்தைத் தீர்க்காது விட முடியாது. பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த பலர் ஒன்று கூடிவந்து எதிர்க்கின்றனர். மக்கள் முழுவதும் எதிர்ப்பதால் அமச்சர் உடனடியாகத் தீர்க்கும்பாடி வற்புறுத்துகிறார்” என்றுகந்தசாமி கூறும்போது கதிரேசன் சொன்னார், “ஆரூரன் சிவநினைவோடு கடமைபுரிவதால் அவன் சிவமயமாகி விட்டான். அனியாயங்கள் அக்கிரமங்கள் செய்யமாட்டான். இது சிவனின் கட்டளை. சிவனின் விருப்பப்படி நடக்கட்டும் என்றவன். நீங்களும் உங்கள் அதிகாரிகளும் ஆருரன் தான் மக்களைத் தூண்டி விட்டிருக்கிறான் என்றீர்களாம். அவன் விரைவில் சிவசேவைக்காகப் பதவியைத் துறக்கவுள்ளான். அது சிவனது கட்டளை கிடைத்ததும் நடக்கும். இறவாத இன்ப இறைவியான திருவருளம்மையின் உள்ளத்தை விரும்பும் அவன் வேறெதையும் நினைக்கமாட்டான் என்றவர்” என்றார் சுந்தரமுர்த்தி சுவாமிகள்.

**1406. தன்னைப் பரனைச் சதாசிவன் என்கின்ற**
**மன்னைப் பதிபசு பாசத்தை மாசற்ற**
**முன்னைப் பழமல முன்கட்டை வீட்டினை**
**உன்னத் தகுஞ்சுத்த சைவர் உபாயமே.**

“சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார் “உண்மையான சைவர்கள் மேற்கொள்ள வேண்டிய வழிகள் எட்டு. அவை ஆருயிர், பேரறிவுப் பெரும்பொருள், சதாசிவன், இறை, உயிர், தளை, ஆணவமலம், வீடு பேறு என்பன. இவற்றைப் பிசகாது செய்பவன் ஆருரன், ஆருயிர்களின் நன்மைக்காகவே அவன் பற்றற்றுக் கடமை செய்கிறான். தனக்கெனச் சிவனால் ஒதுக்கப்பட்டவர்களுக்குச் சேவை செய்வதே அவனது நோக்கம். மெய்ப்பொருளான சிவனை அவன் நினையாத நேரம் இல்லை. ஆணவம் அவனுக்கிருந்திருந்தால் அவன் போராடியிருப்பான். மக்கள் அவனுடன் சேர்ந்து போராடுவர். அவன் அதை விரும்பவில்லை. தனக்கு இடமாற்றம் கொடுக்கப்பட்டது தவறு என்று கல்வி அமைச்சிற்கு அவன் அறிவித்திருந்தால் மக்கள் அவனுக்காகப் போராடியிருப்பார்கள். ஆணவத்தை

அகற்றி தளைகளை நீக்கி உயிருக்கு பிறப்பைக் கொடுக்காத வீடுபேற்றை அடையவே அவன் முயல்கிறான். அதனால் நிங்கள் எந்தநடவடிக்கை எடுத்தாலும் அவன் அதை ஏற்றுக் கொள்வான் என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1407. பூரணந் தன்னிலே வைத்தற்ற வப்போதம்**
**ஆரண மந்த மதித்தானந் தத்தோடு**
**நேரென ஈராறு நீதி நெடும்போகங்**
**காரண மாஞ்சுத்த சைவர்க்குக் காட்சியே.**

''சிவனடியார்களே, ஆருயிர் சிவத்துடன் கலப்பதாகிய முற்றுணர்வு உண்டானதும் தன்முனைப்பான சிற்றுணர்வு அற்றுப்போய்விடும். அது தான் மறைமுடிவு. சிவத்துடன் கலந்து பன்னிரண்டாவது நிலையில் பெறப்படும் சிவநுகர்வை முறையாக எய்தும். இவை அனைத்தும் சுத்தசைவருக்கே ஏற்படும்''

''சிவனடியார்களே, ஆரூரன் கடமையாற்றிய பாடசாலையில் கல்வி அமைச்சின் செயலாளரின் மகள் கற்கிறாள். அவள் தனது தந்தைக்கு ஆரூரனுக்கு ஏற்பட்ட துரோகத்தைச் சொன்னதால் அவர் ஆரூரனிடம் சென்று கந்தசாமியைப் பற்றிப்புகாரிட்டால் தான் உரிய நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னபோது ஆரூரன் சொன்னான், ''ஐயா, நான் சுத்தசைவன். சிவனிடம் புகாரிடுவேனே தவிர வேறொவரிடமும் புகாரிட மாட்டேன். எனது நோக்கம் முற்றுணர்வையும் சிற்றுணர்வையும் அகற்றிச் சிவனது திருவடியை அடைய வேண்டுமென்பதே. அதற்காகத் தான் சிவநினைவுடன் வேலை செய்கிறேன். எனக்கு எந்தக் கவலையும் இல்லை. சிவனிட்ட பணியைச் செய்கிறேன். பேர்புகழ் பணம் பொருளெல்லாம் முற்றுணர்வைத் தராது. எனது கடமையைச் செய்கிறேன்'' என்றவன். அதைக் கேட்ட அவர் ஆரூரனுக்கு மூளை பிசகிவிட்டது. அதனால் தான் இடமாற்றம் வழங்கினோம் என்று கந்தசாமி சொன்னது சரியென்று சொன்னவர். சிவநினைவெய்தியவர் சிவனது நினைவுடன் செயலாற்றுவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1408. மாறாத ஞான மதிப்பற மாயோகந்**
**தேறாத சிந்தையைத் தேற்றிச் சிவமாக்கிப்**
**பேறான பாவனை பேணி நெறிநிற்றல்**
**கூறாகு ஞானி சரிதை குறிக்கிலே.**

“சிவனடியார்களே, மெய் கண்டவர்களுக்குத் திருவடியுணர்வு கைகூடுவதால் பிறப்புக்கு ஏதுவான யோகங்கள் எவையும் ஒரு பொருட்டாகத் தெரியாது. உள்ளம் தெளிவடைந்து சிவமயமாவதால் சிவனையே எண்ணி அந்நெறியில் நிலைத்து நிற்பர். அது அறிவிற்சீலம் எனப்படும் ஞானச் சரியை யாகும்.”

“சிவனடியார்களே, ஒவ்வொருவரும் மாறிமாறிவந்து ஆரூரனுக்குத் திரும்பவும் இடமாற்றத்தைக் கோருமாறு தொந்தரவு கொடுத்ததால் அவன் பணியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தான். இதை அறிந்த கந்தசாமி கதிரேசனைத் தேடிவந்து சொன்னார், “வாழ்க்கையென்றால் ஆயிரம் பிரச்சினைகள் வரும். அதற்குப் பரிகாரம் ஓய்வு அல்ல. போராடவேண்டும். இன்னும் அவன் ஐந்து வருடங்கள் வேலை செய்யலாம். அதற்குள்ப் பல பதவி உயர்வுகள் வரும். சம்பளம் உயரும்” என்ற போது கதிரேசன் சொன்னார், “உண்மை தான். இவையெல்லாம் திருவடியுணர்வு இல்லாதவர்களுக்குப் பொருந்தும். திருவடி உணர்வுள்ளவர்களுக்கு எந்த யோகங்களும் ஒரு பொருட்டாகத் தெரியாது. சிவ உணர்வுடன் மாணவர்களை உருவாக்க வேண்டும் என்பதற்காகவே அவன் தொழிலைச் செய்தான். அது முடியாதென்றவுடன் மனதை மாற்றிக் கொண்டான். அவனுக்கு மூன்று ஆண்பிள்ளைகள். மூவரும் நல்ல உத்தியோகங்களில் உள்ளனர். முன்பே ஓய்வெடுக்க விரும்பியவன். நான் விடவில்லை. சிவனை முழுமையாகநாடுவோர் அறிவிற் சீலம் எனப்படும் ஞான நிலையை அடைவர். அதைத்தான் அவன் விரும்புகிறான் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1409. வேதாந்தங் கண்டோர் பிரமமித் தியாதரர்**
**நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற யோகிகள்**
**வேதாந்த மில்லாத சித்தாந்தங் கண்டுளோர்**
**சாதா ரணமன்ன சைவர் உபயமே.**

“சிவனடியார்களே, வேதாந்தத்தின் முடிவைக் கண்டோர் முற்றுணர்ந்தவர்களாவர். அருஞ்சைவர் தத்துவம் முப்பத்தாறினதும் முடிவினைக் கண்டால் பிறவித் துன்பமில்லாத சிவயோகியராவர். உலகியல் கடந்த உணர்வு நிலையாகிய சித்தாந்தத்தினைக் கண்டோர் சைவர்களின் வழிவகையை உணர்ந்தோராவர்”

“சிவனடியார்களே, உயர் அதிகாரியான கந்தசாமியின் மனம் அல்லற்பட்டது. அவரின் பண ஆசையால் தான் இவ்வாறு நடந்ததென்று அவரது மனைவியும்

உறவினர்களும் ஏசினர். அதனால் மனம் வருந்திய கந்தசாமி, நிர்வாக சேவைப்பரீட்சையில் சித்தியடைந்து உயர் அதிகாரியாகக் கடமையாற்றும் ஆரூரினின் மூத்தமகனான முகுந்தனைச் சந்தித்துப் பேசிய போது அவன் சொன்னான் அவர் பெரும் சிவபக்தர். சிவன் தன்னோடு கதைப்பதாகக் கூறுபவர். அவரின் வழிபட்டால் தான் நானும் எனது தம்பியர் இருவரும் நல்ல உத்தியோகத்தில் இருக்கிறோம். நான் தந்தையின் சொல்லை மந்திரமாக ஏற்பவன். அவர் எதைச் செய்ய நினைக்கிறாரோ அதை அவர் செய்யட்டும். அதில் நான் குறுக்கிட மாட்டேன். அவர் சிவயோகி. முழுமையான சைவர் என்றவன்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1410. விண்ணினைச் சென்றணு காவியன் மேகங்கள்**
**கண்ணினைச் சென்றணு காப்பல காட்சிகள்**
**எண்ணினைச் சென்றணு காம லெணப்படும்**
**அண்ணலைச் செண்றணு காபசு பாசமே**

''சிவனடியார்களே, வானத்தை இடமாகக் கொண்டு பொழிகின்ற மேகங்கள் வானத்தை ஒட்டாதது போலக் கண்ணால் காணப்படும் பல்வேறு விதமான காட்சிப் பொருட்களும் கண்ணினைச் சென்று பொருந்தாது. அதுபோல நாடுதலாகிய பாவனைக்கு அப்பாற் பட்ட சிவபெருமானை யான் என்னும் சிற்றறிவும் எனது என்னும் சுட்டறிவும் ஆகிய பசுபாசங்கள் சென்றடையாது.''

''சிவனடியார்களே, கந்தசாமிக்கு முகுந்தன் சொன்னான், ''மேகம் மழையைப் பொழிந்தாலும் அது வானத்தைத் தொட்டதில்லை. கண்கள் பல காட்சிகளைக் கண்டாலும் அவையும் கண்ணைத் தொட்டதில்லை. எம்மை வளர்த்து ஆளாக்கி இந்நிலைக்குக் கொண்டவந்தபோதும் அவை யாவும் சிவனது திருவருள் என்பாரே தவிரத் தனது செயல்கள் அல்ல என்பார். நாம் அப்பாவுக்கு அருகில் இருப்போம். அவர் சிவனைப்பற்றிச் சொல்வார். சிவனைப்பற்றி அறிவோர் சிவசிந்தனையாளர். அவர்கள் தப்பித்தவறிக் கூட ஒழுக்கமற்ற செயல்களைச் செய்யமாட்டாரகள் என்பார். எனது தம்பி ஒருபெண்ணை விரும்பினான். அதை அம்மா அவருக்குச் சொன்னபோது சிவனது சித்தம் அதுவென்றால் நடத்துங்கள் என்றார். எனக்குத் திருமணமாகவில்லை. தம்பியின் பெண்யார்? என்னசாதி, யாரின் உறவினர்? இதைப்பற்றி அவர் இன்றுவரை கேட்கவில்லை. எனக்குத் திருமணமாகவில்லை என்று அம்மா கவலைப்பட்டால், சிவன் முடித்து வைப்பான் பொறுத்திரு என்பார். அப்படியானவருடன் எப்படி நீங்கள் சொல்வதைக் கதைப்பது'' என்று முகுந்தன்

கேட்டவன். அதற்குக் கந்தசாமி பதில் கூறவில்லை'' என்றார் சந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1411. ஒன்றும் இரண்டும் இலதுமாய் ஒன்றாக**
**நின்று சமய நிராகார நீங்கியே**
**நின்று பராபரை நேயத்தை பாதாத்தாற்**
**சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே**

''சிவனடியார்களே, பொன்னும் மண்ணும் ஒரு தன்மையானவை என்ற எண்ணமும், இருளும் ஒளியும் வெவ்வேறு என்னும் தன்மை இல்லாமலும், உடல் உயிர்களுக்குச் சூரியனது அறிவொளி போலவும் கலந்து நின்று திருவருளால் அன்பு செய்யப்படும் சிவனை சத்திநிபாதமாகிய திருவருள் வீழ்ச்சியால் சென்று சிவனது பெருவாழ்வைப் பெற்றுப் பேரின்பமடைதல் சித்தாந்தப் பெரும் பேறாகும்''

''சிவனடியார்களே, கந்தசாமிக்கு முகுந்தன் சொன்னான், ''அப்பா இப்போது முன்போலல்ல. உணவைக் குறைத்து விட்டார். பழங்களையும் இலைகுழைகளையும் விரும்பி உண்கிறார். உடையைத்தவிர வேறு எதுவும் அவருடலில் இல்லை. அவருக்கு மண்ணும் ஒன்று தான், பொன்னும் ஒன்றுதான். அம்மாவை அம்மை என்கிறார். அவருக்கு இரவுபகல் தெரியாது. நடு இரவில் சூரியன் வானத்தில் தெரிகிறான் என்று சொல்லி வெளியே செல்கிறார். சிவனை அடைவது தான் எனது இலட்சியம், பேரின்பம், பெரும்பேறு என்கிறார். அவரிடம் எனது திருமணம் பற்றியே பேசமுடிவதில்லை. அம்மா ஒரு பெண்ணைப்பார்த்திருக்கிறா. நிட்சயமாகிவிட்டது என்றால் சிவன் செயல் என்பர். அவரோடு எப்படி அவரது தொழிலைப் பற்றிக் கதைப்பது என்று கேட்டவன்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 4. கடுஞ்சுத்த சைவம்

### (மெய்கண்டார் செந்நெறி)

**1412. வேடங் கடந்து விகிர்தன்றன் பான்மேவி**
**ஆடம் பரமின்றி ஆசாபா சஞ்செற்றுப்**

**பாடொன்று பாசம் பசுத்துவம் பாழ்படச்**
**சாடுஞ் சிவபோ தகர்சுத்த சைவரே.**

“சிவனடியார்களே, செந்நெறிக்குக் கூறப்பட்ட திருக்கோலங்கள் எதுவும் இல்லாமல், கருத்தாலன்றிக் கருவியால் செய்விக்கும் தன்மை இல்லாத முழுமுதற்சிவனைப் பொருத்தி ஆரவாரம் இல்லாமல் காமம் வெகுளி மயக்கம் மூன்றினது நாமங்களையும் கெடுத்து, துன்பத்தினை விளைவிக்கும் பசை மலம்தன் முனைப்பும் அற்றொழிய திருவடி உணர்வு வந்து துணையாகும் மெய்யுணர்வினர் சிவபோதகர் எனப்படுவர். இவர்களே உண்மைச் சைவராவர்.”

“சிவனடியார்களே, ஆச்சிரமத்திற்கு நான் வந்த போது ஒருவர் வந்தார். அவருக்கு இருபத்தைந்து வயதிருக்கும். அவரது பெயர் நமசிவாயகம். அவர் ஒரு பெண்ணைக் காதலித்தார். அவளும் உயிருக்குயிராகக் காதலித்தாள். அவள் மிகவும் வசதி குறைந்தவள். ஆனால் நல்ல அழகி. நமசிவாயகம் நல்லதொழிலில் இருந்தான். ஆனால் வசதி குறைந்தவன். அந்த ஊரவனான பாலசிங்கம் பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன் வெளிநாட்டுக்குச் சென்று திரும்பி வந்திருந்தான். அவன் நமசிவாயகம் காதலிக்கும் சுகிர்தாவின் அழகில் மயங்கி அளைத் தன்னைத் திருமணம் செய்யும்படி கேட்டான். அவள் முதலில் மறுத்தபோதும் பின் பெற்றோரின் வற்புறுத்தலுக்காக அவனைத் திருமணம் செய்து கொண்டு வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டாள். அந்தத் துயரம் தாங்கமுடியாது நமசிவாயகம் ஆச்சிரமத்திற்கு வந்து விட்டான். எமது குருவின் உபதேசம் அவனைக் கவர்ந்ததால் அவன் அவரின் சொற்படி சிவனைத் தியானிக்கத் தொடங்கினான். ஆச்சிரமத்தில் இருந்து அவன் வீட்டுக்குச் செல்லாததால் வீட்டார் வந்து அவனை வீட்டுக்குக் கூட்டிச் செல்ல முயன்றனர். அவன் செல்லவில்லை. அதனால் அவனது வேலையும் பறிபோனது. அதன் பின் அவன் சிவனின் நினைவாகவே இருந்தான். அவன் யாருடனும் பெரிதாகக் கதைப்பதில்லை. ஒருநாள் தனது கதையைச் சொன்னான். காமவசப்பட்ட நான் அதனால் அவள்மீது மயக்கம் கொண்டேன். அவளது பிரிவைத் தாங்க முடியாத கோபத்தால் இங்கு வந்தேன். இப்போ எனது உடல் மரத்து விட்டது. சிவனின் நினைவைத்தவிரவேறு எந்த நினைவும் மனதில் இப்போது இல்லை. சுகிர்தாவின் நினைவும் இல்லை. மனிதர்கள் ஆசைப்படுவது இயற்கை. ஆசையால் தான் துன்பங்கள் வருகின்றன. அவள் பணத்திற்கு ஆசைப்பட்டுச் சென்றுவிட்டாள். அது என்னுடைய விதி. அதற்காக என்னால் இப்போ கவலைப்பட முடியவில்லை. சிவனது நினைவாகிச் சிவப்போதகராகப் போகிறேன் என்று சொன்னவன். பற்றுக்கள் எதுவும் இல்லாது சிவநினைவோடு இருப்பவர்களைச் சிவப்போதகர் என்று சொல்வார்கள்.

நமசிவாயகம் அவன் சொன்னபடி சிவப்போதகர் தான்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1413. உடலான ஐந்தையும் ஓராறும் ஐந்தும்**
**மடலான மாமாயை மற்றுள்ள நீவப்**
**படலான கேவல பாசந் துடைத்துத்**
**திடமாய்த் தனையுறள் சித்தாந்த மார்கமே.**

''சிவனடியார்களே, ஐம்பூதங்களிலானான உடலும், ஆறுகோடி மாயாசக்திகள் என்று சொல்லப்படும் செருக்கு, சினம், சிறுமை, இறவல். மாண்பிறந்த மானம், மானாவுகை ஆகிய ஆறுவகைக் குற்றங்களும், ஐம்புலன்களும் இவற்றிற்கெல்லாம் காரணமான மலத்தையும் சிவனருளால் அகற்றி உறுதியாகத் தன்னை உணர்ந்து சிவனை அடைதல் சித்தாந்த வைசர்களது குறிக்கோளாகும் என்று நமசிவாயகம் எனக்குக் கூறுவார். அவர் ஆச்சிரத்திற்கு வந்த புதிதில் ஒரு பைத்தியக்காரனைப் போலக்கதைப்பார். காலப்போக்கில் அவரது மனம் சிவனோடு ஒன்றி விட்டது. ஒருநாள் அவர் சொன்னார், ''காதலைப்போல இன்பம் தருவது உலகில் வேறு எதுவும் இல்லை. அது போலத்துன்பம் தருவதும் எதுவும் இல்லை. உண்மையான காதல் உயிரை உய்யவைக்கும். பொய்யான காதல் எழு ஜென்மத்திற்கும் துன்பத்தைத் தரும். உண்மையான காதலை எந்த ஒரு உயிர் மீதும் வைத்தாலும் அது எம்மைச் சுற்றியே நிற்கும். அதைச் சிவன் மீது வைத்தால் நித்திய இன்பம் உண்டாகும். பிறப்பில்லை. ஊழிக்காலத்தின் பின்பும் பேரின்பநிலை தான் உண்டாகும். இதற்காக நான் அவளுக்கு நன்றி சொல்லல் வேண்டும். அவள் தான் எனக்குச் சிவனை அறிமுகம் செய்து வைத்தவள். இப்போ நான் சித்தாந்த சைவராகிவிட்டேன். என்றவர் அதன்பின் பலவருடங்கள் ஆச்சிரமத்தில் இருந்தபோதும் அவர் அவளைப் பற்றி கதைக்கவில்லை'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1414. சுத்தச் சிவனுறை தானதில் தோயாமல்**
**முத்தர் பதப்பொருள் முத்திவித் தாமூலம்**
**அத்தகை யான்மா அரனை அடைந்தாற்றாற்**
**சுத்த சிவமாவ ரேசுத்த சைவரே.**

“சிவனடியார்களே. அவர் என்னோடு மனம் விட்டுகதைப்பார். மக்களுக்குப் பிரசங்கமும் செய்வார். ஒருநாள் அவர் பிரசங்கம் செய்யும் போது நான் கேட்டுக்கொண்டிருந்தேன். அவர் சொன்னார், “அடியார்களே, மெய்ப்பொருளான சிவபெருமான் உலகம் உய்வதற்காக உரைத்தருளிய தமிழ் ஆகமத்தில் சொல்லப்பட்ட தூமாயையின் நிலைக்களங்களாகிய உலகப்பற்றுக்களில் விருப்புற்று துன்பப்படாமல், ஞானிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவைந்தெழுத்தை ஓதி உணர்ந்து மெய்யுணர்வினைப் பெற்றுச் சிவனின் திருவடியை அடையுங்கள். அதனால் அவனது திருவடியை அடைவோர் உண்மையான சிவனாக இருப்பர். அவர்தான் சுத்தசைவர். சுத்த சைவராகி விட்டால் உலகம் பேரின்பமயமாகத் தோன்றும். துன்பங்களைக் காணமுடியாது என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1415. நானென்றும் தானென்றும் நாடிநான் சாரவே**
**தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந்**
**தானென்று நானென்ற தத்துவ நல்கலால்**
**தானென்று நானென்றுஞ் சாற்றகில் லேனே**

“சிவனடியார்களே, நமசிவாயம் பேசும்போது மக்கள் விரும்பிக் கேட்பார்கள். அவரது பேச்சை நானும் விரும்பிக்கேட்பேன். ஒருநாள் அவர்பேசும் போது சொன்னார், “அடியார்களே உயிர்கள் உலகப் பற்றில் திளைத்திருப்பதால் நான் என்ற நினைப்பும், சிவனைத் தான் என்ற நினைப்போடும் வாழும். இந்நிலை அற்றுப் போகவேண்டும் அவ்வுயிர் சிவனைச் சார்ந்தால் நான் என்ற நினைப்பும் தான். என்ற நினைப்பும் அற்றுப் போய்விடும். சிவன் தானல்ல நான் என்ற எண்ணம் வந்தால் சிவனது திருவடி இன்பத்தை உயிர் நாடும் என்று ஆச்சிரமத்தில் இருக்கும் குரு அடிக்கடி சொல்வார். சுகிர்தா என்ற பெண்ணின் உடலேதஞ்சம் என்றிருந்த நான் அவளின் உறவைப் பெற்றதாலும் இளமையிலேயே நல்லதொரு உத்தியோகத்தைப் பெற்றதாலும் நான் தான் பெரியவன் என்று நினைத்து வாழ்ந்தேன். அவள் புறக்கணித்து விட்டுச் சென்றதால் ஆச்சிரமத்திற்கு வந்தேன். வந்தும் எனது மன அழுத்தம் குறையவில்லை. இதை அறிந்த குரு எனக்குப் பயிற்சி தந்தார். அதனால் நானென்ற அகங்காரத்தை நீக்கித் தான் என்ற சிவனின் பெருமைகளை உணர்ந்தேன். அது அகன்றதும் மனம் திருவடி இன்பத்தைத் தூய்க்க விரும்பியது. அதனால் இன்று பேரின்பமடைகிறேன். முன்பு எதிலும் கிடைக்காத இன்பம் இப்போது சிவனின் நினைப்பால் கிடைக்கிறது என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1416. சாற்றரி தாகிய தத்துவஞ் சித்தித்தால்**
**ஆற்றாரி தாகிய ஐந்தும் அடங்கிடும்**
**மேற்றிகழ் ஞானம் விளக்கொளி யாய்நிற்கும்**
**பாற்பர சாயுச்சிய மாகும் பதியே.**

‘‘சிவனடியார்களே, அண்மையில் ஒருநாள் நமசிவாயத்தின் நண்பன் மகேந்திரன் நமசிவாயத்தைக் காண ஆச்சிரமத்திற்கு வந்தான். முன்பு இருவரும் நல்ல நண்பர்கள். இருவரும் இருவெவ்வேறு பெண்களைக் காதலித்தனர். மகேந்திரன் பெண்ணாசை உள்ளவன். அவன் தான் காதலித்தம பெண்ணோடு செய்யும் குறும்புகளை நமசிவாயகத்திற்குச் சொல்லுவான். இப்போது அவன் மனைவியுடன் கோவித்துக் கொண்டு கடந்த இரண்டு வருடமாகப் பிரிந்திருக்கிறான். தனது துயரம் மிகுந்த கதையைக் கூறு ஆறுதலடையவே அவன் ஆச்சிரமத்திற்கு வந்தான். நமசிவாயம் அவனை ஒரு பொருட்டாக மதித்து வரவேற்கவில்லை. அவனாக வலிய வந்து பேசியபோது அதைக்கேட்காது சொன்னான், ‘‘மகேந்திரா, மனதை மெய்யுணர்வாகிய சொல்லவொண்ணாத திருவருளில் அடக்கினால் மெய்மை கைகூடும். அது கைகூடினால் ஐம்புலன்களும் திருவருளின் அருளால் அடங்கிவிடும். அதன்பின் திருவடிப் பேருணர்வான விளக்கொளி மனதில் சுவாலிக்கும் அந்நிலை வந்தால் தான் ஆகுதலாகிய பரசாயுச்சியபேறு கிடைக்கும். அதனால் உனது மனதைச் சிவன் பால் இருந்து ஐம்புலன்களும் தறிகெட்டலைவதால் தான் உண்மையான நிலைபுரியாது. மக்கள் துன்பப்படுகின்றனர். நீ துன்பப்படுவதற்கும் அது தான் காரணம். சிவனை மனதில் இருத்தித்தியானம் செய். ‘‘நமசிவய’’ என்ற தமிழ் மந்திரத்தை ஓது. அப்போது உண்மை எது பொய் எது வென்று தெரியும் அப்போது தவறு செய்வது யார் என்று புரியும். உன்னில் தவறிருந்தால் மன்னிப்புக்கேள். உனது மனைவியில் தவறிருந்தால் எடுத்துச் சொல். அவள் அதை ஏற்காவிட்டால் முடிவை நீ எடு என்றவர்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 5. சரியை

### (சீலம்)

**1417. உயிர்க்குயி ராய்நிற்றல் ஒண்ஞான பூசை**
**உயிர்க்கொளி நோக்கல் மகாயோக பூசை**
**உயிர்ப்பெறு மாவா கனம்புறப் பூசை**
**செயிற்கடை நேசஞ் சிவபூசை யாமே**

‘‘சிவனடியார்களே, மகேந்திரனுக்கு நமசிவாயம் சொன்னார், ‘‘சிவபெருமான் அனைத்து உயிர்களுக்குள்ளும் உயிர்க்கு உயிராக நிற்கும் உண்மையை அவனருளால் கண்டு கொள்ளல் வேண்டும். அது தான் சிறந்த அறிவு வழிபாடாகும். சிவன் உயிரின் உள்ளே அறிவொளியாக நின்று அறிவைமேம்படுத்துபவன். இதை உணரல் செறிவு வழியாகும். புறத்திருவின்கண் உயிர்க்குயிராய் நிற்கும் சிவபெருமானை ஆவாகனம் முதலாகச் சொல்லப்படுகின்ற அழைத்தல், இழைத்தல், குழைத்தலாகிய தொண்டினைத் திருமுறை வழியாகச் செய்யின் அது நோன்பு வழிபாடாகிய புறப்பூசையாகும். பூசையின் முடிவில் சிவபெருமானை அகத்தே அமைத்தல் நுழைத்தல் எனப்படும். நீ உன் உயிருள் இருக்கும் சிவனையும் உணரவில்லை. அவளின் உயிரினுள் இருக்கும் சிவத்தையும் உணரவில்லை. அதனால் தான் துன்பப்படுகிறாய். துன்பங்கள் தாமாகத் தேடிவருவதில்லை. நாம் தாம் வரவழைக்கிறோம். சிவ நினைவில்லாத அசுத்தமான மனத்துள் மலங்கள் தான் இருக்கும். அவை நல்லவற்றை எண்ணாது. நல்லவற்றைச் செய்யவும் விடாது. நீமுதலில் சிவனை மனதில் இருத்து. எல்லாம் நல்லதாக நடக்கும் என்றவர்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1418. நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந்**
**தேடித் திரிந்து சிவபெரு மான்என்று**
**பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்**
**கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே.**

‘‘சிவனடியார்களே, கதிரேசனுக்கும் நல்லை நாதனுக்கும் கால் நடையாகச் சென்று திருக்கோவில்களைத் தரிசிக்க வேண்டுமென்ற ஆசை திடீரென்று வந்தது. அதை என்னிடம் வந்து சொன்னார், ‘‘சுவாமி, சிவபெருமான் தனது மெய்யடியார்கள் உய்யுமாறு ஆண்டாண்டு வெளிப்பட்டு அருளுகின்ற திருநாடு, திருநகரம், திருக்கோவில் முதலியவற்றை அன்புடன் தேடிச்சென்று இடையறாது தொழுதல் வேண்டும். அவ்வாறு தொழுபவர்களுக்கு அகம்புறமாய் இன்றியமையாதன பாடுதல் பணிதல் தொண்டுகள் செய்தல் ஆகியன என்பது உங்களுக்குத் தெரியும். அதனால் அடியார்களுடன் சில கோவில்களுக்குச் சென்றுவர விரும்புகிறேன். தாங்களும் வருதல் வேண்டும். அங்கு சென்று கோவிலின் சூழலைச் சுத்தப்படுத்தி அங்கு

குடிகொண்டிருக்கும் இறைவனைப் பாடித்துதிக்க வேண்டும்'' என்றார். நான் சம்மதித்தேன்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1419. பத்தர் சரிதை படுவோர் கிரியையோர்**
**அத்தகு தொண்டர் அருள்வேடத் தாகுவோர்**
**சுத்த வியமாதி சாதகர் தூயோகர்**
**சித்தர் சிவஞானஞ் சென்றெய்து வோர்களே.**

''சிவனடியார்களே, கதிரேசனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக அடியவர்களை அழைத்துச் சொன்னேன், ''அடியார்களே, சிவநெறியிற் செல்வோர் பக்தர்கள். நோன்பு நெறியில் செல்வோர் தொண்டர்கள். இயற்கை இயமாகி எண்ணுறுப்புங் கைக்கொண்டோர் சிவயோகர்கள். சிவனை மறவாத சிந்தையை உடையவர்கள் சிவஞானிகள். இவர்களே சித்தராவர். இவர்களது முடிபே சித்தாந்தம். இந்நால்வரும் திருவெண்நீறு, சிவமணி, திருவைந்தெழுத்து முதலியவற்றை அணிபவராவர். இதில் நீங்கள் பக்தர்கள். தொண்டர்கள். அவர்கள் சரியைத் தொண்டுகளைச் செய்தல் வேண்டும். அதனால் தான் சிவ உணர்வான மெய்யுணர்வு உண்டாகும். பெரியவரான கதிரேசன் கோவில்களுக்குச் சென்று தொண்டாற்ற விரும்புகிறார். அவருடன் நானும் கூடச் செல்கிறேன். தொண்டு செய்யவிரும்பும் பக்தர்களும் தொண்டர்களும் கூடவரலாம் என்றேன். நூற்றுக்கு மேற்பட்டோர் வருவதாக ஒப்புக் கொண்டனர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1420. சார்ந்தமெய்ஞ் ஞானத்தோர் தானவ னாயினோர்**
**சேர்ந்தவெண் யோகத்தர் சித்தர் சமாதியோர்**
**ஆய்ந்த கிரியையோர் அருச்சனை தப்பாதோர்**
**நேர்ந்த சரியையோர் நீள் நிலத்தோரே.**

''சிவனடியார்களே, திருவடியுணர்வு கைவரப் பெற்ற சிவஞானியர் சிவநினைவில் அடங்கிச் சிவனாக இருப்பர். எண்வகைத்தவத்தால் சிவயோகத்தை மேற்கொண்டவர் சிவனது திருவுருவினைப் பெறுவர். நோன்பினர் என அழைக்கப்படும் கிரியைகள் செய்வோர். சிவன் அணுக்கராய் இருப்பர். சீலத்தாராகிய சரியைத்

தொண்டினைச் செய்வோர் சிவ உலகினில் இருப்பர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1421. கிரியை யோகங்கள் கிளர்ஞான பூசை**
**அரிய சிவனுரு அமரும் அரூபந்**
**தெரியும் பருவத்துத் தேர்ந்திடும் பூசை**
**உரியன நேயத் துயர்பூசை யாமே.**

''சிவனடியார்களே, நோன்பு செறிவு அறிவு என்னும் முப்பருவத்தும் அழியாத பயன்களைக் கொடுக்கும் என ஆராய்ந்து செய்யும் சிவபூசை, தலைவனான சிவனுக்காகச் செய்யும் உயர்ந்த அரிய பூசையாகும். இச்சிவபூசையை நோன்பினர் செறிவினர் ஆகிய இருவரும் பற்றுடன் செய்வர். அறிவானவர்கள் உணர்வில் தோன்றும் பற்றுக் கோடில்லாத அறிவுருவில் தொழுவார்'' ஒன்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1422. சரியாதி நான்குந் தருஞான நான்கும்**
**விரிவான வேதாந்த சித்தாந்த மாறும்**
**பொருளா னதுநந்தி பொன்னகர் போந்து**
**மருளாகு மாந்தர் வணங்கவைத் தானே.**

''சிவனடியார்களே, சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நன்நெறி நான்கினும் தனித்தனி முடிந்த முடிபாகக் கொள்ளப்படும் அறிவு நிலையாகிய ஞானம் நான்கு. வேதாந்த நெறி ஆறு. அவை கபாலம், காணாதம், பாதஞ்சலம், அச்சபாதம், வியாசம் சைமினியம் என்பனவாகும். இவை ஆறும் புறச்சமயங்களாகும். சித்தாந்த நெறி ஆறு, அவை வைரம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம் சைவம் என்பன. இவை ஆறும் அகப்புறச் சமயங்களாகும். சிவ உலகத்தில் இருந்து நந்தியெம்பெருமானின் குன்றா அருளால் குருவடிவாகத் தோன்றி அறியாமையால் துன்பப்படும் மக்களுக்கு மெய்ப்பொருள் உணர்வு தோன்றுமாறு சீலம் முதலிய நன்னெறி நான்கினையும் அருள்புரிந்து முழுமுதற் சிவனை வழிபடுமாறு அமைத்துள்ளனன்''. என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1423. சமையம் மலசுத்தித் தன்செயல் அற்றிடும்**
**அமையும் விசேடமும் அரன்மந் திரசுத்தி**
**சமைய நிருவாணங் கலாசுத்தி யாகும்**
**அமைமன்னு ஞானமார்க் கம்அபி டேகமே.**

‘‘சிவனடியார்களே, திருமுறைப்படி செய்யப்படும் சிவதீக்கை மூன்று வகைப்படும் அவை சமயம், விசேடம், திருவாணம் என மூவகைப்படும். சமய தீக்கை என்பது நன்னெறிக்குத் தடையாக உள்ள தீமைகளை விளக்கி உண்மைகளை உணர்த்தி அவற்றைத் தூய்மைப்படுத்தலாகும். அத்துடன் சிவபெருமானின் துணையின்றி எவராலும் எச்செயலையும் செய்யமுடியாது என்பதை உணர்த்தலுமாகும். விசேட தீக்கையாவது நந்தியின் நாமமான திருவைந்தெழுத்தை இடையறாது கணிப்பதால் எல்லாவகையான அகப்புறத் தூய்மையை எய்துவனவாகும். நிருவாண தீக்கையாவது அறுவை வழியாகிய மந்திரம், பதம், வன்மை, தத்துவம், புவனம், கலை என்பவற்றைத் தூய்மைப்படுத்தலாகும். இவற்றைத் தூய்மைப்படுத்தல் என்பது , பயன்கருதிச் செய்யப்படும் செயல்கள் அனைத்தும் தொழில் எனப்படும். சிவனின் அடிமை என்ற நினைப்புடன் செய்யப்படுவன அனைத்தும் தொண்டு எனப்படும். ஆருயிர்கள் பயன்கருதித் தொழிலாகச் செய்த தொழில்கள் இவ் ஆறு வகையினுள் அடங்கிக்கிடக்கும். அவற்றை மாற்றி பயன்கருதிச் செய்த அனைத்தும் தொண்டாக மாற்றுதலே தூய்மைப் படுத்தலாகும்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 6. கிரியை

**(நோன்பு)**

**1424. பத்துத் திசையும் பரமொரு தெய்வமுண்**
**டெத்திக் கிலரில்லை என்பதின் அமலர்க்கு**
**ஒத்துத் திருவடி நீழல் சரணெனத்**
**தத்தும் வினைக்கடல் சாராது காணுமே.**

‘‘சிவனடியார்களே, பத்துத்திக்குகளிலும் முழுமுதற்சிவன் வீற்றிருக்கிறான். அவன் இல்லாத இடமில்லை என்று அருள் நூல்கள் கூறுகின்றன. சிவனை எளிதாகக் கண்டு கொள்ள கொல்லாமை, ஐந்தடக்கல், பொறுமை, பேரிரக்கம், நல்லறிவு, மெய்த்தவம், அன்பு என்பன அகத்தே அமைதல் வேண்டும். புறத்தே நறுமலர்களைச் சூடி, திருமுறைகளைப் படித்து, சிவனது திருவடி நிழலே மாறாப் புகலிடம் என்று நினைத்து அர்ச்சித்தல் வேண்டும். அவ்வாறு அர்ச்சிப்பவர் ஏறு வினையாகிய ஆகாமியம் சாராது’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1425. கானுறு கோடி கடிகமழ் சந்தனம்**
**வானுறு மாமல ரிட்டு வணங்கினும்**
**ஊனினை நீக்கி உண்பவர்க் கல்லது**
**தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே.**

“சிவனடியார்களே, ஆச்சிரமத்திற்குப் பலர் வந்து போவார்கள். ஒவ்வொருவரிடமும் ஏராளமான மூடநம்பிக்கைகள் இருக்கும். எமது ஆச்சிரமத்திற்கு வந்த தனபாலசிங்கம் என்றொருவர் சொன்னார், “சுவாமி, நான் மூன்று வருடங்களாக ஆச்சிரமத்திற்கு வந்து பிரார்த்தனை செய்கிறேன். கோவிலுக்குப் பூக்கள் பறித்தும் மாலைகள்கட்டியும், தொண்டு துரவுகள் செய்தும் வருகிறேன். ஆனால் சிவனருள் கிடைக்கவில்லை. எனக்குவரும் துன்பங்களுக்கும் குறைவில்லை. தாங்கள் பிரசங்கங்களின் போது கூறுபவற்றையே நான் செய்து வருகிறேன்” என்றார். எனக்கு அவரைத் தெரியுமே தவிர அவரது நடத்தைகள் பற்றித் தெரியாது. அதைக் கேட்டுக்கொண்ட கதிரேசன் சொன்னார், “தனபாலசிங்கம், நீ சொல்வதெல்லாம் சரி. ஆனால் செய்வது சிவத்துரோகம். வெள்ளிக்கிழமை பூப்பறித்துக் கொடுக்கிறாய். மாலை கட்டிக் கொடுக்கிறாய். மறுநாள் உண்பதற்காகவும் விற்பனை செய்வதற்காகவும் ஆடுமாடுகளை வாங்கி வெட்டி உரித்து விற்பனை செய்கிறாய். சிவனுக்கு உயிர்களைக் கொல்வதும், அதன் மாமிசத்தை உண்பதும் பிடிக்காது. கொல்லாமாலும் கொன்ற மாமிசத்தை உண்ணாமலும் வாழும் திருவுடையவர்களின் மனதைத் தான் சிவன் விரும்புவார். உன்போன்றோர் பிறந்திறந்து துன்பத்தைபோல அனுபவிப்பீர்கள். நீ செய்யும் தொழிலை விடும் வரை உன்னைத் துன்பம் விடாது என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1426. கோனக்கன் றாயே குரைகழல் ஏத்துமின்**
**ஞானக்கன் றாகிய நடுவே யழிதரும்**
**வானக்கன் றாகிய வானவர் கைதொழும்**
**மானக்கன் றீசன் அருள்வள்ள மாமே.**

“சிவனடியார்களே, முழுமுதற்கடவுளான சிவபெருமான் வேண்டுவாரின் வேண்டும் திருவுருவுடன் தோன்றுபவர். அவரது தாயாக விளங்குபவள் திருவருளம்மை. அத்திருவருளம்மையின் ஒலிக்கும் சிலம்பணிந்த திருவடியைத் தொழுதால் அவள் மெய்யுணர்வு தரும் வித்தாகத் தொழுபவரின் உள்ளத்தில் எழுந்தருளி அருள்வாள். அதனால் சிவபெருமானின் பேரின்பப்பெருவளம் மிகுந்து வந்தடையும்.

அச்சிவபெருமான் வானுலகப் பசுக்களான தேவர்களால் என்றும் தொழப்படுவன். கதிரேசன் சொன்னதைக் கேட்ட தனபாலசிங்கம் சொன்னான், ‘‘சுவாமி, நான் செய்வது பெரும்பாதகம் என்று எனக்குத் தெரியும். எனக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். பெற்றோரும் என்னுடன் தான் இருக்கின்றனர். போதிய வருமானமில்லை. வேறு தொழில்களும் இல்லை நான் என்ன செய்வது?’’ என்று அழுதான். அதற்குக் கதிரேசன் சொன்னார், ‘‘இந்த நீண்டு விரிந்த உலகில் தொழிலா இல்லை. உனது கொலைத் தொழிலைவிட்டு விட்டு எனது தென்னந்தோப்பில் வேலை செய். மாதம் இருபதினாயிரம் ரூபா தருகிறேன். செய்ய விரும்பினால் கொலைத் தொழிலையும் மாமிசம் உண்பதையும் விட்டு விட்டு சிவபெருமானின் தாயாகிய திருவருளம்மையை வணங்கு. அவளை வணங்கினால் சிவனும் உனக்கு அருள்வார். உனது குடும்பமும் முன்னேறும் என்றவர்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1427. இதுபணிந் தெண்டிசை மண்டலம் எல்லாம்**
**அதுபணி செய்கின் றவளொரு கூறன்**
**இதுபணி மானுடர் செய்பணி யீசன்**
**பதிபணி செய்வது பத்திமை காணே.**

‘‘பதிரேசன் சொன்னார், ‘‘தனபாலசிங்கம், சுவாமி சொன்னபடி திருவருளம்மையை வணங்கி, அவளை ஏற்றுக் கொண்டு எட்டுத்திசைகளால் சூழப்பட்ட உலகம், உடல், பொருட்கள், நிறைமண்டலங்களை யெல்லாம் படைத்து, அளித்து, அழிந்து, மறைத்து அருள் செய்யும் சிவன், அம்மையைத் தனது இடப்பாகத்தில் வைத்திருக்கிறான். அத்தகைய சிவனுக்கு நீ பணி செய்தாயேயானால் நீ அவனின் அருளைப்பெறலாம். இச்சிவப்பணியை நோன்பாளர்களாகிய கிரியையினர் செய்வர். உனது மகள் கல்வியில் திறமைசாலி. அவளின் எதிர்காலத்தைச் சிந்தித்துப் பார். நீ ஒரு கசாப்பு வியாபாரியென்பதால் நல்லவர்கள் எவரும் துணைக்கு வரார். நீ நல்லவனாக வாழவேண்டும் என்பதற்காகவே இந்த உதவியை நான் உனக்குச் செய்கிறேன். விருப்பமானால் இன்றேவா. ஆயிரக்கணக்கான உயிர்கள் சாபமிடும் தொழிலானது உனது குடும்பத்தைத் துன்புறுத்தும். அதனால் அதை விட்டுவிடு என்றவர். அதைக்கேட்ட தனபாலசிங்கம் எதுவும் பேசாது சென்று விட்டான்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1428. பத்தன் கிரியை சரியை பயில்வுற்றுச்**
**சுத்த அருளால் துரிசற்ற யோகத்தில்**
**உய்த்த நெறியுற் றுணர்கின்ற ஞானத்தாற்**

**சித்தங் குருவரு ளாற்சிவ மாகுமே.**

“சிவனடியார்களே, தனபாலசிங்கம் மறுநாள் தனது மனைவியுடனும் பிள்ளைகளுடனும் ஆச்சிரமத்திற்கு வந்தான். அவனது மனைவி சொன்னாள், “ஐயா, எனது தந்தை சிவபூசை செய்பவர். இவரோடு ஒன்றாகப் படித்தமையால் இவரைக் காதலித்து இவரோடு சென்று விட்டேன். திருமணமான புதிதில் நன்றாக வாழ்ந்தவர் பின் குமார சாமியோடு சேர்ந்து குடிகாரனானார். பின் கொலை காரனானார். அதனால் எனது உறவினர்கள் எவரும் எம்மோடு தொடர்பு வைப்பதில்லை. தினமும் நான் இவருக்கு ச் சிவனைப் பற்றிச் சொல்வேன். இன்று தான் சிவன் கண் திறந்துள்ளார். இவர் இனி உங்கள் பொறுப்பு. அவரைத் திருத்திச் சிவபக்தர் ஆக்குங்கள்” என்று கூறிக் கதிரேசனின் பாதங்களைப் பிடித்து அழுதாள். தனபாலசிங்கத்தின் மனைவி பாக்கியம். கதிரேசன் சொன்னார், “தனபால சிங்கம், செய்யத் தகாத பல செயல்களைச் செய்த பலர் தமது தவறுகளை உணர்ந்து சிவபக்தர்களாகிய படியால் ஊர் உலகம் அவர்களை மதிக்கிறது. சிவபக்தன் திருமுறைகளில் கூறியபடி சீலம் நோன்பு ஆகிய இரண்டினையும் சிறப்பாகச் செய்தானேயானால் திருவருள் வந்து சேரும். திருவருள் பெருகப் பெருகக் குற்றங்கள் நீங்கும். அதனால் யோகம் உண்டாகும். இந்நிலையில் அறியும் எண்ணமாகிய குருவருளால் சிவம் தோன்றவார். பின்குருவின் அருளால் அவர்கள் சிவமாவர் என்று இறை நூல்கள் கூறுகின்றன. நீ கொலைத் தொழிலை விட்டமையால் எனது தென்னந்தோப்பில் வேலை செய். வர்த்தகனான கெங்காதரன் தனக்குப் பிள்ளைகள் இல்லாததால் வறிய பிள்ளைகளைகளுக்குக் கற்பதற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்வதாகச் சொன்னவன். அவனை உனக்கு உதவி செய்யச் சொல்கிறேன் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1429. அன்பின் உருகுவ னாளும் பணிசெய்வன்**
**செம்பொன்செய் கமலத் திருவடி**
**முன்புநின் றாங்கே மொழிவ தெனக்கருள்**
**என்பினுட் சோதி இலங்குகின்றானே.**

“சிவனடியார்களே, எமது ஆச்சிரமத்தில் நின்ற வில்வம் மரம்பட்டு விட்டதால் கதிரேசன் எங்கோ சென்று ஒரு வில்வைக் கன்றை வாங்கிவந்து குழி ஒன்று வெட்டி அதனுள் நட்டுக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த பாலசிங்கம் பதைபதைத்தும் போனான். எண்பது வயது கடந்த அவர் சிரமப்பட்டுக்குழி தோண்டியதை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை, “ஐயா, இந்த வயதில்

இதை நீங்கள் செய்யவேண்டுமா? என்னிடம் சொல்லியிருக்கலாம் தானே. நான் உங்கள் வேலைக்காரன். அத்துடன் சிவபக்தன். சிவனுக்குச் சேவை செய்வதில் இன்பம் கொள்பவள்'' என்று கூறும்போது கதிரேசன் சொன்னார், ''நீ சிவபக்தன். சிவசேவை செய்பவன் என்பது உண்மை. ஆனால் நீ எனது வேலைக்காரன் அல்ல. எல்லையில்லாத் தலைவனான சிவனின் மீது தன்சித்தத்தை வைத்து எல்லாம் சிவன் செயல் என நினைத்து உருகுபவன் சிவனின் வேலைச்காரனே தவிர மனிதனின் வேலைக்காரன் அல்ல. இப்போது நீபெரும் சிவ பக்தனாகி விட்டாய். சிவசேவையென நினைத்து எனது வேலைகளையும் செய்கிறாய். அதை விடச் சிவசேவையை இன்னொருவரை ஏவிச் செய்யக் கூடாது. தானே செய்யவேண்டும். சிவனுக்கு நான் அடிமை. அதனால் மகிழ்வுடன் சேவை செய்கிறேன். பொன் போன்ற திருமேனியையும் செந்தாமரை இதழ்கள் போன்ற திருவடியையும் உடையவன் சிவன். அவன் அடியேனான என் முன் நின்று அருமறைகளை அருளத் திருவடி உணர்வு கை வந்த ஒரு மெய்யடியாரை என்முன்னே அறிவொளியாகத் திகழ வைப்பவன். அதனால் நான் யாரையும் வேலையாளாராக் கருதுவதில்லை என்றவர்.'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 7. யோகம்.

**(செறிவு)**

**1430. நெறிவழி யேசென்று நேர்மையுள் ஒன்றித்**
**தறியிருந் தாற்போல் தம்மை யிருத்திச்**
**சொறியினுந் தாக்கினுந் துண்ணென் றுணராக்**
**குறியறி வாளர்க்குக் கூடலு மாமே.**

''சிவனடியார்களே, குருவின் வாய்மொழிக்கேற்ப ஒழுகி அகத் தவமாகிய யோகத்தில் பொருந்தி ஆ முதலியவற்றைக் கட்டி மாறுதலின்றி தம் உடலை இருத்தி தினவு(கடி) முதலியன உடலில் தோன்றினாலும் சொறியாமாலும், காற்று, மழை, மின்னல், இடி முதலியன உடலைத்தாக்கினாலும் அசையாமல் இருந்து கருதிய குறியான சிவனை அடைவதற்கான செயல்களைச் செய்வார்க்கு அருளால் சிவனை அடையும் நிலை உண்டாகும்''.

''சிவனடியார்களே, எனது குரு சமாதி அடையுமுன் ஒருநாள் தியானத்தில் இருந்தார். அப்போது ஒரு கடிக்கும் தன்மை வாய்ந்த அட்டை ஒன்று அவரின்

உடலில் ஏறியிருந்து அது வெகுநேரமாக இரத்தம் குடித்துக் கொண்டிருழுந்தது. அவரது சீடர்களான நாம் எதுவும் செய்யத் தோன்றாமல் பேசாதிருந்தோம். முன்பொரு முறை ஒரு நாகம் வந்து அவரின் அவரின் மேலேறச் சீடனொருவன் அதைக்கலைத்து விட்டான். நிட்டையால் எழுந்த குரு அச்சீடனை அழைத்து ஏசினார். சிவனின் கழுத்தில் புரழும் நாகம் எனது கழுத்திலும் ஏறிப் புரள விரும்பிவந்திருக்கும் அதை ஏன் கலைத்தாய்? இடி மின்னல், மழை, புயல், பூச்சி, புழு எது வந்தாலும் அவற்றைக் குழப்பக் கூடாது'' என்றவர். அதனால் நாம் பார்த்துக் கொண்டிருந்தோம்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1431. ஊழிதோ றூழி உணர்ந்தவர்க் கல்லால்**
**ஊழிதோறூழி யுணரவுந் தானொட்டான்**
**ஆழி அமரும் அரியயன் என்றுளார்**
**ஊழி முயன்றும் ஒருச்சிய ளானே.**

''சிவனடியார்களே, ஊழிகள் பல சென்றாலும் என்றும் ஒரே மாதிரி நின்று அருளும் முழுமுதற்சிவனை, அவனின் அருட்கண்களால் உணர்ந்தவர்களுக் கல்லாமல் தம் அறிவால் பல ஊழிகள் கழிந்தாலும் சிவனை அறிய முடியாது. அரியும் அரனும் பல ஊழிகள் முயன்றும் சிவனைக் காணமுடியவில்லை. அவன் அவர்களுக்கு மறைந்து நின்றவன்''

''சிவனடியார்களே, அரியும் அரனும் கூடச் சிவனின் அடியையோ முடியையோ காண முடியாது அல்லற்பட்டனர். மெய்யுணர்வை அடைந்த சிவனடியார்கள் தாம் விரும்பும் போதெல்லாம் சிவன் காட்சி கொடுத்தருவன். அதற்கு அருள் வேண்டும் என்று எனது குரு சொல்வார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1432. பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற்**
**சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது**
**ஓவியம் போல உணர்ந்தறி வாளர்க்கு**
**நாவி யணைந்த நடுதறி யாமே.**

''சிவனடியார்களே, பூக்களில் மணம் பொருந்தி இருப்பது போல ஆருயிர்களிடத்து அன்னை அத்தனான சிவன் கலந்திருக்கிறான். அவ்வாறான தன்மையை உடையவர் வரைந்த சித்திரத்தைப் போல அச்சிவனை உணர்வால் அறிவர். அப்படி அறிகின்றவர் புனுகுப்பூனை அணைந்த நடுதறிபோல அசையாதிருப்பர்.''

“சிவனடியார்களே, எனது குரு சொல்வார் அகத்தவம் செய்வாரது உயிரில் சிவன் பூக்களில் நறுமணம் கலந்திருப்பதைப் போல் இருப்பதால் எச் சந்தர்ப்பத்திலும் சிவநினைவுடன் இருப்பர் உலகின் ஆரவாரங்கள் எதுவும் அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் வரைந்த சித்திரம் போல அசை வற்றிருப்பர் என்பார். அது உண்மை. சில சமயம் அவர் சிவலிங்கத்திற்கு முன்பாக நிற்கும் வில்ல மரத்தின் அடியிலேயே தியானத்தில் இருப்பார். கல்லாலான ஒரு சிலை இருப்பதைப் போல இருக்குமே தவிர மனிதன் ஒருவன் இருக்கிறான் என்ற நினைவிராது. பறவைகள் அவர் மீதிருந்து எச்சமிடும். மிருகங்கள கல்லென நினைத்துத் தமது உடலில் ஏற்படும் கடி சொறிகளைத் தேய்க்கும். இதெல்லாம் அவருக்குத் தெரியாது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1433. உய்ந்தனம் என்பீர் உறுபொருள் காண்கிலீர்**
**கந்த மலரிற் கலக்கின்ற நந்தியைச்**
**சிந்தை யுறவே தெளிந்தருள் நீங்கினால்**
**முந்தைப் பிறவிக்கு மூலவித் தாமே.**

“சிவனடியார்களே, உயிருக்குள் உயிராய் நின்றருளும் முதன்மை வாய்ந்த சிவபெருமானைக் கண்டவரே உய்வர். அதை உணர்ந்தவரென்று நினைக்கிறீர்களே தவிர உணர்வதில்லை. நெஞ்சத்தாமரையில் வீற்றிருக்கின்ற நந்தியை உங்கள் உள்ளத்தில் இருத்தி உணருங்கள். உணர்ந்து தெளிந்தால் இருள் நீங்கும். இருள் நீங்கினால் நுண்ணுடலாகிய கருவுறாது தோன்றும். இது முதற் பிறவியை ஒழிப்பதற்கு அழியாத காரணமாக அமையும்” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1434. எழுத்தொடு பாடலும் எண்ணெண் கலையும்**
**பழித்தலைப் பாசப் பிறவியும் நீங்கா**
**வழித்தலைச் சோமனோ டங்கி யருக்கன்**
**வழித்தலைச் செய்யும் வகையுணர்ந் தேனே.**

“சிவனடியார்களே, இலக்கண இலக்கியங்களும் இவற்றின் விரிவான அறுபத்து நான்கு கலைகளும், பழித்தற்கிடமான சுட்டுணர்வாகும், அச்சுட்டுணர்வாகிய, பாசத்தினால் தொடரும் பிறவியும், நீங்காது முறைமை வாய்ந்த இடப்பால் நரம்பாகிய திங்களும், வலப்பால் நரம்பாகிய ஞாயிறும், நடுப்பால் நரம்பாகிய, தீயும் அருளான் அமையும் நிலைகளை உணர்வர்.

அவ்வுணர்வால் முதன்மையான செந்நெறிச் செல்லும் மேன்மை எய்தும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1435. விரும்பிநின் றேசெயில் மெய்த்தவ ராகும்**
**விரும்பிநின் றேசெயின் மெய்யுரை யாகும்**
**விரும்பிநின் றேசெயின் மெய்த்தவ மாகும்**
**விரும்பிநின் றேசெயில் விண்ணவ னாகுமே.**

''சிவனடியார்களே, சிவத்தை விரும்பித்தவம் செய்யும் தவம் செய்வோரே உண்மைத்தவத்தினராவர். அவ்வாறு செய்து வந்தால் குருவருளான அருள் மறைகை கூடும். அது தான் மெய்த்தவமாகும். தொடர்ந்து செய்தால் சிவனென மதிக்கப்படுவர்''.

''சிவனடியார்களே, கதிரேசன் திடீரென்று தியானத்தில் ஆழ்ந்து விட்டார். ஐந்து நாட்கள் கழிந்தும் அவர் தியானத்தால் எழுந்திருக்கவில்லை. இது குடும்பத்தினருக்கு பெரும் துன்பத்தைக் கொடுத்தது. ஊரவர்களும் இனத்தவர்களும் அவரது வீட்டில் வந்து குழுமியிருந்தனர். அவரது மகன் அவரது நாடியைப் பார்த்தான். அது சீராக ஓடிக்கொண்டிருந்தது. ஆறாம் நாள் தியானம் கலைந்து எழுந்து அவர் சொன்னார், ''எனக்கு எண்பது வயதாகி விட்டது. எனது கடமைகள் எல்லாவற்றையும் முடித்து விட்டேன். சிவனை அடைய வேண்டும். என்ற ஆசையில் சிவனை விரும்பித் தியானஞ் செய்தேன். சிவனை நினைத்துக் கொண்டிருந்தது பேரின்பத்தைத் தந்தது'' என்றார். அதற்கு நல்லை நாதன் சொன்னார், ''நாமெல்லோரும் தாங்கள் மெய்த்தவம் செய்வதால் உங்களைச் சிவனருள் பெற்ற சிவனென்றே மதிக்கிறோம்'' என்றபோது கதிரேசன் சிரித்தவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1436. பேணிற் பிறவா உலகருள் செய்திடுங்**
**காணில் தனது கலவியு ளேநிற்கும்**
**நாணில் நரக நெறிக்கே வழிசெயும்**
**ஊனிற் சுடுமங்கி யுத்தமன் றானே.**

''சிவனடியார்களே, அகத்தவத்தை விரும்பிக்கைக் கொள்வோர் மீண்டும் பிறப்பெடுக்காது சிவவுலகை அடைவர். இவ் உலகு பிறவாத உலகாகும். இவர்கள் சிவபெருமானை அருட்கண்ணால் கண்டு அவருடன் கலந்து நிற்பர். இதை விரும்பாதவர்கள் இருள் நீங்கா உலகை அடைந்து பெருந்துன்பமுறுவர். சிவன்

உடம்பினுள் சென்று அவ்வுடம்பு நிலைத்து நிற்க வேண்டிய சூட்டினை அருள்வன். அத்தகைய சிவபெருமான் தன்னைச் சார்ந்தாரைக் காக்கும் தலைவனாவான்''

''சிவனடியார்களே, அகத்தவத்தில் இருந்து எழுந்த கதிரேசன் சொன்னார், ''இதற்கு முன்பு ஒருநாள் இருந்தேன். இன்று சிவ உலகில் இருந்து விடுபட்டு வரமனம் விடவில்லை. சிவனைக்கண்டு அவனோடு இணைந்திருந்தால் என் உடம்பு நிலைத்திருக்க வேண்டிய சூட்டினை அவன் தந்தான். இன்னும் பல நாள் இருந்திருந்தாலும் சாந்தவர்களைக் காக்கும் தலைவனான சிவன் என்னைக் காக்காமல் விட்டிருப்பானா? என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1437. ஒத்தசெங் கோலார் உலப்பிலி மாதவர்**
**எத்தனை யாயிரம் வீழ்ந்தனர் எண்ணிலி**
**சித்தர்கள் தேவர்கள் மூவர் பெருமையாய்**
**அத்த னிவனென்றே அன்புறு வார்களே.**

''சிவனடியார்களே, நீதியாக அரசாண்ட மன்னர்கள் எண்ணில் அடங்காதவர்கள். கேடு செய்யாது ஆண்ட மன்னர்கள் அளவிறந்தோர். இவர்கள் எல்லோரும் சிவபெருமானை விரும்பி வழிபட்டு பெருவாழ்வு பெற்றனர். அளவிறந்த சித்தர்களும் தேவர்களும் மூவர்களும் சிவபெருமானை வழிபட்டுச் சிறப்பும் பெருமையும் பெற்றனர். இவர்களெல்லோரும் சிவபெருமானின் திருவடியினையே வணங்கி மேன்மை அடைந்தனர்''

''இவ்வாறு கதிரேசன் கூறுவார். பெரும்பெரும் அரசர்களும் தேவர்களும் சித்தர்களும் ரிசிகளும் ஞானிகளும் தொழுத சிவனை நான் தொழக் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும் என்பார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1438. யோகிக்கு யோகாதி மூன்றுள கொண்டுற்றோர்**
**ஆகத் தகுகிரி யாதி சரியையாந்**
**தாகத்தை விட்ட சரியையொன் றாம் ஒன்றுள்**

**ஆதித்தன் பத்தியுள் அன்புவைத் தேனே.**

“சிவனடியார்களே, யோகி செறிவு, நோன்பு, சீலம் என்ற மூன்றையும் கைக்கொள்பவன் கிரியையாளர் சீலம் என்று சொல்லப்படும் சரியைக்கு உரியவர். இவர்கள் எல்லோரும் சிவசூரியயனான சிவனின் மீது பற்று வைத்தவர்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1439. யோகச் சமயமே யோகம் பலவுன்னல்**
**யோக விசேடமே அட்டாங்க யோகமாம்**
**யோகநிர் வாணமே யுற்ற பரோதயம்**
**யோக அபிடேகமே ஒண்சித்தி யுற்றலே.**

“சிவனடியார்களே, செறிவு நிலையாகிய யோகத்தில் சமயம், விசேடம், நிருவாணம், அபிடேகம் என நான்கு நிலைகள் உள்ளன. அவை முறையே சிவ நுழைவு, சிவநோன்மை, சிவநுண்மை, சிவகூர்மை என அழைக்கப்படும். யோகத்தில் சமயம் பலவகையான யோக முறைகளை நினைத்தல். யோகத்தில் விசேமானது எட்டு உறுப்புக்களுடன் கூடிய யோகம். யோகத்தில் நிருவாணம் என்பது முழுமுதலான சிவம் தோன்றுதல். யோகத்தில் அபிடேகம் சித்திகளைப் பெறுதல்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 8. ஞானம்.

### (மெய்யுணர்வு)

**1440. ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை**
**ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று**
**ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்**
**ஞானத்தின் மிக்கார் நாரின்மிக் காரே.**

“சிவனடியார்களே, திருவடி உணர்வாகிய ஞானம் பிறப்பறுத்தலைச் செய்யும். ஞானத்தைத் தவிரப் பிறப்பறுப்பது எதுவும் நாட்டில் இல்லை. ஞானத்தின் வேறான சமயம் இல்லை. ஞானம் தான் இம்மை உம்மை அம்மை என்ற மூன்றையும் தருவது.

ஞானம் தான் வீடு பேற்றைத் தரும். வேறெதுவும் தராது. ஞானத்தில் சிறந்தோர் தான் மக்களில் சிறந்தவராவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1441. சத்தமுஞ் சத்த மனனுந் தகுமனம்**
**உய்த்த வுணர்வு முணர்த்தும் அகந்தையுஞ்**
**சித்தமென் றிம்மூன்றுஞ் சிந்திக்குஞ்**
**செய்கையுஞ்**
**சத்தங் கடந்தவர் பெற்றசன் மார்க்கமே.**

''சிவனடியார்களே ஒலி முதலாகிய நாதமெய்யும் அது போன்று பரந்த தன்மையுள்ள மனமும், புத்தியும், அகங்காரமும், சித்தமும் ஆகியவற்றுள் சித்தம் மனதுள் அடங்குவதாலும், நாதம் இவற்றைச் செயற்படுத்துவதாலும் மனம்புத்தி அகங்காரம் என்பன சிறந்தன. அவை முறையே நிகழ்த்தும் நினைப்பு எழுச்சி இறுப்பு ஆகிய அந்தக்கரணங்களின் செயல்களையும் நாதக் கலையையும் கடந்தவரே ஞானியாவர். அவர்கள் செல்லும் நெறி மெய்நெறியாகும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1442. தன்பால் உலகுந் தனக்கரு காவதும்**
**அன்பா லெனக்கரு ளாவது மாவன**
**என்பார்கள ஞானமும் எய்துஞ் சிவோகமும்**
**பின்பாலின் நேயமும் பெற்றிடுந் தானே.**

''சிவனடியார்களே, தான் வாழுகின்ற மாயாகாரிய உலகமும், தன்னோடு கூடியிருக்கும் உடம்பும் திருவருளினாலேயே கிடைத்தன. இவற்றால் சிவன் மீது அன்பு வைத்து அவரைப் பற்றின்றி வணங்கி வந்தால் வணங்குபவர் சிவத்துள் அடங்கித் தானே சிவனாகப் பொலிவார். இதுவே சிவயோகமாகும். அதன்பின் திருவருளின் உதவியால் தானாகவே சிவனின் திருவடியை அடைவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1443. இருக்குஞ் செருமி இடம்பிரம மாகும்**
**வருக்கஞ் சராசர மாகும் உலகந்**
**தருக்கிய ஆசார மெல்லாந் தருமே**
**திருக்கிலா ஞானத்தைத் தேர்துணர்ந் தோர்க்கே.**

“சிவனடியார்களே, சிவஞானத்தைத் திருவருளால் உணர்ந்து தெளிந்தவர்கள் சிவஞானியராவர். சிவன் எழுந்தருளியிருக்கும் இடங்களில் அவர் நிட்டையில் இருப்பார். இயங்குதிணை நிலைத்திணை ஆகிய கூட்டம் அனைத்தும் அவர்களுக்கு உலக உறவாகும். மேம்பாடுகள் யாவும் அவரைத் தேடி வந்து சேரும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1444. அறிவும் அடக்கமும் அன்பும் உடனே**
**பிறியா நகர்மன்னும் பேரருளாளன்**
**குறியுங் குணமுங் குரைகழல் நீங்கா**
**நெறியறிவார்க்கிது நீர்த்தொனி யாமே.**

“சிவனடியார்களே, சிவத்தை அறியும் அறிவும், சிவத்துள் அடங்கும் அடக்கமும், சிவத்தின் மீது கொள்ளும் தலையாய அன்பும் உள்ளவர்கள் சிவ உலகத்தில் வாழ்வோராவர். அவர்களின் புற அடையாளமாகச் சிவக்கோலமும், அகஅடையாளமாகச் சிவப்பண்பும் இருக்கும். இக்கோலமும் பண்பும் சிவபெருமானின் திருவடியினை நீங்காது தொழுவதைக் குறிக்கும். அவர்களுள் அடங்கி நிற்கும் திருவடி உணர்வு அவர்களின் செயல்களால் வெளிப்படும்.”

“மெய்யடியார்களே, மேற்கூறப்பட்ட பண்புகளை நாம் கதிரேசனிடத்துக் காணலாம். அவரது வெளித்தோற்றம் சிவக்கோலமாகும். அவரது பண்பும் சிவனின் பண்பை ஒத்தது. ஏழைகள் மீது இரக்கம்கொள்ளல் . அவர்களுக்கு உதவிகள் செய்தல் கோவில்களில் தொண்டுகள் செய்தல். அறிவுரை வழங்கல். இப்படி பலவற்றைச் சொல்லலாம். அண்மையில் கூட இருதய சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய ஒருவருக்கு உதவி செய்தவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1445. ஞானம் விளைந்தெழு கின்றதோர் சிந்தையுள்**
**ஏனம் விளைந்தெி ரேகாண் வழிதொறுங்**
**கூனல் மதிமண் டலத்தெதிர் நீர்கண்டு**

**ஊன மறுத்துநின் றொண்சுட ராகுமே.**

“சிவனடியார்களே, திருவடியுணர்வாகிய சிவஞானமே சிவனடியார்களின் உள்ளத்துள் மூலாதாரமாக இருத்தல் வேண்டும். அகத்தவம் செய்வோருக்கு யோகம் கைகூடும். இவர்கள் புருவ நடுவில் தோன்றும் அமிழ்தில் இன்பங் காண்பர். அதனால் மல மாயா கன்மங்களின் தளைகளை அறுத்துச் சிவனின் அருட்சுடரைக் காண்பர். அச்சுடரை ஒண்சுடர் என்று சொல்வார்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1446. ஞானிக் குடன்குண ஞானத்தில் நான்குமா**
**மோனிக் கிவையொன்றுங் கூடாமுன் மோகித்து**
**மேனிற்ற லாஞ் சத்தி வித்தை விளைத்திடுந்**
**தானிக் குலத்தோர் சரியை கிரியையே.**

“சிவனடியார்களே, சிவஞானிக்குரிய பண்புகள் நான்காகும். அவை, அறிவிற்சீலம், அறிவில் நோன்பு, அறிவிற்செறிவு , அறிவில் அறிவு என்பனவாகும். ஞ;ானத்தின் மேல் நிலையான மோனத்தை எய்தியோருக்கு மேற்கூறிய பண்புகள் நான்கில் எதுவும் பொருந்தாது. சிவசக்தியில் தன்னை நிலைநிறுத்த, அ∴து அடுத்த நிலையில் உள்ள குண்டிலினி சக்தியின் உதவியால் யோகப்பலனைப் பெறும். இதுவே பற்றுடன் யோகம் செய்வோர்க்கு நிகழும் அறிவிற்சீலம், அறிவில் நோன்பு எனப்படும். இவை ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியையாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1447. ஞானத்தின் ஞானாதி நான்குமா ஞானிக்கு**
**ஞானத்தின் ஞானமே நானென தென்னாமல்**
**ஞானத்ததில் யோகமே நாதாந்த நல்லொளி**
**ஞானக் கிரியையே நன்முத்தி நாடலே.**

“சிவனடியார்களே, சிவஞானிக்கு ஓதப்பட்ட அறிவில் அறிவு முதலிய நான்கு பண்புகளும் உள்ளன. அறிவில் அறிவாகிய ஞானத்தின் ஞானமே நான் எனது என்ற

செருக்குகளை அறுத்தல். ஞானத்தில் யோகம் முப்பத்தாறு மெய்யும் கடந்த அருள் வெளியில் காணும் சிவஒளி. ஞானத்தில் திருவடிப்பேற்றினை நாடுதல் ஞானத்தில் சரியை எனப்படும். திருவடிப் பேற்றினைத் திருமுறைச் செல்வர் சொல்ல கேட்டல் இனிமையானதாகும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1448. நண்ணிய ஞானத்தின் ஞானாதி நண்ணுவோன்**
**புண்ணிய பாவங் கடந்த பிணக்கற்றோன்**
**கண்ணிய நேயங் கரைஞானங் கண்டுளோன்**
**திண்ணிய சுத்தன் சிவமுத்தன் சித்தனே.**

''சிவனடியார்களே, சிவஞானத்தின் நான்கு படிநிலைகளையும் அறிந்து கொண்டவன், பிறப்புக்கு வித்தான இருவினைகளையும் கடந்தவனாவன். இருவினை என்பது நான் என்னும் முனைப்பால் செய்யும் புண்ணிய பாவங்களாகும். புண்ணிய பாவங்களைக் கடந்தவன் ஞானச் சிவபொருளான சிவபெருமானை அவ்வுருவிலேயே காண்பவனாவான். அவன் தான் நிலை பேறான தூயவன். அவனே திருவடியை அடைந்த சித்தன்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1449. ஞானச் சமயமே நாடுந் தனைகாண்டன்**
**ஞான விசேடமே நாடு பரோதயம்**
**ஞானநிர் வாணமே நன்றறி வானருள்**
**ஞானாபி டேகமே நற்குரு பாதமே.**

''சிவனடியார்களே, சிவஞானத்தால் நால்வகை தீக்கை வரும். சிவநுழைவு என்பது சிவனைக் காணும் முறைகளால் தன்னைக் காண்பது. சிவநோன்மை என்பது மேலான சிவனின் தோற்றத்தைக் காண்பது. சிவ நுண்மை என்பது சிவபெருமானின் திருவருள் வீழ்ச்சி. சிவநுகர்மை என்பது திருவருளால் திருவடியை மறவாமை. இவையே நால்வகைத் தீக்கையாகும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

# 9. சன்மார்க்கம்

(காதன்மை நெறி)

**1450. சாற்றுஞ்சன் மார்க்கமாந் தற்சிவ தத்துவத்**
**தோற்றங்க ளான சுருதிச் சுடர்கண்டு**
**சீற்றம் ஒழிந்து சிவயோக சித்தராய்க்**
**கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே.**

"சிவனடியார்களே, சிவஞானிகளால் புகழ்ந்து சொல்லப்படும் தூமாயை மெய்கள் ஐந்து. அவை ஆசான், ஆண்டான், அருளோன், அன்னை, அத்தன் என்பனவாகும். இவற்றை முறையே சுத்த வித்தை, ஈசுரம், சதாசிவம், சக்தி, சிவம் என்று கூறுவர். செந்தமிழ்த் திருமறையும் திருமுறைகளான தமிழ் வேதாகமங்களும், கூறும் சிவபெருமானின் உண்மைத்தன்மையான உணர்வொளியினைக் கண்டு ஆறு பகைகளையும் வென்று சிவயோக சித்தராய் வாழ்வர். அவர்கள் மரணத்தை வென்று கூத்தப் பெருமானான சிவனின் திருவடியை அடைவர். இவர் கள் தான் மெய்நெறியாகிய சன்மார்க்கத்தை உணர்ந்தோராவர்" என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1451. வைசப் பெருமைத் தனிநாயகன்நந்தி**
**உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு**
**தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய**
**வையத் துள்ளார்க்கு வகுத்துவைத் தானே.**

"சிவனடியார்களே, சைவசமயத்தின் பெருமை மிக்க ஒப்பில்லாத தலைவன் நந்தியெம்பெருமான். அவன் ஆருயிர்கள் அனைத்தும் திருவடியை அடைய வேண்டுமென விரும்பி வகுத்தருளிய குரு நெறி ஒன்று உண்டு. அது தான் தெய்வச்சிவநெறி. அந்நெறியாகிய சன்மார்க்கத்தைத் தழுவி உய்யும்படி நிலவுலகில் உள்ளவர்களுக்குச் செந்தமிழலால் சிவநெறியை வகுத்தருளினான்" என்றார் சுந்தர மூர்த்திசுவாமிகள்.

**1452. தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப்**
**பரிசிக்கக் கீர்த்திக்கப் பாதுகஞ் சூடக்**
**குருபத்தி செய்யுங் குவலயத் தோர்க்குத்**
**தருமுத்திச் சார்பூட்டுஞ் சன்மார்க்கந் தானே.**

“சிவனடியார்களே, மெய்ந்நெறியாகிய சன்மார்க்கத்தில் சிவன் அளித்தருளும் திருவடிப்பேறு சிவகுருமீது வைக்கும் பக்தியினால் கை கூடுவதாகும். அப் பெருமையான பற்று சிவகுருவினைக்காண, வழிபட, இடையறாது எண்ண, திருவடியினை அடைய, சிவகுருவினது பெருமையை வாயாரப் புகழ, சிவகுருவின் திருவடியைத் தரதர தலைமீது சூடத்தாமே வருவதாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1453. தெளிவறி யாதார் சிவனை யறியார்**
**தெளிவறி யாதார் சீவனு மாகார்**
**தெளிவறி யாதார்சிவமாக மாட்டார்**
**தெளிவறி யாதவர் தீரார் பிறப்பே.**

“சிவனடியார்களே, சன்மார்க்கநெறியில் வாழ்ந்து திருமுறையாக முப்பொருளின் உண்மையைப் வழி புரியாதவர்கள் சிவனை உணரமாட்டார்கள். சிவனை உணராதவர்கள் பிறந்ததன் பயனை அடையமாட்டார்கள். அதனால் அவர்கள் அறிவுடையவராக இருக்க மாட்டார்கள். பெருவாழ்வும் அவர்களுக்குக் கிடைக்காது. திரும்பத்திரும்பப் பிறந்து கொண்டேயிருப்பார்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1454. தானவ னாகித் தானைந்தா மலஞ்செற்று**
**மோனம தாமொழிப் பான்முத்த ராவதும்**
**ஈனமில் ஞானானு பூதியில் இன்பமுந்**
**தானவ னாயுற லானசன் மமார்க்கமே.**

“சிவனடியார்களே, திருவருளின் துணையால் உயிர் சிவனான பின்பு அது தன்னுடன் ஒட்டியிருக்கும் ஆணவமலம், கன்மமாயைகள், உலகு உடல் உண்பொருட்கள் என்ற மாயேயம், நடப்பாற்றல் ஆகிய ஐந்தையும் அகற்றிய பின் உணர்விற் கணிப்பதாகிய ‘சிவசிவ’ என்ற தமிழ் மறையான வாய்வளா மோனமொழியைக் கணித்தல் வேண்டும். அப்படிக் கணிப்பவர்கள் தான் வீடு பேற்றினை அடைவர். அவர்கள் சிவஞானத்தைப் பெற்று சிவனடி இன்பத்தை

அனுபவிப்பார்கள். அவர்கள் தான் சன்மார்க்க நெறியினர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1455. சன்மார்க்கத் தார்க்கு முகத்தொடு பீடமுஞ்**
**சன்மார்க்கத் தார்க்கு இடத்தொடு தெய்வமுஞ்**
**சன்மார்க்கத் தார்க்கு வருக்கந் தெரிசனம்**
**எம்மார்க்கத் தார்க்கும் இயம்புவன் கேண்மினோ.**

''சிவநெறியாகிய சன்மார்க்க நெறியில் நிற்பார்க்கு நல்லவர்களின் உறவும் அவர்கள் கூடி வாழும் இடமுமே சிறந்தனவாகும். அவர்கள் இருக்கும் இடம் சிவபெருமானின் இருப்பிடமாகும். அவர்கள் இருக்கும் திசை சிவனிருக்கும் திசையாகும். அவர்களின் இருப்பு சிவபெருமானின் திருவுருவ இருப்பாகும். அவர்களே தெய்வமாகும். அவர்களைக் காண்பது தரிசனமாகும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1456. சன்மார்க்க சாதனந் தான்ஞான ஞேயமாம்**
**பின்மார்க்க சாதனம் பேதையர்க் காய்நிற்கும்**
**துன்மார்க்கம் விட்ட துரியத் துரிசற்றார்**
**சன்மார்க்கந் தானவ னாகுஞ்சன் மார்க்கமே.**

''சிவனடியார்களே, சன்மார்க்க நெறி நிற்பவர்களுக்குத் திருவடி உணர்வும், திருவடி இணைப்பும் உண்டாகும். அதனால் தோழமை உறவும், மகன் தந்தை உறவும், தொண்டன் உறவும் ஏற்படும். அதனால் ஆணவம் அகலும். அதனால் நான்காவது நிலையான பேருறக்கதைக்கடந்து ஐந்தாம் நிலையாகிய உயிர்ப்படங்குதல் ஏற்படும். இவர்கள் நன்நெறியாளராவர். அவர்கள் தம்மைச் சிவனுக்கு அடிமையாக்கிக் கொள்வர். இது தான் உண்மையான சன்மார்க்கமாகும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1457. சன்மார்க்க மெய்த வருமருஞ் சீடர்க்குப்**
**பின்மார்க்க மூன்றும் பெறவியல் பாமென்றால்**
**நன்மார்க்கந் தானே சிவனொடு நாடலே**
**சொன்மார்க்க மென்னச் சுருதிகைக் கொள்ளுமே.**

“சிவனடியார்களே, நன்நெறியான சன்மார்க்கத்தை அடைய விரும்புவோர் செறிவு, நோன்பு, சீலம் என்ற மூன்றையும் பயிலல் வேண்டும். அது சித்தித்தால் இடையறாது சிவனை எண்ணுதல் வேண்டும். இதுவே அருமறை என்ற திருவைந்தெழுத்து உபதேசமாகும். தொடர்ந்து திருவைந்தெழுத்தை ஓதுதல் வேண்டும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1458. அன்னிய பாசமும் ஆகுங் கருமமும்**
**முன்னும் அவத்தையும் மூலப் பகுதியும்**
**பின்னிய ஞானமும் பேதாதி பேதமுந்**
**தன்னொடுங் கண்டவர் சன்மார்க்கத் தோரே.**

“சிவனடியார்களே, தன்னை அடிமைப்படுத்தி, ஆணவமலத்தையும், வினையால் வரும் பிறப்பு இறப்புக்களையும், அந் நிலைக்குக் காரணமான மாயாகாரியமான மூலப்பகுதியைம் அகற்ற வேண்டும். அப்படி அகற்றினால் பதி பசு பாசம் என்பவற்றின் உண்மையான நிலையை உணரும் மெய்யுணர்வு உண்டாகும். இதனால் ஒற்றுமை, வேற்றுமைப் பொருட்களின் தொடர்புகளையும் தன்னுளுக் கண்டவர் சன்மார்க்கத்தவராவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1459. பசுபாச நீக்கிப் பதியுடன் கூட்டிக்**
**கசியாத நெஞ்சங் கசியக் கசிவித்து**
**ஒசியாத வுண்மைச் சொரூபோ தயத்துற்று**
**அசைவான தில்லாமை யானசன் மார்க்கமே.**

“சிவனடியார்களே, ஆணவமுனைப்புடன் செயற்படுதலைப் பசு எனப்படும். அத்தகைய பசுத் தன்மையையும் பாசத்தன்மையினையும் நீக்கி முழுமுதற்கடவுளராகிய சிவத்துடன் சேர்த்து வைப்பது சன்மார்க்க நெறியாகும். கல்லுப் போன்ற கசியாத உள்ளத்தைக் கசியச் செய்து உண்மைத்தன்மையை விளக்குவது சன்மார்க்க நன்நெறியாகும். ஒருபோதும் தளர்வின்றித் திருவடியில் அழுத்துவித்து வாழச் செய்வது அந்நெறியாகும்”. என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1460. மார்க்கஞ்சன் மார்க்கிகள் கிட்ட வகுப்பது**
**மார்க்கஞ்சன் மார்க்கமே யன்றிமற்**

**றொன்றில்லை.**

**மார்க்கஞ்சன் மார்க்க மெனுநெறி வைகாதோர்**

**மார்க்கஞ்சன் மார்க்க மாஞ்சித்த யோகமே.**

“சிவனடியார்களே, தன்னைப் பின்பற்றுபவர்களை நல்லோராக்கும் நெறி சன்மார்க்க நெறியாகும். அந்நெறியினைச் சார்ந்தோர் செல்லும் வழி சித்தயோகமாகும். சித்த யோகம் என்பது சிவயோகமாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 10. சகமார்க்கம்

## (தோழமை நெறி)

**1461. சன்மார்க்கந் தானே சகமார்க்க மானது**

**மன்மார்க்க மாமுத்தி சித்திக்குள் வைப்பதாம்**

**பின்மமார்க்க மானது பேராப் பிறந்திறந்து**

**உன்மார்க்க ஞானத் துறதியு மாமே.**

“சிவனடியார்களே, சன்மார்க்கத்திற்கு வழியாக இருப்பது தோழமை நெறியானன சகமார்க்க நெறியே. இம்மார்க்கம் சிறந்த பேறாகிய சித்தியுள் நிலைப்பிப்தாகும். இந்நெறியை விடுத்து ஏனைய நெறிகளைப் பின்பற்றுவோர் நீங்காத பிறப்பு இறப்புக்களுக்கு உட்படுவர். ஆருயிர்களைத் தோழர்களாக கொண்டு ஆட்கொள்ளும் நெறிமுறை இதுவாகும். சுந்தரர் இந்நெறியிலிருந்து சிவனை அடைந்தவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1462. மருவுந் துவாதசமார்கமில் லாதார்**

**குருவுஞ் சிவனுஞ் சமயமுங் கூடார்**

**வெருவுந் திருமகள் வீட்டில்லை யாகும்**

**உருவுங் கிளையும் ஒருங்கிழப் பாரே.**

“சிவனடியார்களே, பன்னிரண்டு நிலைகளைக் கைக்கொள்ளாதவர்கள் சிவகுருவையும் அதனால் கைவரப்படும் சிவனது திருவடி இன்பத்தினையும் சிவ நெறியையும் கைக்கொள்ளப் பொருத்தமமானவராவார். இவற்றைக் கடைப்பிடிக்காதவர்களைத் திருமகள் காண அஞ்சுவள். அவர்களது குடும்பம் பெருந்துன்பப்படும். அழகையும் உறவுகளையும் பிற நன்மைகளையும் இழந்து துன்பப்படுவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1463. யோகச் சமாதியின் உள்ளே யகலிடம்**
**யோகச் சமாதியின் உள்ளே யுளரொளி**
**யோகச் சமாதியின் உள்ளே யுளசத்தி**
**யோகச் சமாதி யுகந்தவர் சித்தரே.**

“சிவனடியார்களே, தோழமை நெறியான சகமார்க்கத்தை விரும்பி சமாதியாகிய நிட்டையில் இருப்பவர்கள் திருவருளால் கிடைக்கப்பெறும் அகக்கண்ணால் பரந்த உலகங்களைக் காண்பர். அத்துடன் உள்ளொளியாகிய பேரொளி தோன்றும். அவ்வுள்ளத்தில் திருவருளம்மை காட்சி கொடுப்பாள். இவர்கள் அனைத்துச் சித்திகளையும் பெறுவர். அவர்களே சித்தர் எனப்படுவர்”

“சிவனடியார்களே, நமசிவாயம் நிட்டையில் இருந்து எழுந்ததும் ஆச்சிரமத்தில் நடந்தவற்றைக் கூறுவார். நடக்க இருப்பவற்றையும் கூறுவார். கதிரேசனுக்குப் பெரும் அதிட்டம் வரப்போகிறது என்றார். வெளிநாட்டு நிறுவனம் ஒன்று வந்து அவரிடம் மூச்சுப் பயிற்சியைப் பெற்றுச் சென்றது. வெளிநாட்டவர் வேட்டி அணிந்து கதிரேசனது பாதங்களைத் தொட்டு வணங்கியதை எம்மால் மறக்கமுடியவில்லை. தனபாலசிங்கத்தின் மகன் ராகுலன் நமசிவாயகத்துக்கு உதவி செய்வதோடு நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவரோடு இருப்பவன். அவனை வைத்தியரே என்று கதிரேசன் அழைப்பார். அந்த வருடம் நடைபெற்ற மருத்துவ பீடப்பரீட்சையில் அவன் சித்தியடைந்து இப்போ மருத்துவக் கல்வி பயில்கின்றான். இவ்வாறு அவர் நடந்தவற்றையும் நடப்பவற்றையும் மக்களுக்கு சொல்வார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1464. யோகமும் போகமும் யோகியர்க் காகுமால்**
**யோகஞ் சிவரூபம் உற்றிடும் உள்ளத்தோர்**
**போகம் புவியிற் புருடார்த்த சித்தியது**
**ஆகும் இரண்டும் அழியாத யோகிக்கே.**

‘‘சிவனடியார்களே, அகத்தவமான யோகமும் அதனால் வரும் பயனான போகமும் யோகிக்குத் தானாகவே வந்தமையும் அகத்தவம் என்பது சிவவடிவம். புறப்பொலிவென்பது சிவத்தொண்டு. இவை இரண்டும் உயிருக்கு உறுதியைக் கொடுக்கும். அறம் பொருள் இன்பம் என்பவற்றின் மூலம் வீடுபேறு எய்தும் நிலை உண்டாகும். இந்நிலை யோகியர்க்கு ஒருங்குவந்து சேரும்’’

‘‘நமசிவாயகம் வேற்றூருக்குச் சென்றாலும் அவரைச் சிவனென்றே மக்கள் வணங்குவர். அவரிடம் ஏழைகள் வந்தால் பணக்கார அடியவனைக் கொண்டு உதவிகள் செய்விப்பார். நோயாளி வந்தால் வைத்தியரான சிவனடியாரைக் கொண்டு நோய்களைத் தீர்த்து வைப்பார். அவரிடம் உதவிகள் பெறப்பலர் வருவர். அதுபோல உதவிடவும் பலர் வருவர். இது சிவன் அவருக்கு அளித்த கொடை. இருந்த இடத்தில் இருந்து கொண்டே அவர் அறம்பொருள் இன்பம் என்ற மூன்றையும் பெற்று அடியவர்களை வாழவைப்பார். இது அவரது அருள்’’ என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1465. ஆதார சோதனை யானாடி சுத்திகள்**
**மேதாதி யீரெண் கலந்தது விண்ணொளி**
**போதா லயத்துப் புலன்கர ணம்புந்தி**
**சாதா ரணங்கெட லாஞ்சக மார்க்கமே.**

‘‘சிவனடியார்களே, ஆறு ஆதாரங்களையும் திருவருளின் துணையால் கண்டு மேல்நோக்குதல் நாடி சுத்திகளாகும். உண்மை பேசுதல் மூலம் நாடி சுத்தமாகும். மேதை மூதலேழ் முதற் பொருட்களும் பதினாறு கலைகளும் கலந்த கலப்பும், பரவெளிப் பரப்பும், ஐம்புலன் அந்தக் சீரணம் நான்கு அகியவற்றை ஆராய்ந்து சீல நிலையினைத் தூண்டல் ஆகியன தோழமை நெறியாகும்’’.

‘‘சிவனடியார்களே, ஒருமுறை ஆச்சிரமத்திற்கு வந்த ஒருவன் தனக்கு தீராத நோய் உள்ளதாகவும் அதைத்தீர்த்து வைக்குமாறும் கேட்டான். சிறிது நேரம் யோசித்த நமசிவாயம். உன்னிடம் அளவுக்கதிகமான சொத்திருக்கு. உனக்குப் பிள்ளைகள் இல்லை. மனைவியும் இறந்து விட்டாள். அதனால் உறவினர்கள் உனது சொத்திற்கு ஆசைப்பட்டு உன்னைத் துன்புறுத்துகிறார்கள். சொத்துக்களை

இழந்தால் உனது நோய் தீரும். அவர்களின் துன்புறுத்தலால் தான் பல நோய்கள் உன் உடலுள்ப் புகுந்து வருந்துகின்றன'' என்றார். அதற்கு அவன் சொன்னான் உண்மை தான் சுவாமி. அவர்களுக்குக் கொடுக்க எனக்கு விருப்பமில்லை'' என்றான். பின் சொன்னான், ''எனது சொத்து முழுவதையும் நான் படித்த பாடசாலைக்கும் ஆச்சிரமத்திற்கும் எழுதி வைத்து விட்டு இங்கேயே தங்க விரும்புகிறேன்'' என்றான். நமசிவாயம் ஒத்துக் கொண்டார். இப்போ அவன் ஆரோக்கியத்துடன் ஆச்சிரமத்தில் இருக்கிறான்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1466. பிணங்கிநிற் கின்றவை யைந்தையும் பின்னை**
**அணங்கி யெறிவ னயிர்மன வாளாற்**
**கணம்பதி னெட்டுங் கருதும் ஒருவன்**
**வணங்கவல் லான்சிந்தை வந்துநின் றானே.**

''சிவனடியார்களே, ஆருயிர்களுடன் மாறுபட்டு நிற்கின்ற இருபந்தைந்து மெய்களையும், அகத்தவத்தால் வரும் பதிணெட்டுக் குழுவினரும் கைகூப்பி வணங்கும் சிவபெருமானை வணங்குவோர் உள்ளதில் அவன் வெளிப்பட்டு வந்து அருள்வன்''.

''சிவனடியார்களே, நமசிவாயம் ஏதோ ஒரு துடிப்பில் ஆச்சிரமத்திற்கு வந்தானே தவிர அவனது மனம் பக்குவப்படவில்லை. அதனால் பல வழிகளாலும் துன்பப்படுவான். சில சமயங்களில் நள்ளிரவு வேளையில் தான் காதலித்த பெண்ணின் பெயரைச்சொல்லிக் கத்துவான். கொலை செய்வேன் என்று சபதம் செய்வான். குருசாந்தமானவர். அவர் அவனுக்கு மன அடக்கப் பயிற்சியை வழங்கினார். பின்பு மூச்சுப் பயிற்சியைச் சொல்லிக் கொடுத்தார். நாளடைவில் அவனது மனம் பக்குவப்பட்டது. அதனால் அவன் அமைதியானான். தீவிரமாகத் தியானத்தில் ஈடுபட்டான். அடியார்களின் குறைகளை அறிந்து முழுமையாகத் தீர்த்து வைக்கும் சிவபெருமான் அவனது உள்ளத்தில் வெளிப்பட்டு அருளினார் . அதனால் அவன் அகத்தவம் செய்தான். அதனால் அவனுக்குச் சித்திகள் பலவும் வந்து சேர்ந்தன'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1467. வளங்கனி யொக்கும் வளநிறத் தார்க்கும்**

**வளங்கனி யொப்பதோர் வாய்மைய னாகும்**
**உளங்கனிந் துள்ள முகந்திருப் பார்க்குப்**
**பழங்கனிந் துள்ளே பகுந்துநின்றானே.**

“சிவனடியார்களே, வளங்கள் பலவற்றையும் கன்னியான திருமகளின் மார்பில் வீற்றிருக்கும் திருமால் வளம்மிக்க களங்கனியின் நிறத்தை உடையவர் அத்திருமாலுக்கும் முதன்மை வாய்ந்த மெய்ப்பொருளாக இருப்பவன் சிவன். சிவனை வழிபட்டு திருவருளினால் உயர்ந்திருப்பவர்கள் மெய்யடியார்கள். திருவடிப் பேரின்பமாகிய பழம் கனிந்ததும் அம் மெய்யடியார்க்கு அதனைப் பகிர்ந்து கொடுத்து உடன் நின்று அருள்பவன் சிவன்”

“சிவனடியார்களே, நமசிவாயகம் எல்லா ளேையிலும் சிவனை நினைப்பதால் திருவருள் என்ற கனி நன்றாகக் கனிந்து விட்டது அதை முழுமையாகச் சிவன் நமசிவாயகத்திற்குக் கொடுத்ததால் அவன் ஞானப் பழமாகி விட்டான். எல்லோருடனும் மிகமிக அன்பாகப் பேசுவான். யாரும் ஏதாவது உதவி கேட்டால் நாளை வாருங்கள் என்பான். மறுநாள் வந்தால் அவர்கள் கேட்டதைக் கொடுப்பான். குரு ஒருமுறை, “கேட்பவர்கள் அனைவரையும் நாளை வா என்கிறாயே. இது ஏன்? என்று கேட்டார். அதற்கு அவன் சொன்னான், “சிவன் எத்தனை கோடி மெய்யடியார்களுக்கு உதவ வேண்டும். எனது திறமையாலோ உழைப்பாலோ நான் எதையும் கொடுப்பதில்லை. சிவனின் திருவருள்தருகிறது. அவரிடம் பெற்றுக் கொடுக்கிறேன் அதற்கு அவருக்கு அவகாசம் வேண்டாமா? என்றவன்” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

## 11. சற்புத்திர மார்க்கம்

### (மகன்மை நெறி)

**1468. மேவிய சற்புத் திரமார்க்க மே தொழில்**
**தாவிப்ப தாஞ்சக மார்க்கஞ் சகத்தொழில்**
**ஆவ திரண்டும் அகன்று சகமார்க்கத்**
**தேவியோ டொன்றல் சன்மார்க்கத் தெளிவதே.**

“சிவனடியார்களே, தோழமை நெறியாக சகமார்க்கத்தை நிலை நிறுத்துவது சற்புத்திர மார்க்கமான மகன்மை நெறியாகும். சகமார்க்கமான அகத்தவமும் மனத் தவமும் ஆகிய இரண்டும் காதன்மை நெறியாகிய சன்மார்க்க நெறியின் அடிப்படையாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1469. பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்**
**ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை**
**நேசித்திட் டன்னமும் நீசுத்தி செய்தன்மற்**
**றாசற்ற சற்புத் திரமார்க்க மாகுமே.**

"சிவனடியார்களே, மகன்மையான சற்புத்திர மார்க்கத் நிற்பவர்கள் திருமுறைகளை எழுதல். ஓதுதல், அர்ச்சித்தல், திருவைந்தெழுத்தைக் கணித்தல் ஆகியவற்றுடன் நற்றவமும் செய்தல் வேண்டும். வாய்மையும் , பொறாமைப்படாமையும் கைக்கொள்ள வேண்டிய ஒழுக்கங்கள் ஆகும். அவர்கள் படைப்பது அன்பை. திருவுருக்குத் திருமுழுக்குச் செய்தல் தன்னைத் தூய்மைப்படுத்துவதற்காக" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1470. அறுகாற் பறவை அவர்தேர்ந் துழலும்**
**மறுகா நரையன்னந் தாமரை நீலங்**
**குறுகா நறுமலர் கொய்வன கண்டுஞ்**
**சிறுகால் அறநெறி சேரகி லாரே.**

"சிவனடியார்களே, வண்டுகள் தேனை உண்பதற்காக அழகிய நறுமணம் கமழும் தேன் நிறைந்த பூக்களைத் தேடிச்செல்கின்றன. அதுபோல வெள்ளை அன்னங்கள் தாமரை மலர்களை விரும்பி நாடிச் செல்லும். அத்தகைய பெருமையுள்ள தாமரை நீலம் முதலிய பூக்களை மெய்யடியார்கள் பல்துலக்கி முகம் கழுவி நீராடி உள்ளம் திருவைந்தெழுத்தை ஓதக் கொய்து வந்து சூட்டுவதைக் கண்டும் சிலர் அவற்றைப் பின்பற்றாது அறமற்ற செயல்களைச் செய்து துன்பப்படுகின்றனர்."

"சிவனடியார்களே, ஆச்சிரமத்திற்கு வரும் சிலர் தூய்மையில்லாமலும் ஐந்தெழுத்தை ஓதாமலும் பூக்களைப் பறித்துக் கொண்டு வருகின்றனர்" என்று சொல்லி நமசிவாயகம் ஆச்சிரமத்துள்த் தரிசாக இருந்த நிலத்தைத் திருத்தி நந்தவனம் அமைத்து அதிகாலையில் வண்டினம் எழுமுன் எழுந்து காலைக்கடனை முடித்துக் குளித்து விட்டுக் கூடையுடன் நந்தவனத்திற்குச் சென்று பூப்பறிப்பான். நந்தவனத்துள் குளிக்காது யாரையும் செல்லவிட மாட்டான். வெளியில் இருந்து பூக்கொண்டு வர அனுமதிக்க மாட்டான். பூவால் அர்ச்சனை செய்யவிரும்பினால் நந்தவனத்தில் வேலை செய்யும்படி சொல்வான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1471. அருங்கரை யாவது அவ்வடி நீழற்**
**பெருங்கரை யாவது பிஞ்ஞக னாணை**
**வருங்கரை யேகின்ற மன்னுயிர்க் கெல்லாம்**
**ஒருங்கரை யாயுல கேழினொத் தானே.**

“சிவனடியார்களே, ஆருயிர்கள் பிறபபெனும் பெருங்கடலை நீந்திக் கரையேறும் இடமாகச் சிவபெருமானின் திருவடி நிழலாலே இருத்தல் வேண்டும். அனைத்துயிர்களுக்கும் பேரெல்லையாகத் திகழ்வது சிவனது ஆணையாகும். வினைக்கேதுவாக வரும் பிறப்புக்களுள்ப் புகும் உயிர்களுக்கும் உலகிற்கும் ஒப்பில்லாத ஒரு வேந்தனாகத் தோன்றி ஒப்ப நின்று அருளுபவன் சிவன்”.

“நமசிவாயகம் சொல்வான், சுவாமி வீட்டில் குற்றங்கள் ஆயிரமிருக்கும். அதனால் அங்கு பூக்கும் பூக்களும் குற்ற முள்ளதாகவே இருக்கும். பூப்பறிப்போர் தூய்மை இல்லாததும்பறிப்பர். அவையாவும் குற்றமான வினையாகிப் பெருகும். பிறப்பை அறுக்கத்தொண்டு செய்வோர் தூய்மையாகவும் சிவ நினைவாகவும் செய்தால் தான் பிறப் பெருங்கடலைக் கடப்பர். கடந்து சென்று சிவனின் திருவடி நிழலை அடைவர். அதற்காகத்தான் சொன்னேன் எல்லோரும் சிவனுக்குப் பூப்பறித்துக் கொடுக்கிறார்கள் என்று நினைத்துத் தாமும் பறிப்போர் அறியாமையால் வழிபாட்டில் பின் நிற்கின்றனர்” என்று அடிக்கடி நமசிவாயம் சொல்வான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1472. உயர்ந்தும் பணிந்தும் முகந்துந் தழுவி**
**வியந்தும் அரனடிக் கே முறை செய்மின்**
**பயந்தும் பிறவிப் பயனது வாகும்**
**பயந்து பரிக்கிலப் பான்மைய னாமே.**

“ சிவனடியார்களே, திருவேடப் பொலிவால் உயர்ந்தும், சிவனடியார்கின் திருவடியைப் பணித்தும், அதனால் மனம் மகிழ்ந்தும், திருவைந்தெழுத்தை ஓதியும், ஆனால் மகிழ்ந்தும் சிவனது திருவடியினை நினைத்துத் தொண்டு செய்பவர்களே சற்புத்திர மார்க்கத்தை விரும்பிக் கடைப்பிடிப்போராவார். அப்பணியினை விருப்புடன் சிவபெருமான் தாங்கிக் கொள்வான்”

“சிவனடியார்களே, நமசிவாயம் சொல்வார் “திருவேடப் பொலிவால் உயர்வடையலாம். திருவேடத்துடன் வருவோரைச் சிவனென நினைத்து வழிபடல்

வேண்டும்'' என்பான். ஒருநாள் அருகில் உள்ள சிறுவர் பாடசாலையில் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. அப்பாடசாலைப் பிள்ளைகள் ஆச்சிரமத்துக் வந்தால் யாருடனும் கலகலப்பாகப் பேசாத நமசிவாயம் அவர்களுடன் மகிழ்து பேசி ஓடி விளையாடுவான். அச்சிறுவர்களின் வேண்டுகோளுக்காக அவன் பாடசாலைக்குச் சென்றான். அங்கு விநோத உடைப்போட்டி நடைபெற்றது. ஒரு அழகான சிறுவன் முருகனது வேடம் தாங்கி வேலுடன் வந்தான். அவனைக் கண்டதும், ''முருகன் வந்து விட்டான். உனது அழகு முருகனை எனக்கு நினைவூட்டுகிறது'' என்று கூறி அவனது பாதங்களில் விழுந்து வணங்கினான். எல்லோரும் திகைத்து விட்டனர். அச் சிறுவனுக்கு முருகனது திருவேடம் முழுமையாகப் பொருந்தியதால் பரவசமாகி வணங்கிவிட்டான்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1473. நின்று தொழுவன் கிடந்தெம் பிரான்தன்னை**
**என்றுந் தொழுவன் எழிற்பரஞ் சோதியைத்**
**துன்று மலர்தூவித் தொழுமின் தொழுந்தோறுஞ்**
**சென்று வெளிப்படுந் தேவர் பிரானே.**

''சிவனடியார்களே, நமசிவாயம் சொல்வார் , ''அருள்வழி நின்று எம்பிரானான சிவனைத் தொழுதால் சிவப்பேரொளி தோன்றும். அச் சிவப்பேரொளியைத் தினமும் நான் தொழுவேன். மெய்யன்பர்களே நீங்கள் எல்லோரும் திருமுறைகளைப் பாடி மலர்களைச் சூடி அவனது திருவடியைத் தொழுங்கள். அப்படி நீங்கள் உள்ளன்போடு தொழுதால் தயிரிலிருந்து வெளிப்படும் வெண்ணெய் போன்று சிவபெருமான் உங்கள் உள்ளத் தாமரையில் எழுந்தருளி உங்களது குறைகளைத் தீர்ப்பான்''

''சிவனடியார்களே இதை நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும். நேற்று வழமையாக ஆச்சிரமத்திற்கு வரும் அகிலன் என்ற வாலிபன் எனக்கருகில் வந்தான். அவன் மிகவும் ஏழை. அவனது தந்தை விபத்தில் அகப்பட்டு இரண்டு கால்களையும் இழந்தவர். அவனது முகத்தில் பிரகாசம் தெரிந்தது. அவனுக்காக நான் சிவனிடம் இரப்பேன். அவன் சொன்னான், ''சுவாமி தங்கள் சொன்னபடி நான் தினமும் சிவனை வணங்குவேன். நேற்று இரவு சிவபெருமான் எனது உள்ளத்தில்

எழுந்தருளி உனக்கு யாவும் கிடைக்கும் என்றார். எனது நண்பன் ஒருவன் வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிறான். அவனுடன் நான் நாளை வெளிநாட்டுக்குச் செல்கிறேன்'' என்று மகிழ்வுடன் கூறினான் என்று நமசிவாயகம் இன்று சொன்னவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1474. திருமன்னுஞ் சற்புத் திரமார்க்கச் சரியை**
**உருமன்னி வாழும் உலகத்தீர் கேண்மின்**
**கருமன்னு பாசங் கைகூம்பத் தொழுது**
**இருமன்னு நாடேறும் இன்புற் றிருந்தே.**

''சிவனடியார்களே, நமசிவாயகம் மக்களுக்குச் சிலசமயங்களில் ஏதாவது சொல்ல விரும்புவார். அவர் நன்றாகப் பேசுவார். ஆனால் அளவுக்கதிகமாகப் பேசமாட்டார். மாதத்திற்கு ஓரிரு தடவை மக்கள் தெண்டித்தால் மட்டும் பேசுவார். அவர் சொன்னார், '' என் அருமைச் சிவனடியார்களே, மனிதப் பிறப்புக்கிடைத்தற்கரியது. எதை விரும்புகிறோமோ அதைச் சிவனின் அருளால் உண்டாகும் முயற்சியால் பெற்றுக் கொள்ளலாம். அப்படியான மனிதப் பிறப்பைப் பெற்ற மக்களே, தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள் சற்புத்திரமார்க்க நெறி நிற்பவர்கள் சிவனைத் தனது தந்தை என்று எண்ணி வழிபடுவர். ஒரு பிள்ளை தனக்குத் தேவையானவற்றைக் கேட்டுப்பெறும். அதுபோலத் தந்தை தனது பிள்ளைக்கு வேண்டியவற்றைச் செய்வார். அதனால் கேட்டுப்பெறுங்கள். பிறவித்துன்பம் அகலும், பிறவிக்கு வித்தான ஆணவமலம் அழிந்து செயலற்றுப்போகும். இதற்குச் செய்யவேண்டியது தினமும் ஐந்தெழுத்தை ஓதுவதே. இது மிக எளிமையான செலவுகள் அற்ற நிலை. அந்த நிலையில் இருந்து தான் நான் என் தந்தையாகிய சிவனுக்கு யார் யாருக்கு உதவிகள் தேவையென்று கூறுகிறேன். அதை அவர் புத்திர பாசத்துடன் ஏற்றுச் செயலாற்றுகிறார் என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி மூர்த்தி சுவாமிகள்.

# 15. தாசமார்க்கம்

( அடிமைநெறி)

**1475. எளியனல் தீப மிடல்மலர் கொய்தல்**
**அளிதின் மெழுக லதுதூர்த்தல் வாழ்த்தல்**
**டளிமணி பற்றல் பன்மஞ் சனமாதி**
**தளிதொழில் செய்வது தான்தாச மார்க்கமே.**

“சிவனடியார்களே, அடியவர்களுக்கு அடியவனாக இருத்தல், விளக்கிடுதல், நந்தவனம் அமைத்தல், பூப்பறித்து மாலை கட்டல், மெழுகுதல், திருமுறைகளை ஓதல், ஓதுவித்தல், மணி அடித்தல், கழுவுதல், கூட்டுதல், இவ்வாறான தொண்டுகளைக் கோவிலில் செய்தல் அடிமை நெறி எனப்படும்”.

“சிவனடியார்களே, கதிர்காமநாதன் இருபத்தைந்து வயது இளைஞன். நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து நிர்வாகியாகப் பதவிவகிப்பவன். படிக்கும் போது அவன் மிகவும் ஏழை. கதிரேசனின் உதவியோடு தான் கற்றவன். அப்போது கதிரேசனுடன் சேர்ந்து கோவிலில் திருத்தொண்டுகள் பலவும் செய்வான். சிவனருளால் தான் தனக்குப் பெரியதொரு தொழில் கிடைத்தது என்று நினைத்துக் காலையும், மாலையும் திருத்தொண்டுகள் செய்பவன். அவனுக்குத் திருமணம் பேசப்பட்டது. மதிவதனி பெரும் தனவந்தனின் மகள். ஆடம்பரப்பிரியை நாகரிகத்தின் உச்சியில் இருப்பவள். கல்யாணத்தரகர் கதிர்காமநாதனின் சாதகத்தைக் கொடுக்க மதிவதனியின் தந்தை அதைச் சோதிடரிடம் கொடுத்த பார்த்தபோது தொண்ணூறு வீதப் பொருத்தம் இருப்பதாகச் சோதிடர் சொன்னார். அதனால் அவர்கதிர்காமநாதன் வேலை செய்யும் இடத்திற்குச் சென்று அவனைப் பார்த்தார். மிகவும் அழகாகவும் துடிப்பாகவும் அவன் இருந்தான். விசாரித்ததில் அவனிடம் எந்தக் குறைகளும் இருக்கவில்லை. அவர் சம்மதித்தார். மதிவதனி தான் மாப்பிளையைப் பாராமால் திருமணத்திற்குச் சம்மதிக்கமாட்டேன் என்றாள் கல்யாணத் தரகன் அவளை அழைத்துக்கொண்டு அலுவலகத்திற்குச் சென்றான். அன்று அவன் விடுமுறையில் நின்று அடுத்தவாரம் கொடியேறவுள்ள சிவன் கோவிலைத் துப்பரவு செய்யச் சென்றுவிட்டான். அதனால் தரகனும் மதிவதனியும் கோவிலுக்குச் சென்றனர். தரகனுக்கு கதிர்காம நாதனைத் தெரியும். அவர் தேடிப்பார்த்தார். அவனைக் காணவில்லை. அதனால் அவர் ஒருவரை விசாரித்தார். “அவர்தான் கதிர்காமநாதன் என்ன விடயம்” என்று கேட்டான். தரகர் திகைத்துப் போனார். அவனது தலைமுழுவதும் புழுதி. மேற்சட்டை இல்லை. மடித்துக்கட்டிய வேட்டி. விளக்குமாற்றுடன் நின்ற அவனை மதிவதனிக்குக் காட்ட “இவனா மாப்பிளை பட்டிக்காட்டான் என்று கூறிவிட்டுச் சென்று தந்தையோடு சண்டை பிடித்தாள்.

எவ்வளவோ சொல்லியும் அவள் சம்மதிக்கவில்லை'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1476. அதுவிது வாதிப் பாரமென் றகல்வர்**
**இதுவழி யென்றங் கிறைஞ்சின ரில்லை.**
**விதிவழி யே சென்று வேந்தனை நாடும்**
**அதுவிது நெஞ்சில் தணிக்கின்ற வாறே.**

''சிவனடியார்களே, கல்யாணத்தரகன் மதிவதனிக்குச் சொன்னான், ''மதி, கதிர்காமநாதன் பக்திமான். ஒழுக்கமானவன். சிறந்த அறிவாளி. அவன் கோவிலில் திருத்தொண்டு புரிந்ததால் தான் தனக்கு உயர் பதவி கிடைத்தது என்று எண்ணித் திருத்தெண்டுகள் செய்கிறான். அவனது அலுவலகத்தில் சென்றுபார் எவ்வளவு அழகானவன் என்று தெரியும். அவனைப் போல வெள்ளைக்காரனும் ஆங்கிலம் பேச மாட்டான். நீ ஆதியானபரம் பொருள் சிவபெருமான் என்று தெரியாது பேசுகிறாய். தற்கால இளைஞர்கள் சிவபெருமானின் பெருமைகளை அறியாததால் உன்னைப் போல வழிபடுவதில்லை. நம்பியவர்களுக்கு எல்லா நன்மைகளையும் செய்யும் சிவபெருமானைத் திருமுறைகளைப் பாடித்தொண்டுகள் செய்து வழிபடல் வேண்டும். அதனால் எல்லா நன்மைகளும் வந்து சேரும். நீ சிவனை வழிபடு அவர் உனது சந்தேகங்களை நீக்கித் தெளிவைத் தருவார்'' என்று கூற மதிவதனி சொன்னாள், ''இந்தப்பட்டிக்காட்டைத் திருமணம் செய்தால் கோவணத்துடன் கோவிலுக்கு வந்து விடும். நான் எவ்வளவோ கனவுகளுடன் இருக்கிறேன். இவரைச் செய்தால் நானும் விளக்குமாற்றுடன் கோவிலில் தான் நிற்க வேண்டும். எனக்கு வேண்டாம்'' என்று கூறிவிட்டுச் சென்று விட்டாள்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1477. அந்திப்பன் திங்க ளதன்பின்பு ஞாயிறு**
**சிந்திப்பன் என்றும் ஒருவன் செறிகழல்**
**வந்திப்ப வானவர் தேவனை நாடொறும்**
**வந்திப்ப தெல்லாம் வகையின் முடிந்ததே.**

''சிவனடியார்களே, கதிர்காமநாதனைப்பற்றி கேட்டவர்கள் எல்லோரும் மிகவும் உயர்வாகச் சொல்ல மதிவதனியின் தந்தையான சிவகுரு கதிரேசனிடம் வந்தார். கதிரேசன் சொன்னார், ''ஐயா, உங்களை எனக்குத் தெரியாது. கதிர்காம நாதன் எனது கைக்குள் இருந்து வளர்ந்தவன். அவன் திருவருளின் துணையால் திங்களாகிய

இடகலையையும் ஞாயிறாகிய பிங்கலையையும் அடக்கியவன். அத்துடன் தினமும் சிவபெருமானின் திருவடியை வணங்குபவன். தான் சிவனின் அடிமை என்று நினைத்துத் தொண்டுகள் செய்பவன். அவ்வாறு வணங்குவோர் சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நன்நெறிகளையும் பின்பற்றுபவர். உங்கள் மகள் நாகரிகப்பிரியை. அதனால் இத்திருமணம் சரிவராது. அவன் கோவிலைக் கூட்டினால் குப்பைகளை அகற்றக்கூடிய பெண்தான் தனக்குத் தேவை என்கிறான். வீட்டில் விளக்குமாறு எடுக்காத பெண் கோவிலில் எடுப்பாளா...? தயவு செய்து இந்தப் பேச்சை இன்றுடன் விட்டு விடுங்கள் என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1478. அண்ணலை வானவர் ஆயிரம் பேர்சொல்லி**
**உன்னுவர் உள்மகிழ்ந் துண்ணின் றடிதொழக்**
**கண்ணவ னென்ற கருது மவர்கட்குப்**
**பண்ணவன் பேரன்பு பற்றிநின் றானே.**

''சிவனடியார்களே, கதிர்காமநாதன் விரைவில் பதவியுயர்வு பெற்று நாட்டின் பெரும் பதவிகளை வகிப்பான். அவன் தான் சிவனது அடிமை என்று நினைப்பதால் அனைவரோடும் அன்பாகப் பழகுபவன் . அதனால் அவனை எல்லோரும் விரும்புகிறார்கள் என்று அவனது மேலதிகாரி சொன்னதால் எப்படியும் அவனை மதிவதனிக்குத் திருமணம் செய்து விடல் வேண்டும் என்று நினைத்த சிவகுரு எதுவும் பேசாது இருந்தார். அதனால் கதிரேசன் சொன்னார், ''ஐயா, ஒரு நாமத்தையும், ஒரு உருவத்தையும் தவிர வேறு எதுவும் இல்லாத சிவனை வானவர்கள் ஆயிரம் பெயர்களை உடைய அண்ணல் எனக் கூறி வழிபடுகின்றனர். அவரை எண்ணிணாலே போதும் உடனே அவன் மனம் மகிழ்ந்து உயிருக்குள் உயிராய் உள்ளே நின்று வேண்டியவற்றைச் செய்து உதவுவான். அத்துடன் நினைப்பவர் மீது பேரன்பு பூண்டு அவர்களைப் பற்றி நிற்பான். உலகைப் படைத்துக் காத்தருளும் அவனது தோற்றம் எப்படியானது. பொன்னையும் மாணிக்கங்களையும் படைத்த அவன் அணிவது எலும்பு மாலை பூசுவது சுடலைச் சாம்பல் அதற்காக மக்களும் தேவர்களும் வழிபாடமலா விடுகிறார்கள். தற்போதைய பெண்கள் வெளியுருவத்தைப் பார்க்கிறார்களே தவிர உள்ளுணர்வுகளைப் புரிந்து கொள்வதில்லை. அதற்குப் பெற்றோரும் ஆதரவளிக்கின்றனர் என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1479. வாசித்தும் பூசித்தும் மாமலர் கொய்த்திட்டும்**
**பாசிக் குளத்தில்வீழ் கல்லா மனம்பார்க்கின்**
**மாசற்ற சோதி மணிமிடற் றண்ணலை**
**நேசத் திருந்த நினைவறி யாரே.**

‘‘சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், ‘‘ஐயா, பாசிக்குளம்போலுள்ள கருவறைக் குழியில் அடிக்கடி விழுந்து புரமும் உயிர்களே அதிகம். நல்லவர்கள் திருத்தொண்டுகளைச் செய்தும், திருமுறைகளை ஓதியும் சிவனைப் பூசித்தும், நறுமலர்களைக் கொய்து படைத்தும் இயல்பாகவே மாசற்ற சோதிப்பிழம்பான திருநீலகண்டப் பெருமானை நினைத்துப் பெருங்காதல் கொண்டு வழிபட்டுப் பெறும் பேற்றினை அறியாதவர்கள் தான் சிவனை நினைப்பதில்லை. சிவனடியார்களை மதிப்பதில்லை. மிகமிக ஏழையான கதிர்காமநாதன் சிவபக்தன். மிகமிகப் பணக்காரியான உங்கள் மகள் சிவத்தொண்டை மதிக்காதவள். இரு துருவங்களாக இருக்கும் அவர்கள் இணையமாட்டார்கள். உங்கள் மகளின் விருப்பத்தில் ஆயிரத்தில் ஒன்றைக் கூடக் கதிர்காமநாதன் நிறைவு செய்யமாட்டான். அதனால் வேறுமாப்பிளை பாருங்கள் என்றவர்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1480. எவ்விடத் தும்பணி யின்மைகண் டுள்ளவர்**
**எவ்விடத் தும்பணி யீசன் பணியென்றே**
**அவ்விடத் தைங்கரு மத்தால் அறிதலால்**
**உவ்விடத் தோருக்கோர் உபாய மில்லையே.**

‘‘சிவனடியார்களே, கதிரேசன் அவ்வாறு கூறியதால் மனமுடைந்த சிவகுரு கதிர்காமநாதனின் தந்தையிடம் சென்று தேவையானயளவு பணம் தருவதாகக் கூறித் தனது மகளைக் கதிர்காமநாதனுக்குத் திருமணம் செய்து வைக்குமாறு கேட்டார். அதற்கு அவர் சொன்னார், ‘‘ஐயா, எனது மகன் கதிரேசனைச் சிவனாக நினைப்பவன். அவர் சொன்னால் கேட்பான். ஆனால் அவர் சொல்லமாட்டார். அவர் திருவடியைச் சேர்ந்த மெய்யடியார். எந்த இடத்திலும் அவர் சிவனின்றி தனக்கொரு பணி இருக்கும் என்று நினைக்காதவர். அத்துடன் தான் செய்யும் பணிகள் அனைத்தும் சிவன் தன்னைக் கொண்டு செய்விக்கிறான் என்று நினைப்பவர். யாரையும் வெறுக்காதவர். உண்மையைப் பேசுபவர். அவரைத் தெய்வமாக மதிக்கும் மகன் அவரின் சொற்களைத் தான் கேட்பான். அவனல்ல இக்கிராமத்து மக்கள் அனைவரும் கதிரேசனின் சொல்லை மீற மாட்டார்கள். வேண்டுமானால்

இன்னொரு முறை நீங்கள் அவரோடு கதைத்துப் பாருங்கள் என்றவர்'' என்றாள் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 13. சாலோகம்.

### (சிவனுலகம்)

**1481. சாலோக மாதி சரியாதி யிற்பெறுஞ்**
**சாலோகஞ் சாமீபந் தங்குஞ் சரியையான்**
**மாலோகஞ் சேரில் வழியாகுஞ் சாரூபம்**
**பாலோகம் இல்லாப் பரனுரு வாமே.**

''சிவனடியார்களே, சிவகுருவுக்கு மீண்டும் கதிரேசனைச் சந்தித்துக் கதைக்க விருப்பமில்லை. ஊரவர்கள் எவரும் அவரது பேச்சை மீற மாட்டார்கள். அத்துடன் அவர் ஒரு முடிவை எடுத்தால் சிவன் சொன்னால் தான் மாற்றுவர். ஆனால் சிவன் சொல்ல மாட்டார். ஏனென்றால் சிவனிடஞ் சொல்லி அவரிடம் அனுமதி பெற்ற பின்பே அவர் முடிவெடுப்பார் என்று அறிந்தபின் அவரிடஞ்செல்ல மனமில்லாமல் இருந்தார். அதனால் கதிர்காமநாதனின் தந்தை கந்தவனம் சொன்னார், ''ஐயா, கதிரேசனது வாக்குச் சிவனின் வாக்கு. அவர் சிவவுலகம், சிவனண்மை, சிவனுருவம், சிவனாம் பெருவாழ்வு என்றும் நான்கு அவரது சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்பவற்றால் வந்தடைந்தவை. சிவ உலக நிலை சீலத்தால் எய்தப்படும். சிவனண்மை நிலை நோன்பால் ஏற்படும். அதனால் உலகத்துடன் தொடர்பில்லாத சிவத்தின் உருவமேற்படும். இந்தநிலையில் தான் கதிரேசன் இருக்கிறார். அவரது எண்ணப்படி தான் யாவும் நடைபெறுகிறது. அதை மீறினால் அச்செயல் நடைபெறாது. உங்களின் மனச்சாந்திக்காக வேறுவழி தெரியாததால் தான் அப்படிச் சொன்னேன் என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1482. சயமயங் கிரியையிற் றன்மனங் கோயில்**

**சமய மனுமுறை தானே விசேடஞ்**
**சமயத்து மூலந் தனைத்தேறன் மூன்றாஞ்**
**சமயாபி டேகந் தானாஞ் சமாதியே**

“சிவனடியார்களே, சிவகுரு யோசித்த வண்ணம் இருப்பதைப் பார்க்கக் கந்தவனத்திற்குக் கவலையாக இருந்தது. அதனால் சொன்னார், “சைவ சமய விதிகள் யாவும் ஆருயிர்களின் நன்மைக்காகவே அமைக்கப்பட்டன. இதை உணராதவர்கள் தான் துன்பப்படுகின்றனர். மனித வாழ்வு வளம் பெறவேண்டும், உயிர்கள் மகிழ்வுடன் இன்பமாக வாழவேண்டும் என்பதையே சைவம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அதை உங்களது மகள் புரிந்து கொள்ளாதது கவலையை அளிக்கிறது. அதற்கு ஒரு வழியில் தாங்களும் காரணமாக இருந்திருக்கிறீர்கள். “நமசிவய” என்றும் திருவைந்தெழுத்தைச் சொன்னால் சொல்பவரின் உள்ளம் திருக்கோவிலாகி விடும். உடனே அதில் சிவன் வந்தமர்ந்து விடுவார். சிவயநம என்னும் திருவைந்தெழுத்தே சிவ நுண்மையாகிய நிருவாணம். ‘சிவய சிவ’ என்பது திருமுழுக்கு அல்லது அபிடேகம். ‘சிவசிவ’ என்பதே திருக்கோவில் என்று எமது ஆச்சிரமத்தில் இருக்கும் சுவாமி சொல்வார்.. உங்களது மகள் ஆச்சிரமப்பக்கமே வருவதிலை. அவளது வாழ்வு வளம் பெற வேண்டுமானால் ‘நமசிவாய’ என்ற தமிழ் மந்திரத்தைக் கணிக்கச் சொல்லுங்கள் என்றவர்” என்றார் சுந்தரமூர7த்தி சுவாமிகள்.

# 14. சாமீபம்

**(சிவனண்மை)**

**1483. பாசம் பசுவான தாகும்இச் சாலோகம்**
**பாசம் அருளான தாகும் இச் சாமீபம்**
**பாசஞ் சிரமான தாகும்இச் சாரூபம்**

**பாசங் கரைபதி சாயுச் சியமே.**

“சிவனடியார்களே, பாசம் பசுவைப் போல நெகிழ்ச்சியுற்ற நிலை சிவ அண்மையில் சிவஉலகாகும். அப்பாசம் அருள்போல வருத்தாது பொருந்தி நிற்பது சிவனண்மையாகும். பாசம் தோற்றத்தின் அளவாக நிற்பது சிவ உருவமாகும். பாசமும் தோற்றமும் ஒடுங்கி நிற்பது சிவனாதலாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

# 15. சாரூபம்

**(சிவனுருவாதல்)**

**1484. தங்கிய சாருபத் தானெட்டாம் யோகமாந்**
**தங்குஞ் சன்மார்க்கந் தனிலன்றிக் கைகூடா**
**அங்கத் துடல்சித்தி சாதன ராகுவர்**
**இங்கிவ ராக விழிவற்ற யோகமே.**

“சிவனடியார்களே, எண்வகை உறுப்புக்களால் அமைந்த சிவயோக நெறியாளன் பெறுவது சிவனது உருவத்தை . இந்நிலை சீலம், நோன்பு, செறிவு, அறிவு, என வழங்கப்படும் நன்னெறியாகிய சன்மார்கதிலன்றிக் கிடையாது. அச் சிவயோகர் உடலுறுப்புக்களோடு கூடி இருந்தாலும் சித்திப்பயிற்சி பெற்றவராவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1485. சயிலலோ கத்தினைச் சார்ந்த பொழுதே**
**சயிலம தாகுஞ் சராசரம் போலப்**
**பயிலுங் குருவின் பதிபுக்க போதே**
**கயிலை இறைவன் கதிர்வடி வாமே.**

“சிவனடியார்களே, பொன்மலையின் அருகில் உள்ள பொருட்களெல்லாம் அப் பொன் வண்ணமாகுதல் போன்று சிவகுரு வீற்றிருக்கும் திருவூரின் கண் சென்றபோதே கைலாய மலையில் வீற்றிருக்கும் சிவ பெருமானது இயல்பான அறிவொளியைப் பெறுபவன் மெய்கண்டாவனாகிய மாணவன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 16. சாயுச்சியம்

**(சிவனாதல்)**

**1486. சைவஞ் சிவனுடன் சம்பந்த மாவது**
**சைவந் தனையறிந் தேசிவஞ் சாருதல்**
**சைவஞ் சிவந்தன்னைச் சாராமல் நீவுதல்**
**சைவஞ் சிவானந்தஞ் சாயுச் சியமே.**

“சிவனடியார்களே, சிவனான நிலையில் முதல்நிலை சைவம் சிவனுடன் தொடர்பு கொண்டு நிற்றல். இரண்டாம் நிலை அந் நெறியின் உணர்வால் சிவனது அண்மையில் சார்ந்து நிற்றல். மூன்றாம் நிலை சார்ந்து நிற்றலைக் கடந்து உடல் முழுவதும் நீறு பூசிய முனிவர் போலவேறின்றி விரவி நிற்றல். இது தான் சிவனது திருவடிப் பேரின்பம் என்னும் சாயுச்சியமாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1487. சாயுச் சியஞ்சாக் கிராதீதஞ் சாருதல்**
**சாயுச் சியமுப சாந்தத்துத் தங்குதல்**
**சாயுச் சியஞ்சிவ மாதல் முடிவிலாச்**
**சாயுச் சியமனத் தானந்த சத்தியே.**

“சிவனடியார்களே, மேலாலவத்தையில் உயிர்ப்பு அடங்கி வேண்டுதல் வேண்டாமை இல்லாமைமயாகிய உலகம் கடந்த உவர்ப்பு நிலை அடைதல் சாயுச்சிய நிலை எனப்படும்.. இதை உபசாந்த நிலை என்றும் கூறப்படும். இது சிவனான பெருநிலையில் தங்குவதாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 17. சத்திநிபாதம்

**(திருவருள் வீழ்ச்சி)**

**1488. இருட்டறை மூலை யிருந்த குமரி**
**குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்**
**குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி**
**மருட்டி யவனை மணம்புரிந் தாளே.**

“சிவனடியார்களே, அறியாமையாகிய இருள் சூழ்ந்த இவ் உடலில் உள்ள அறியாமையை நீக்கி அறிவை விளக்குகின்ற திருவருட்குமரி மூலையில் இருப்பவர் போன்று மறைந்திருப்பாள். அறிவில்லாத குருடர்களைப் போல் இருக்கும் ஆருயிரான கிழவனை கூடுவதற்காகக் அவனுக்கு ஏற்பட்ட குருடாகிய அறியாமையைப் போக்கி சிவபெருமானின் எண்குணங்களையும் விளக்கிக் காட்டி தன் மீது பேரன்பு கொள்ளுமாறு அன்பால் மயக்கி அவனைச் சிவனோடு சேர்த்துத் தானும் கூடியிருப்பாள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1489. தீம்புல னான திசையது சிந்திக்கில்**
**ஆம்புல னாயறி வார்க்கமு தாய்நிற்குந்**
**தேம்புல னான தெளிவறி வார்கட்குக்**
**கோம்புல னாடிய சொல்லையு மாமே.**

“சிவனடியார்களே, திருவடி உணர்வினால் திருவடியை உணர்ந்தவர்களுக்கு இன்ப உணர்வான சிவ உணர்வு அமிழ்தாக நிற்கும். இத்தகைய இனிய உணர்வைப் பெற்றவர்களுக்கு சிவஞானம் எண்ணியவாறு ஐம்புலன்களின் நுகர்வான இன்பங்கள் அனைத்தும் அகத்துள்க் கிடைக்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1490. இருள்நீக்கி எண்ணில் பிறவி கடத்தி**
**அருள்நீங்கா வண்ணமே யாதி யருளும்**

**மருள்நீங்கா வானவர் கோனொடுங் கூடிப்**
**பொருள்இன்பம் நீங்கா இன்பம் புலம்பயில்**
**தானே.**

“சிவனடியார்களே, ஆணவ இருளை நீக்கி, பிறப்புக்களை அறுத்துத் திருவருள் நீங்கா வண்ணம் ஆதியாகிய நடப்பாற்றல் உடன் நின்று அருளும். அவ்வாறு அருளினால் அவ் உயிர்வானவர்களின் தலைவனாகிய சிவபெருமானுடன் கூடி என்றும் நிலைத்திருந்து பேரின்பத்தை அனுபவிக்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1491. இருள்சூ ழறையில் இருந்தது நாடிற்**
**பொருள்சூழ் விளக்கது புக்கெரிந் தாற்போன்**
**மருள்சூழ் மயக்கத்து மாமலர் நந்தி**
**அருள்சூழ் இறைவனும் அம்மையு மாமே.**

“இருள் நிறைந்திருக்கும் அறையுள் இருக்கும் பொருட்களைக் காண விளக்கு உதவுவதுபோல, அகவிருளாகிய மலஇருளை விலக்கத் திருவருள் விளக்குப் போல உதவும். அத்திருவருள் மல இருளை அகற்றி, ஆருயிர் பேரின்பப் பெருவாழ்வைத் தரும் சிவத்துடன் சேர்த்து வைக்கும் இதற்கு வனப்பாற்றல் துணை செய்யும். மெய்ப்பொருளகிய நந்தி ஆருயிரின் நெஞ்சத் தாமரையில் வீற்றிருந்து அருள்வான். அதனால் நந்திமாமலர்நந்தி எனப்படுவன். அத்தகைய நந்தி அவ்வுயிர்களுக்கு ஊணுமாய் விளங்கும் தன்மையினன் ஆகையால் அவனே அம்மை அப்பனுமாவான்” என்றார் சுவாமிகள்.

## மந்தம்
## (மட்டம்)

**1492. மருட்டிப் புணர்ந்து மயக்கமும் நீக்கி**
**வெருட்டி வினையறுத் தின்பம் விளைத்துக்**
**குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி**
**அருட்டிக்கழ் ஞான மதுபுரிந் தானே.**

“சிவனடியார்களே, திருவருளம்மை ஆருயிர்களைத் தன்மீது அன்பு கொள்ளும்படி மயக்கித் தன்னோடு கூடவைப்பள். அவள் தான் மலத்தின் பிணிப்பால் மாயையின் கண் மயங்கிக் கிடக்கின்ற உயிர்களின் மயக்கத்தை நீக்கியருள்பவள்.

அச்சுறுத்தி வினைகளை அறுத்துத் திருவடி இன்பத்தை அனுபவிக்க வைப்பவளும் அவளே. அவளே ஞானக்கண் பெறாது அகக்கண் குருடாக இருக்கும் உயிர்களுக்குக் குருட்டை நீக்குபவள். பல்வேறு விதமான இன்பங்களைக் கொடுத்துத் திருவருள் வண்ணமாக்கிச் சிவஞானத்தினைப் பதித்தருளுபவளும் அவளே. அவ்வாறு செய்பவள் வனப்பாற்றலாகிய திருவருளம்மை'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1493. கன்னித் துறைபடிந் தாடிய ஆடவர்**
**கன்னித் துறைபடிந் தாடுங் கருத்திலர்**
**கன்னித் துறைபடிந் தாடுங் கருத்துண்டேற்**
**பின்னைப் பிறவி பிறிதில்லை தானே.**

''சிவனடியார்னகளே, கன்னியாகுமரி என்னும் தீர்த்த நீராடியவர்கள் , அத்துடன் தமது வழிபாடு முடிந்து விட்டது என்று அமைந்து விடுகின்றனர். அ∴து அகத்தேவிவிளங்கும் திருவருள் நெறியாகிய கன்னித்துளை படிந்தாடுதற்கு வழியென்று நினைத்து ஆண்டுச் சென்று பயிலும் கருத்துடையவர் அல்லர். அத்திருவடி நெறி வழிச் செல்லும் கருத்துண்டாகுமானால் அவர் பிறவாப் பெருநெறி பற்றிப் பிறப்பற்றுச் சிறப்புடன் வாழ்வர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1494. செய்யன் கரியன் வெளியன்நற் பச்சையன்**
**எய்த வுணர்ந்தவர் எய்வர் இறைவனை**
**மைவென் றகன்ற பகடுரி போர்த்தவெங்**
**கைய னிவனென்று காதல்செய் வீரே.**

''சிவனடியார்களே, படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல் ஆகிய நான்கு தொழில்களுக்கும் கொள்ளும் திருமேனியின் நிறம் முறையே செம்மை, கருமை, பசுமை, என்பனவாகும். இதை உணர்ந்தவர்கள் சிவனின் திருவடியை அடைவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1495. எய்திய காலங்கள் எத்தனை யாயினுந்**
**தையலுந் தானுந் தனிநா யகமென்பர்**
**வைகலுந் தன்னை வணங்கு மவர்கட்குக்**

**கையிற் கருமஞ்செய் காட்டது வாமே.**

“சிவனடியார்களே எத்தனை ஊழிகள் வந்து போனாலும் சிவையும் சிவனும் தான் ஒப்பில்லாத முதல்வராவர். அவர்கள் உண்மையான மெய்யடிடியார்க்கு உண்மைமயறிவின்ப அடையாளத் திருக்கையில் தவ நிலையாற்றக் காட்டியருள்வர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1496. கண்டுகொண் டோமிரண் டுந்தொடர்ந் தாங்கொளி**
**பண்டுபண் டோயும் பரமன் பரஞ்சுடர்**
**வண்டுகொண் டாடு மலர்வார் சடையண்ணல்**
**நின்றுகண் டார்க்கிருள் நீக்கிநின் றானே.**

“சிவனடியார்களே, சந்திரனும் சூரியனும் ஒன்றை ஒன்று தொடர்ந்து வரினும் அவை தளர்ந்து விடும். ஆனால் பரமனாகிய பரஞ்சுடர் என்றும் ஒரே தன்மையாக இருந்து ஒளிரும். கொன்றை மாலையை அணிந்த நீண்ட சடையை உடைய சிவபெருமானின் திருவடியினைச் சீலம், நோன்பு, செறிவு, அறிவு ஆகிய நன்நெறிகள் வழியாகக்கண்ட மேலான அறிவுடையவர்களுக்குச் சிவன் எழுந்தருளி ஆண்டருள்வன்” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

## தீவிரம்
## (முதிர்வு)

**1497. அண்ணிக்கும் பெண்பிள்ளை அப்பனார்**
**தோட்டத்தில்**
**எண்ணிக்கும் ஏழேழ் பிறவி யுணர்விக்கும்**
**உண்ணிற்ப தெல்லாம் ஒழிய முதல்வனைக்**
**கண்ணுற்று நின்ற கனியது வாகுமே.**

“சிவனடியார்களே, அப்பனாரான சிவனிற்கு உடைமையான தோட்டம் ஒன்றுள்ளது. அது ஆருயிர்களின் உடம்பாகும். அவ்வுடம்போடு பொருந்தியிருக்கும் பெண் திருவருளாற்றல் ஆவள். அளவில்லாத ஏழுவகையாகத் தோன்றும் பிறப்புயிருக்கு அத் திருவருள் உணர்வினை உண்டாக்கும் உடம்பின் உள்ளே உள்ள கருவிக் கூட்டங்களும் கருமக் கூட்டங்’களும் திருவருளால் அகற்றியருள்வள். அவை அகன்றதும் சிவக்கனி முழுமையாகப் பொருந்தி நிற்கும்”

**1498. பிறப்பை யறுக்கும் பெருந்தவம் நல்கும்**
**மறப்பை யறுக்கும் வழிபட வைக்குங்**
**குறப்பெண் குவிமுலை கோமள வல்லி**
**சிறப்பொடு பூசனை செய்யநின் றார்க்கே.**

“சிவனடியார்களே, குறப்பெண்ணாகிய திருவருளம்மை செந்தமிழ்த் திருமுறைகளை ஓதி சிறப்புடன் பூசை செய்யும். மெய்யடியார்களுக்கு அவர்களது பிறப்பை அறுப்பாள். நானெறிப் பெருந் தவத்தை நல்குவாள். அறியாமையால் சிவனை மறக்கும் மறப்பை அறுப்பாள். சிவயநம என்னும் திருவைந்தெழுத்தைக் கணித்து இடையறாது வழிபட வைப்பாள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1499. தாங்குமின் எட்டுத் திசைக்குந் தலைமகன்**
**பூங்கமழ் கோதைப் புரிகுழ லாளொடும்**
**ஆங்கது சேரும் அறிவுடை யார்கட்குத்**
**தூங்கொளி நீலந் தொடர்தலு மாமே.**

“சிவனடியார்களே, எட்டுத்திசையிலும் தலைமகனுடன் கூடியிருக்கும் திருவருளம்மையை இடையறாது நினையுங்கள். மணம் கமழும் மலர்களைச் சூடிய கூந்தலை உடைய திருவருளம்மையின் திருவடியை வணங்குகின்ற மெய்யடியார்க்கு நீங்காத ஒளி நீலமாகிய திருவருள் வீழ்ச்சி தொடர்ந்து அருள்புரியும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1500. நணுகினு ஞானக் கொழுந்தொன்று நல்கும்**
**பணிகிலும் பன்மலர் தூவிப் பணிவன்**
**அணுகிய தொன்றறி யாத வொருவன்**
**அணுகும் உலகெங்கும் ஆவியு மாமே.**

“சிவனடியார்களே, பல்வேறு வகையான மலர்களைத் தூவி திருவருளம்மையைப் பணிந்தாலும், அப்பணிவின் வாயிலாக வணங்கினாலும் மெய்யுணர்வையே அவள் தருவாள். சிவபெருமான் வேறற நிற்பினும் வணங்கும் ஆருயிரான கிழவன் அவனருளால் அன்றி தன்னறிவால் காணும் தகைமையன் அல்லன். அத்தகைய சிவபெருமான் உயிர்க்குயிராய் நிற்பது மட்டுமின்றி ஒன்றோடு

ஒன்று நெருங்கிச் சூழலும் அனைத்துலகிற்கும் ஆவியாகவும் நின்று அருள்கின்றனன்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**தீவிரதரம்**
**(முறுகல்)**

**1501. இருவினை நேரொப்பில் இன்னருட் சத்தி**
**குருவென வந்து குணம்பல நீக்கித்**
**தருமெனு ஞானத்தால் தன்செய லற்றால்**
**திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே.**

"சிவனடியார்களே, சீலம் நோன்பு செறிவு அறிவு என்பவற்றால் வரும் நல்வினைப் பயன் , தீவினைப் பயன் ஆகியவற்றில் உள்ளம் தோயாமல் உடல் தோயும் நிலை உண்டாகினால் திருவருளாற்றல் சிவகுருவாக வெளிப்பட்டு வந்து ஆருயிர்களின் மருட் குணங்களை நீக்கித் திருவடியணர்வை உண்டாக்கி ஆணவம், கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் நீக்கி வைக்கும் அப்போது சிவன் அவன் என்றும் சிறப்பான நிலை உண்டாகும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1502. மாலை விளக்கும மதியமும் ஞாயிறுஞ்**
**சால விளக்குந் தளிர்சுடர் அண்ணலுள்**
**ஞானம் விளக்கிய நாதன் என் உள்புகுந்**
**தூனை விளக்கி யுடனிருந்தானே.**

"சிவனடியார்களே, சீலம் நோன்பு செறிவு, அறிவு என்பவற்றால் வரும் நல்வினைப் பயன் தீவினைப் பயன் ஆகியவற்றில் உள்ளம் தோயாமால் உடல் தோயும் நிலை உண்டாகினால் திருவருளாற்றல் சிவகுருவாக வெளிப்பட்டு வந்து ஆருயிர்களின் மருட்குணங்களை நீக்கி திருவடியுணர்வை உண்டாக்கி ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் நீக்கி வைக்கும். அப்போது சிவன் அவன் என்னும் சிறப்பான நிலை உண்டாகும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**18.புறச்சமய தூடணம்.**
**(பிறநெறிப்பிழை)**

**1503. ஆயத்துள் நின்ற அறுசம யங்களுள்**
**காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலா**
**மாயக் குழியில் விழுவர் மனைமக்கள்**
**பாசத்தில் உற்றுப் பதைக்கின்ற வாறே.**

“சிவனடியார்களே, புறச்சமயங்களுள்ளும் மெய் ஆராய்தலின்றி அது அதுவே மெய்மையென மயங்கி நிற்கின்றனர். உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பாலயம் ஆக எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானைக் காணமாட்டாதவர் மெய்ப் பொருளைக் காணாமையால் மீண்டும் கருக்குழியில் வீழ்வர். அவ்வாறு வீழ்வதால் மீண்டும் மீண்டும் பிறந்து குடும்பப்பாசத்திற்கு உட்பட்டுத் துன்புறுவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1504. ஆறு சமய முதலாஞ் சமயங்கள்**
**ஊற தெனவும் உணர்க உணர்பவர்**
**வேற தறவுணர் வார்மெய்க் குருநந்தி**
**யாறி யமைபவர்க் கண்ணிக்குந் தானே.**

“சிவனடியார்களே, ஆறு சமயங்கள் முதலாகக் கொண்டு சொல்லப்படுகின்ற சமயங்கள் அனைத்தும் பிறப்பறுத்துப் பேரின்பம் அடைவதற்குத் தடையாகவே இருக்கும். மெய்யுணர்வுள்ளவர்கள் அச் சமயங்களுக்கு வேறான சித்தாந்தச் செந்நெறியைத் திருவருளின் துணையால் நன்கு உணர்வர். உணர்ந்தால் நந்தியாகிய சிவகுரு வெளிப்பட்டு வந்து அருமறையை அருள்வன். அருளவே அவ் அருள் பெற்றவர்கள் மனம் அடங்கியிருப்பர். அவர்களுக்குச் சிவன் வெளிப்பட்டு இன்புறுத்துவன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1505. உள்ளத்து ளேதான் கரந்தெங்கும் நின்றவன்**
**வள்ளற் றலைவன் மலருறை மாதவன்**
**பொள்ளற் குரம்பை புகுந்து புறப்படுங்**
**கள்ளத் தலைவன் கருத்தறி யார்களே.**

“சிவனடியார்களே, உள்ளத்தினுள்ளே, மறைந்து எங்கும் நீக்கமற வீற்றிருக்கும் வள்ளலாகிய சிவபெருமான் உச்சிக்கு அப்பால் அருள் வெளியில் காணப்படும். ஆயிரம் இதழ்த் தாமரையில் வீற்றிருந்தருளும் அம்மையோடு கூடிய அப்பன். அவன் ஒன்பது ஓட்டைகளை உடைய நிலையில்லாத உடம்பினுள்ப் புகுந்து நிற்பவன். அங்கு நின்று ஆருயிர்களின்

நிலைக்கேற்ப வெளிப்படுபவன். கள்ளத்தலைவனான அவனது மெய்மைக் கருத்தினை யாரும் இலகுவாக அறிய மாட்டார்களா'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1506. உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் என்பவர்க்**
**குள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் எம்மிறை**
**உள்ளத்தும் இல்லை புறத்தில்லை என்பவர்க்**
**குள்ளத்தும் இல்லை புறத்தில்லை தானே.**

''சிவனடியார்களே, எங்கும் நிறைந்துள்ள சிவபெருமானை உள்ளத்தில் இருத்தி அன்புடன் 'சிவயநம' என்ற தமிழ் மறையை ஓதி வழிபடுவர்களுக்குச் சிவபெருமான் வெளிப்பட்டு நன்மை செய்வான்''

''சிவனடியார்களே, ஒரு நாள் நமசிவாயகம் அயலூரில் உள்ள கோவிலுக்குச் சென்ற போது ஏழுவயது மதிக்கத் தக்க மகேந்திரன் என்ற சிறுவன் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தான். அது நமசிவாயகத்திற்கு மிகுந்த கவலையைக் கொடுத்தது. அவனின் அருகிற் சென்று விசாரித்தார். அவனது தாயார் இறந்ததும் தகப்பன் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்ய அவள் மகேந்திரனைக் கொடுமைப் படுத்தியுள்ளாள். அதனால் தான் பிச்சை எடுக்கிறேன் என்று சொல்ல நமசிவாயகம் அவனை அழைத்து வந்து அவனுக்கு 'சிவயநம' என்று கூறிச் சிவனை வணங்குமாறு சொன்னார். அவன் அவ்வாறு சொல்லீ வந்தான். அதனால் அவனது முரட்டுக் குணங்கள் அற்றுப் போயின. அவன் ஆச்சிரமத்தில் இருந்து பாடசாலைக்குச் சென்று வந்தான். ஒருநாள் ஆச்சிரமத்திற்கு வந்த ஒருதனவந்தனின் மனைவி அவனது குணத்தை விரும்பி அவனை அழைத்துச் செல்ல விரும்பினாள். இப்போ அவன் பிள்ளைகள் இல்லாத அந்தத் தனவந்தனின் வாரிசு. பட்டணத்தில் உள்ள மிகப் பெரிய பாடசாலையில் கற்கிறான். அன்போடு வழிபடுபவர்களுக்குச் சிவன் வெளிப்பட்டு அருளுவான்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1507. முதலொன்றா மானை முதுகுடன் வாலுந்**
**திதமுறு கொம்பு செவிதுதிக் கைகான்**
**மதியுடன் அந்தகர் வகை வகை பார்த்தே**
**அதுகூற லொக்கும் ஆறு சமயமே.**

''சிவனடியார்களே, உறுப்புக்களும், உருவமும் ஒன்றாகும். யானையைக் கண்ட குருடர்கள் யானையின் உருவத்தைத் தடவிப் பார்த்து விட்டு இது மலை எஎன்றனர். சிலர் தடவிப் பார்த்துவிட்டு இது துடைப்பம் என்றனர். காதுகளைத்

தடவிப் பார்த்து விட்டு இது முறம் என்றனர். கால்களைத் தடவிப் பார்த்து விட்டு இது உரல் என்றனர். தும்பின்கையைத் தடவிப்பார்த்து விட்டு இது உலக்கை என்றனர். இவ்வாறு ஒவ்வொருவரும் தாம் தடவிப் பார்த்த பகுதியை மனதில் வைத்தே அதன் உருவத்தைக் கணித்தனர். இது போன்றது தான் ஆறு சமயத்தவரின் கொள்கைகளும். கண்ணுள்ள ஒருவன் வந்து இவையானை அல்ல. இவை அனைத்தும் யானையின் ஒவ்வொரு உறுப்புக்கள். இவை அனைத்தும் சேர்ந்ததே யானை என்று அவர்களுக்கு விளக்கினான். இவ்வாறான கண் உள்ளவனே சித்தாந்த சைவன்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1508. ஆறு சமயமுங் கண்டவர் கண்டிலர்**
**ஆறு சமயப் பொருளும் அவனலன்**
**தேறுமின் தேறித் தெளிமின் தெளிந்தபின்**
**மாறுதல் இன்றி மனைபுக லாமே.**

''சிவனடியார்களே, ஆறு வகைச் சமயங்களான வைணவம், சமணம், பஞ்சராத்திரம், பாட்டாசாரியம், உலகாயுதம், சூனியவாதம் ஆகிய இச் சமயங்களைச் சேர்ந்தவர்கள் தனிமுதல்வனான சிவனைக் கண்டதில்லை. இச் சமயத்தவரால் கூறப்படும் பொருளும் சிவனல்ல. இவற்றைத் தெரிந்து கொள்வதற்காகச் சித்தாந்த சைவர்களுடன் ஆராயுங்கள். ஆராய்ந்து தெளியுங்கள். அத்தெளிவு திருவடியாகிய நிலைத்த புகலிடமான சிவனடியைப்புகுந்து பேரின்பமடைவதாகும் என்பதை உணர்த்தும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1509. சிவமல்ல தில்லை யறையே சிவமாந்**
**தவமல்ல தில்லை தலைப்படு வார்க்கிங்**
**கவமல்ல தில்லை அறுசம யங்கள்**
**தவம்வல்ல நந்திதான் சார்ந்துய்யு நீரே.**

''சிவனடியார்களே, மறைநூல்களை ஆராயின் அவை சிவபெருமான் அன்றி வேறு ஒரு முழுமுதல் தலைவன் ஒருபோதும் இல்லையென்று கூறும். சிவம் தான் பெருவாழ்வு தரும். சீலம் நோன்பு செறிவு அறிவு என்பவற்றைத் தவிர இறப்பில் தவமின்றி வேறு தவம் இல்லை. திருவடிப் பேற்றை எய்தவுள்ள செந்நெறிச் செல்வர்கட்கு மேல் ஓதியனவன்றி ஆறு சமயத்தாரின் தவம் அவமேயாகும். தவத்தால் வெளிப்பட்டருளும் சிவகுருவாகிய நந்தியெங்கடவுளின் திருவடியினைச் சார்ந்து உய்யுங்கள்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1510. அண்ணலை நாடிய ஆறு சமயமும்**
**விண்ணவ ராக மிகவும் விரும்பியேம்**
**உண்ணின் றழிய முயன்றில ராதலான்**
**மண்ணின் றொழியும் வகையறி யார்களே.**

“சிவனடியார்களே, சிவபெருமானின் திருவடியை அடைய வேண்டும் என்று எண்ணி முயலும் ஆறு அகச் சமயத்தவர்களும் பிறரும் அதை விடுத்து தாங்களே தேவர்களாக வேண்டும் என்று மிக்க ஆசை கொள்கின்றனர். ஆனால் பிறப்புக்கு வித்தாக உள்ள ஆசைகளை ஒழிக்க முயல்வதில்லை. அதனால் பிறப்பை ஒழிக்க அறுக்கத்துணை செய்யும் செந்நெறியில் நிற்கும் வகையை அறியாதவர்களாகவே இருக்கின்றனர்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1511. சிவகதி யேகதி மற்றுள்ள எல்லாம்**
**பவகதி பாசப் பிறவியொன் றுண்டு**
**தவகதி தன்னொடு நேரொன்று**
**தோன்றில்அவகதி மூவரும் அவ்வகை யாமே.**

‘‘சிவனடியார்களே, நானறி சேர் நன்நெறியே சிவபெருமானது திருவடியைச் சேர்ப்பிக்கும் முழுத்தவநெறியாகும். அது தவிர்ந்த ஏனைய நெறிகள் யாவும் பாசம் அறாமையால் பிறப்புக்களைத் தரும். சிறப்பில்லாத நெறிகளாகும். சர்மார்க்கம் தோன்றில் அதுவே சிவத்தை அடையவைக்கும் தவவழியாகும். விண்ணவர்களுக்கு மேலானவர்களான அயன் அரி அரன் ஆகிய மூவரும் சிவனை மதியாமையால் பெருந்துன்பப்பட்டனர். சிவத்தைப்பேணுவதே தவத்திற்கு அழகு’’ என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1512. நூறு சமயம் உளவா நுவலுங்கால்**
**ஆறு சமயமவ் வாறுட் படுவன**
**கூறு சமயங்கள் கொண்ட நெறிநில்லா**
**வீறு பரநெறி யில்லா நெறியன்றே.**

‘‘உலகெங்கும் பற்பலசமயங்கள் உள்ளன. அவை யாவும் ஆறுசமயங்கள் கூறும் பொருட்களையே பெரும் பாலும் கூறுகின்றன.. இவ்வாறு கூறும் சமயங்களின் நெறியினைப் படி முறையாகக் கடந்து இவற்றிற்கு மேலாக உள்ளது பரநெறியாகிய சிவநெறியேயாகும். சிவனது திருவடியே என்றும் பேரின்பம் தரும் இல்லம் என்று தெரிந்து கொள்ளுங்கள்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1513. கத்துங் கழுதைகள் போலுங் கலதிகள்**
**சுத்த சிவனெங்குத் தோய்வுற்று நிற்கின்றான்**
**குற்றந் தெளியார் குணங்கொண்டு கோதாட்டார்**
**பித்தேறி நாளும் பிறந்திறப் பாரே.**

“சிவனடியார்களே, தவநெறியாகிய சிவநெறியைப் பேணாதவர்கள் பிறர் வெறுக்கும் படியாகக் குரல் எழுப்பிக்கத்தும் கழுதையினை ஒப்பர். சிவபெருமான் பேரின்பத்தை வழங்குவதற்காக எல்லா இடங்களிலும் பிரிப்பின்றி விரவி நிற்கின்றான். மக்கள் அவனை நினையாமையாகிய குற்றமும் அக் குற்றத்தினால் மலப்பிணிப்பும் தம்பால் உள்ளன என்பதை அறியாது துன்புறுகின்றனர். அவனது மெய்மையான புகழை உணர்ந்து பாராட்டித் தொழாதவர்கள் உலகியற் பொருட்களால் மயக்கமுற்று அதனால் பித்தேறி என்றும் பிறந்திறந்து துன்பப்படுகின்றனர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1514. மயங்குகின் றாரு மதிதெளிந் தாரும்**
**முயங்கி யிருவினை முழைமுகப் பாச்சி**
**இயங்கிப் பெறுவரே லீறது காட்டிற்**
**பயங்கெட் டவர்க்கோர் பரநெறி யாமே.**

“சிவனடியார்களே, உண்மையை உணராமையால் மயங்குகின்றவர்களும் இருவினைப் பயன்களை நுகர்ந்து உச்சித்துளைக் குகைக்கு அருகில் இருக்கும் திருவருளம்மையினைக் கூடி அவள் இயக்கும் இயக்கத்தின் வழியே செல்வார்களேயானால் அவர்களுக்கு வினை முடிவும் பரவெளியும் அருட்கண்ணால் காட்டப்படும். அப்படியானவர் பிறப்புக்கும் இறப்புக்கும் அஞ்சமாட்டார். அவரே நன் நெறியாகிய மேனெறியை எய்தியவராவார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1515. சேயன் அணியன் பிணியிலன் பேர்நந்தி**
**தூயன் துளக்கற நோக்கவல் லார்கட்கு**
**மாயன் மயக்கிய மானுட ராமவர்**
**காயம் விளைக்குங் கருத்தறி யார்களே.**

“சிவனடியார்களே, முழுமுதற் சிவனை அருட்கண்ணால் காணும் தவத்தினருக்கு அவன் மிக நெருக்கமானவனாவான். இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கயவனாகையால் பிணியில்லாதவன். அவனது திருப்பெயர் நந்தி. இயல்பாகவே தூய்மையுடைய அவனை மனச் சஞ்சலங்களின்றி ஒரு மனப்பட்ட நெஞ்சினராய் அசையாது நின்று இடையறாது நோக்குவோருக்குப் பிறப்பறும். அதனால் திருவடிப் பேரின்பம் கிடைக்கும். பிறப்புக்கும் இறப்புக்கும் உட்பட்டு துன்பநிலையை அடையாது அது தான் இன்பம் என்று மயங்குவோர் மாயவன் மயக்கத்திற்குப்பட்ட மருண்ட மாந்தராவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

.

**1516. வழியிரண் டுக்குமோர் வித்தது வான**
**பழியது பார்மிசை வாழ்தல் உறுதல்**
**சுழியறி வாளன்றன் சொல்வழி முன்னின்**
**றழிவறி வார்நெறி நாடநில் லாரே**

“சிவனடியார்களே, மேல்நிலை கீழ்நிலை என்னும் இருவகையான பிறப்பிற்கும் காரணமாவது நிலையில்லா உலகை நிலையென நினைத்து மயங்குவதேயாகும். ஓமொழி அல்லது புருவமத்தியில் வெளிப்பட்டு நின்று இயக்கவல்லவன் சிவபெருமான். அவனை நினைத்து உலக அழிவினை உணர வல்லவர்கள் நன்நெறியினை உடையவராவர். அவர்கள் தீயநெறி வழி செல்லமாட்டார்கள்”.

“சிவனடியார்களே, சில வருடங்களுக்கு முன்பு சமண சமயத்தைச் சேர்ந்த ஒருபெரியவர். கதிரேசன் வாழும் ஊருக்கு வந்து கதிரேசனைச் சந்திக்க விரும்பினார். கதிரேசன் அதற்கு உடன்படவில்லை. அவர் சுவாமி அறைக்குள் இருந்து அறையைப் பூட்டி விட்டார். தனது வேலைக்காரனுக்குச், “சொன்னார் உனது முகத்தை முழுமையாக மறைத்துக் அப்பெரியவர் முன் சென்று சிவனடியார்களைத் தவிர்ந்த வேறு எவரையும் நான் பார்க்க மாட்டேன் என்று சொல்” என்றவர். வேலையாள் அப்படியே சொன்னான். அதற்கு அந்தப்பெரியவர் சொன்னார், “நான் சிவனடியான். உனது முகத்திரையை விலக்கிவிட்டுப்பார் என்றார். அவன் பார்த்தபோது பரதேசியொருவன் நின்றான். வேலைக்காரன் ஓடிச்சென்று அதைச் சொல்லக் கதிரேசன் வெளியே வந்தார். வெளியே ஒரு சிவனடியார் நின்றார், “அடியவரே, நீர்பெரும் சிவபக்தர். அப்படியானவர் முறையாகச் சிவனை வழிபட்டு நெறிமுறைகளைப் பின்பற்றுகிறீரா என அறியவே வந்தேன்” என்றார். அவரது

கோபம் சிவனை நினைவுறுத்தியது. கதிரேசன் அவரது பாதங்களைப் பற்றினார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1517. மாதவர் எல்லாம் மாதேவன் பிரான் என்பர்**
**நாதம தாக அறியப் படுநந்தி**
**பேதஞ்செய் யாதே பிரான்என்று கைதொழில்**
**ஆதியும் அந்நெறி யாகி நின் றானே.**

''சிவனடியார்களே, வந்த அச்சிவனடியார் சொன்னார், ''அடியவரே, நிலையில்லாத உலகில் வாழும் மக்கள் அதை நிலையானது என்று நினைத்து மனம் போன போக்கில் வாழ்கின்றனர். தற்போது சமணசமயத்துறவி யொருவர் மாயாயாலம் காட்டி மக்களைக் கவர்கிறார். அது இங்கு நடைபெறக்கூடாதென்பதற்காகவே இங்கு வந்தேன். நெறிமுறை தவறியவர்களது முகத்தைப் பார்ப்பதே பாவம். பெரும் தவத்தோரெல்லாம் சிவபெருமானையே முழுமுதற் கடவுள் என்பர். அவன் தூமாயையின் கண் விளங்கும் ஓசை மெய்யாகிய நாததத்துவ வடிவாக அறியப்படுவன். தூமாயை அவனுடைய நேராட்சியாகும். அவனது திருப்பெயர் நந்தி. அவன் தான் உயிர்க்குயிராக நிற்கும் முதல்வன். அவனை வேறாக்கக் கருதாது 'சிவசிவ' என நினைத்து அம்மையே அப்பரே என வாழ்த்தி வணங்கி என்னை ஏற்றருள் எனக் கைதொழுதால் ஆதியாகிய சிவபெருமானும் அம்மையபடியுடன் வந்தருள்வன். ''சி'' என்ற முதல் எழுத்து அப்பனையும் ''வ'' என்னும் இரண்டாவது எழுத்து அம்மையையும் குறிப்பது என்று தெரிந்த நீர் நெறிமுறைதவற மாட்டீர். ஆனால் இதை உணராத பலர் பொருளாசை கொண்டு அலைகின்றனர். அதைத்தடுத்தல் வேண்டும் என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1518. அரனெறி யப்பனை யாதிப் பிரானை**
**உரநெறி யாகி யுளம்புகுந் தானைப்**
**பரநெறி தேடிய பத்தர்கள் சித்தம்**
**பரனறி யாவிடிற் பல்வகைத் தூரமே.**

''சிவனடியார்களே, அறநெறியாகிய சிவநெறி அப்பன் ஆதியாகிய அம்மையை இடப் பாகத்தில் கொண்டவன் எனக் கொள்ளலாகா ஒட்டித்திகழும் முழுமுதற் சிவனை, அறிவு நெறியாகி ஆருயிர்களின் உள்ளத்தில் புகுந்தவனை, வீடுபேற்றைத் தரும் பரமனை வணங்கும் தொண்டர்களின் உள்ளத்தில் உடனுறைந்திருக்கும் ஒருவனை அறியாவிட்டால் வீடுபேறு அடையும் வழி

கிடையாமற் போய்விடும். அதனால் சிவநெறிக்கு முரணாக எச்செலையும் நானோ அன்றி எமது சூழலில் இருப்பவர்களோ கைக்கொள்ளமாட்டார்கள்.'' என்று கதிரேசன் கூற அச்சிவனடியார் மிகவும் மகிழ்ந்தவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1519. பரிசற வானவன் பண்பன் பகலோன்**
**பெரிசறி வானவர் பேற்றில் திகழுந்**
**துரிசற நீநினை தூய்மணி வண்ணன்**
**அரிதவன் வைத்த அறநெறி தானே.**

''சிவனடியார்களே, கதிரேசனின் பதிலால் மிகவும் மகிழ்வடைந்த அச்சிவனடியார் சொன்னார், '' உமது பக்தி மேலானது. அசைக்க முடியாதது. நம்பிக்கை மிகுந்தது. சிவனைப் பற்றி அறியாதவர்கள் தான் மனதை அடிக்கடி மாற்றிக் கொள்வர் உலப் பற்று அவர்களை மாற்றும் உலகில் கிடைக்கின்ற அற்பசுகங்களுக்காகத் தம்மை விலை பேசுபவர்களே அதிகமாக இருக்கின்றனர். சமயத்தை வளர்க்கிறோம். என்று சொல்லிக் கொண்டு தம்மை வளர்ப்பவர்களே பலர். சிவன் மாயையின் குணங்கள் சிறிதும் இல்லாதவன். அத்துடன் எண்பெரும் அருட் குணங்களை உடையவன். இயற்கைக் பேரொளியான அவன் உலகிற்கும் உலகிலுள்ள அனைத்துப் பொருட்களுக்கும் ஒளி கொடுப்பவன். இதை உணர்ந்த தேவர்கள் அவனைத் தொழுவதால் தத்தம் பேறாகிய நிலைகளில் திகழ்கின்றனர். நாம் எமது குற்றங்களை நீக்கும்படி அவனைத் தொழுதல் வேண்டும். தூயபளிங்கு நிறத்தவனான அவன் அருளிய சன்மார்க்க நெறி மிகவும் புனிதமானது. அவனை அடைவதற்கான சிறந்த வழியும் அதுவேயாகும். அதைப் பின்பற்றும் புனிதராகிய உம்மைச் சந்தித்தது சிவனைச் சந்தித்ததை ஒக்கும்'' என்று கூறிக் கதிரேசனை ஆரத்தழுவினவர். அப்போது கதிரேசன் மெய் மறந்து போனார். அவரது அன்புப் பிடியில் இருந்து விடுபட்டபோது அவரைக் காணவில்லை'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1520. ஆன சமயம் அதுஇது நன்றெனும்**
**மாய மனிதர் மயக்க மதுவொழி**
**கானங் கடந்த கடவுளை நாடுமின்**
**ஊனங் கடந்த வுருவது வாமே.**

“சிவனடியார்களே, அச்சமயம் தான் நல்ல சமயம். இச்சமயம் தன் நல்லது என்று திருவருள் உணர்த உணராதவர்கள் தான் பிழைப்பின் பொருட்டு வஞ்சனையாகக் கூறும் மயக்கு மொழிகளை நம்பக்கூடாது. திருமுறைகள் போற்றிய சிவபெருமானை திருவருளின் துணையால் நாடுதல் வேண்டும். நாடினால் மலமாயை கன்மங்களாகிய குற்றங்கள் நீங்கும். அதன் பின் சிவபெருமானது உண்மை அறிவு இன்பவண்ணவடிவினைப் பெறுவீர்கள் என்று நமசிவாயம் உரையாற்றிக் கொண்டிருந்தபோது வழமையாக ஆச்சிரமத்திற்கு வரும் மாணிக்கவாசகர் என்ற பக்தர் வந்து சொன்னார், “நீங்கள் இவ்வாறு பலமுறை சொல்லியும் கேளாமல் ஒருபோலிச் சாமியை நம்பி அவன் கூறும் சமயக் கருத்துக்கள் தான் உண்மையானவை என்று நம்பி வழிபட்டேன். அவன் எனது தங்க நகைகளை இரட்டிப்பாக்கித் தருகிறேன் என்று கூற நானும் பலரும் அதை நம்பிக் கொடுத்து ஏமாந்து போனோம். அவன் தங்க ஆபரணங்கள் என்று தந்தவையெல்லாம் போலியானவை என்று அழுதவன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1521. அந்நெறி நாடி அமரர் முனிவருஞ்**
**செந்நெறி கண்டார் சிவனெனப் பெற்றார்பின்**
**முன்னெறி நாடி முதல்வன் அருளிலார்**
**சென்னெறி செல்லார் திகைக்கின்ற வாறே.**

“சிவனடியார்களே, அப்போது நமசிவாயகம் சொன்னார், “அடியவனே, நன்நெறியாகிய சிவனெறியை திருவருளால் உணர்ந்து அதுவே முதன்மையானது என்னைக் கொண்ட தேவர்களும் முனிவர்களும் திருவடியை அடையும் நெறியினைக் கைக்கொண்டனர். அதனால் அவர்கள் சிவனை அடைந்து பெருவாழ்வு பெற்றனர். மாறுபட்ட நெறிகள் தான் உண்மையான நெறி என்று அறியாமையால் உணர்ந்து அந்த வழி சென்றவர்கள் சிவனின் திருவடியை அடையாது துன்பப்படுகின்றனர். இவர்கள் மயங்கும் மயக்கத்திற்கு அளவில்லை. அதனால் பிறவிகள் தோறும் துன்பப்படுவர். இங்கு உரையாற்றுவோர் சிவனது பெருமைகளைப் பற்றியும் உண்மைநெறியைப் பற்றியும், அதைக்கைக்கொள்ளும் முறைகள் பற்றியும் அதனால் வரும் நன்மைகள் பற்றியும், நன்னெறியைப் பின்பற்றாதவர்கள் படும் துன்பங்களைப் பற்றியும் விரிவாகவும் விளங்கத்தக்க முறையிலும் பேசியபோதும் பலர் அதை நம்பாது தீயனெறியில் சென்று துன்புறுகின்றனர். அதை அவர்கள் உணராவிட்டால் இவ்வாறான துன்பங்கள் பலவற்றைச் சந்திக்க வேண்டி வரும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1522. உறுமா றறிவதும் உள்நின்ற சோதி**

**பெறுமா றறியிற் பிணக்கொன்றும் இல்லை.**
**அறுமா றதுவான வங்கியுளாங்கே**
**இறுமா றறிகிலர் ஏழைகள் தாமே.**

“சிவனடியார்களே, நமசிவாயகம் சொன்னார், “பலர் இங்கு பொழுது போக்கிற்காகவே வருகின்றனர். இவ்வாறு பொழுதைக் கழிப்பதற்காக வருபவர்களுக்குச் சிவபெருமானில் நம்பிக்கை இல்லை. பலசிவபக்தர்கள் நன்மை அடைவதைக் கண்டும் அவர்கள் அதை உணர்வதில்லை. விதியின்படி தான் நடக்கிறது. நல்லகாலம் வந்தால் யாவும் நடக்கும் என்று நினைக்கின்றனர்.. சிவன் துன்பங்களை இன்பமாக்குபவன். இன்பங்களைப் பேரின்பமாக்குபவன். சிவனது திருவடியை அடைவதற்கு வாயிலாக அமைவது நன்னெறி. சிவனைப் பற்றிய பெருமைகளை கூறுவதும், அதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுப்பதும் நன்னெறியாகிய சிவனெறியே. அந்த நன்னெறி அறிவைப் பெற்றால் எந்நெறியைப் பின்பற்றுபவரோடும் பிணக்கு உண்டாகமாட்டாது. சந்தேகங்களும் மாறுபாடுகளும் வரமாட்டாது. உண்மை எது மயக்கத்தைத் தரும் நெறி எது என்ற வேறுபாடும் ஏற்பட மாட்டாது. அதற்குச் சிவன் விடமாட்டான். இதற்காகத்தான் சிவனது திருவடியில் பிரிவிலா அடிமையாய் உறைதல் வேண்டும் என்று பலமுறை சொல்லியும் யாரும் கேட்பதில்லை. இவற்றை அறிவிற் குறைந்தவர்கள் அறிய மாட்டார்கள் என்று கூறியவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1523. **வழிநடக் கும்பரி சொன்றுண்டு வையங்**
**கழிநடக் குண்டவர் கற்பனை கேட்பர்**
**சுழிநடக் குந்துய ரம்மது நீக்கிப்**
**பழிநடப் பார்க்குப் பரவலு மாமே.**

“சிவனடியார்களே, தங்கநகைகளைக் கொடுத்து ஏமாந்த முகுந்தன் என்பவன் சொன்னான், “தங்கநகைகளை இழந்தபின்பு தான் தாங்கள் கூறியதன் அருமை தெரிகிறது. புறச்சமயத்தினர் கற்பனையாகக் கூறும் பொய்மொழிகளைக் கேட்டு நன்னெறிகளை மறந்து விட்டேன். இப்போது தான் பிறப்பு இறப்புச் சுழிகளில் அகப்பட்டு பெரும்துன்பங்களை என்போன்றவர்கள் தான் அனுபவிப்பார்கள். நிலையாத பொருட்களில் பற்றுக் கொண்டால் துன்பங்கள் தான் பெருகி வரும் என்று நீங்கள் சொன்னவற்றைக் கேளாமையால் தான் நான் பல இலட்சம் ரூபா பெறுமதியான ஆபரணங்களை இழந்தேன். இவற்றை நீக்குதற் பொருட்டு நான் இனிச் சிவ பெருமானைத் தீவிரமாக வணங்கப் போகிறேன் என்று சொல்ல நமசிவாயகம் சொன்னார், “சிவபெருமானின் திருவடியினை அடைவதற்கு

நேர்வழியாகத் திகழ்வது நன்னெறியே. அதன் வழிச்செல்லப் பயிற்சி உதவும். அதனால் தவறாது ஆச்சிரமத்திற்கு வந்து பயிற்சியை மேற்கொள் என்று சொன்னவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1524. வழிசென்ற மாதவம் வைகின்ற போது**
**பழிசெல்லும் வல்வினைப் பற்றறுத்தாங்கே**
**வழிசெல்லும் வல்வினை யார்திறம் விட்டிட்**
**டுழிசெல்லில் உம்பர் தலைவன்முன் னாமே.**

''சிவனடியார்களே, நமசிவாயகம் சொன்னார், ''முகுந்தா, சிவபெருமானை அடைவதற்குரிய நன்னெறி மாதவம் செய்தல். அப்படியிருக்கப் புன்னெறியின் வழியிற் செல்லும் கொடுவினையளர் நன்னெறி வழியே சென்றால் தேவர்களின் தலைவனாகவும், மூவர் கோனாகவும் விளங்கும். முழுமுதல் தலைவனான சிவபெருமானை வழிபட்டு வந்தால் பழையவற்றை மறந்து உனக்கு உதவிகள் செய்வான் என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 19. நிராசாரம்
### (அல்லொழுக்கம்)

**1525. இமையங் ளாய்நின்ற தேவர்கள் ஆறு**
**சமயங்கள் பெற்றனர் சாத்திரம் ஓதி**
**யமையறிந் தோமென்ப ராதிப் பிரானுங்**
**கமையறிந் தாருட் கலந்துநின் றானே.**

''சிவனடியார்களே, நமசிவாயகம் முகுந்தனுக்குச் சொன்னார், ''இமையமலை போன்று அசைவற்று நின்ற தேவர்கள் அவர்களின் நிலைமைக்கு ஏற்றவாறு ஆறு சமயங்களைப் பெற்றனர். அவைகளுக்குரிய பொருள் நூல்களை ஓதினர். அடைதற்காய் அமைந்த நிலையினை அறிந்தேன் என்றனர். ஆதிப் பிராணாகிய சிவபெருமானும் பிழை பொறுக்கும் தன்மையராய்ப் பொறுமையுடன் ஓருருவாய்க் கலந்து நின்று அருள்வான். தேவர்கள் சிவபெருமானைப் பூசித்தமைக்கேற்ப பயன்களைப் பெற்றமை உங்களுக்குத் தெரியும். அதனால் நீங்கள் சிவனைப் பிரார்த்தியுங்கள். உள்ளன்போடு பற்றுக்களின்றித் தொழுபவர்கள் பெரும் பயனான திருவடியை அடைவர். ஏனையோர் தாம் செய்த புண்ணிய பாவங்களுங்கேற்ப பயனைப் பெறுவர் என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1526. பாங்கமர் கொன்றைப் படர்சடை யானடி**
**தாங்கு மனிதர் தரணியில் நேரொப்பர்**
**நீங்கிய வண்ணம் நினைவுசெய் யாதவர்**
**ஏங்கி உலகில் இருந்தழு வாரே.**

“சிவனடியார்களே, முகுந்தன் சொன்னான், “சுவாமி என்னை ஏமாற்றிய அந்த நன்னெறியைப் போற்றாது புன்னெறியைப் போற்றி வாழும் போலிச் சாமியார் எமது ஊரை விட்டு வெகுதூரத்தில் உள்ள வேறொரு ஊருக்குச் சென்று ஆச்சிரமம் அமைத்துச் சில கெட்டவர்களைத் தமது சீடர்களாக நியமித்து அவர்களைக் கொண்டு ஊரில் நடைபெறுபவற்றை அறிந்து பரிகாரம் செய்யவென பல ஆயிரம் ரூபாயை வாங்கிப் பூசை செய்தான். அதை நம்பிய மக்கள் பலர் அத்தீயநெறியைப் பின்பற்றி மதம் மாறினார். அதனால் மனம் வருந்திய அவ்வூர்ப் பெரியவரான குணசீலன் சிவனிடம் மனமுருகி வேண்ட ஒருநாள் அவரது சீடன் குடித்து விட்டு உண்மையை உழறிவிட்டான். அதனால் அவ்வூரவர் திரண்டு சென்று ஆச்சிரமத்தைத் தீயிட்டுக் கொழுத்திவிட்டு போலிச் சாமியைப் பிடித்துக்காவல் துறையில் ஒப்படைத்துள்ளனர். காவல் துறையினர் எனது நகைகளை அவனிடமிருந்து மீட்டுள்ளனர். அவர்கள் அதை எனக்குத் தருவதாகக் கூறியுள்ளனர்” என்று சொல்ல நமசிவாயம் சொன்னார், “முகுந்தா, மார்பிலும் தலையிலும் கொன்றைப்பூ மாலை சூடியிருக்கும் சிவபெருமான், தனது திருவடியை மறவாது உள்ளத்தில் நினைத்து வழிபடும் அடியவர்களுக்குள் நின்று உதவுவார். சிவபெருமானை நினையாது புன்னெறியில் செல்லும் தீயவர்களுக்குத் தாம் செய்வது என்னவென்று அறியாது செய்யவைத்துத்தண்டிப்பர். அதனால் அவர்கள் அகப்பட்டுத் துன்பம் அடைவர். உனது முறைப்பாட்டைச் சிவன் செவிமடுத்தமையால் தான் அவனுக்கு அந்நிலை ஏற்பட்டது என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1527. இருந்தழு வாரும் இயல்புகெட்டாரும்**
**அருந்தவ மேற்கொண்டங் கண்ணலை எண்ணில்**
**வருந்தா வகைசெய்து வானவர் கோனும்**

**பெருந்தன்மை நல்கும் பிறப்பில்லை தானே.**

‘‘சிவனடியார்களே, முகுந்தனிடம் ஏமாற்றி வாங்கிய ஆவரணங்களைக் காவல் துறையினர் முகுந்தனுக்குத் திருப்பிக் கொடுத்தனர். அத்துடன் முகுந்தன் தனது ஆபரணங்கள் கிடைத்தமையால் அவனை விடுவிக்குமாறு கேட்டதற்கிணங்கக் காவல் துறையினர் அவனை எச்சரித்து விடுதலை செய்தனர். அவனைத் திருத்த விரும்பிய முகுந்தன், அவனை ஆச்சிரமத்திற்குக் கூட்டிவந்தான். அவன் சொன்னான், ‘‘சுவாமி, அறியாமையால் நான் பல தீய செயல்களைச் செய்து விட்டேன். முழுமுதல் கடவுளான சிவபெருமானை வழிபட்டால் தான் எனது துன்பங்கள் போகுமென்று முகுந்தன் சொன்னதால் இங்குவந்துள்ளேன். நான் உய்ய வழி சொல்லுங்கள். அதன்படி நான் வாழ்வேன் என்றான்’’ நமசிவாயம் சொன்னார், ‘‘புன்னெறியில் சென்று துன்புற்று அதைத் தாங்க முடியாது சிவனைத் தொழுதால் தான் துன்பங்கள் தீரும் என்று வந்திருக்கிறாய் அது உண்மை. அதனால் உன்னைச் சிவன் மன்னிப்பான். சிவபெருமானை உள்ளன்போடு வேறு நினைவுகள் இன்றி ‘சிவயநம’ என்று சொல்லி வணங்கினால் அவன் எல்லாத் துன்பங்களையும் நீக்கி வைப்பான். அத்துடன் திருவடியுணர்வினைத் தந்தருளுவான். அதனால் சிவனை நம்பி வணங்கு. அதனால் துன்பத்தைத் தரும் பிறப்பும் அறும் என்றவர்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1528. தூரறி வாளர் துணைவர் நினைப்பிலர்**
**பாரறி வாளர் படுபயன் றானுண்பர்**
**காரறி வாளர் கரந்து பிறப்பார்கள்**
**நீரறி வாரநெடு மாமுகி லாமே.**

‘‘சிவனடியார்களே, நமசிவாயகம் அன்று வீதிகளில் குழப்பம் செய்யும் ஒருவனை ஆச்சிரமத்திற்கு வரச் சொல்லியிருந்தார். அவன் பயம் காரணமாக வராததால் ஆச்சிரமத்தில் வேலை செய்பவனான நடராசன் என்பவன் அவனது வீட்டுக்குச் சென்று அவனை அழைத்து வந்தான். நமசிவாயகம் சிவனின் அருளால் அவர் சொல்பவை நடைபெறும். அதனால் பயந்த அவன் நடுநடுங்கியபடி வந்து நமசிவாயகத்தின் பாதங்களைப்பற்றிப் பிடித்து அழுதான். அப்போது நமசிவாயகம் சொன்னார், ‘‘பாலகுமாரா அழாதே. சிவனை வணங்குவோர் அழமாட்டார்கள். சிவனைத் தனக்குப் பிறம்பாக நினைப்பவர்கள் தாம் நினைத்தபடி செயலாற்றுவர். தம்முயிருனுள் கலந்து நின்று உதவிடும் அம்மை அப்பரை நினைக்காது நிலையில்லாத உலக இன்பங்களே பெரிதென நினைத்து அவற்றில் மயங்கித் தம்

மனம் போன வழியில் வாழ்வர். உலக இன்பங்களை அனுபவித்துத் துன்பப்படுவர். அறியாமை வசப்பட்டு தன்முனைப்புடன் வாழ்வர். அதனால் மீண்டும் மீண்டும் பிறந்து இறந்து துன்பப்படுவர். திருவடியுணர்வில் வாழ்வோர் அத்திருவருளின் உதவியால் இன்பமாக வாழ்ந்து பின் திருவடியை அடைந்து பேரின்பமாகச் சிவனது நிழலில் வாழ்வர். பூவுலகில் வாழும் சிவபக்தர்களைப்பார். அவர்கள் எவ்வாறு மகிழ்வுடன் வாழ்கிறார்கள். எத்தனை பேருக்கு உதவி செய்கிறார்கள். இவற்றையெல்லாம் பார்த்தும் உன் போன்றவர்கள் திருந்துகிறார்களில்லை என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1529. அறிவுடன் கூடி அழைத்ததோர் தோணி**
**பறியுடன் பாரம் பழம்பதி சிந்துங்**
**குறியது கண்டுங் கொடுவினை யாளர்**
**செறிய நினைக்கிலார் சேவடி தானே.**

''சிவனடியார்களே, நமசிவாயகம் பாலகுமாரனுக்குச் சொன்னார், ''பாலகுமார, சிவனின் மகனின் பெயரை உனது தந்தை உனக்குச் சூட்டியிருக்கிறார். அந்தப் பெயர் சிறப்புக்கள் பலவும் கொண்டது. அந்தப் பெயருக்கு இழுக்கைத் தேடிக் கொடுத்திருக்கிறாய். உனது பெயரைச் சொன்னாலே இறைவன் உன்னிடம் ஓடோடி வருவார். அப்படியான நீ தவறான வழியில் நடக்கலாமா..? முற்றுணர்வாகிய சிவஞானத்துடன் கூடித் திருவருளின் துணையால் தோணியாகிய சிவபெருமானின் திருவடியை ஓயாது தியானத்தால் திருவருளால் உடம்பு பொன்நிறமாகும் கதிரேசனைப் பார், சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பார். எண்பது வயதான கதிரேசனின் உடம்பில் ஒரு சுருக்கு இருக்கா. நாற்பது வயது கூட நிரம்பாத நீ அவர் செய்யும் வேலையில் கால்பங்கைச் செய்வாயா..? அதுமட்டுமல்ல உயிரில் உள்ள மலக்குற்றங்கள் யாவும் நீங்கும். சாந்தமும் பொறுமையும் வந்து சேரும். இவற்றையெல்லாம் நேரிற் பார்த்தும் யாரும் திருந்துகிறார்களில்லை. துன்பங்களைத் தரும் குற்றச் செயல்களையே விரும்புகின்றனர் என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1530. மன்னும் ஒருவன் மருவு மனோன்மயன்**
**என்னின் மனிதர் இகழ்வரிவ் வேழைகள்**
**துன்னி மனமே தொழுமின் துணையிலி**
**தன்னையும் அங்கே தலைப்பட லாமே.**

‘‘சிவனடியார்களே, நமசிவாயகம் சொன்னார், ‘‘பாலகுமார, ஒப்புவமை இல்லாத சிவபெருமானை அன்போடு நினைத்தால் அவர் நினைப்பவர்கள் நினைத்த வடிவுடன் வந்து நினைப்பவரின் மனிதில் குடியேறி இருப்பார். இதை நான் எத்தனையோ முறை மக்களுக்கு எடுத்துச் சொல்லியும் அதைக் கேட்போர் மிகமிகக்குறைவு. கேட்பவர்கள் சிவனை நினைத்தால் அவர் மிக்க மகிழ்வுடன் செயலாற்றுவார். பற்குணம் என்றொரு அடியவர் ஆச்சிரமத்திற்குடி வருவார். அவருக்கு ஒரே ஒரு மகள். பற்குணத்திற்குத் தனது மகளைச் சகோதரியின் மகனுக்குத் திருமணம் செய்து வைக்க விருப்பம். சகோதரிக்கும் விருப்பம். ஆனால் சகோதரியின் மகனான அங்கயனுக்கு விருப்பமில்லை. அங்கயனின் பெற்றோர் வற்புறுத்தியும் அவன் மறுத்துவிட்டான். அதை மிகுந்த துயரத்துடன் பற்குணம் எனக்குச் சொன்னார். நான் சொன்னேன், ‘‘நீ உனக்கு மாப்பிளையாக அங்கயனை ஏற்பாடு செய்யும்படி சிவனிடம் கேள். எல்லாம் சரி வரும் என்றேன். ஆறு மாதம் கழிந்ததும் அங்கயன் வந்து தனது மகளைத் திருமணம் செய்வதாக உறுதியளித்தவனாம். அது பற்குணத்திற்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அப்போது நான் சொன்னேன், ‘‘அங்கயன் நீங்கள் அடிக்கடி வந்து கேட்டதால் தான் பாவம் என்பதற்காக ஒத்துக் கொண்டதாகச் சொன்னவன்’’ என்ற போது பற்குணம் சொன்னார், ‘‘நான் அவனைச் சந்திக்கவும் இல்லைக் கேட்கவும் இல்லை. ஒரே ஒரு முறை நான் கேட்க அவன் மதிப்பில்லாமல் கதைத்தது உங்களுக்குத் தெரியும் தானே’’ என்றவர் ‘‘நீர் போகவில்லை. உமது வடிவில் சிவன் போயிருக்கிறார். அவர் அவனது மனதை மாற்றிவிட்டார். நாம் எந்த வடிவில் சிவனைக் காண விரும்புகிறாமோ அந்த வடிவில் சிவன் வருவான் என்றவர்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1531. ஓங்காரத் துள்ளொளி உள்ளே உதயமுற்**
**றாங்கார மற்ற அனுபவங் கைகூடார்**
**சாங்கால முன்னார் பிறவாமை சார்வுறார்**
**நீங்காச் சமயத்துள் நின்றொழிந் தார்களே.**

‘‘சிவனடியார்களே, நமசிவாயகம் பற்குணத்திற்குச் சொன்னார், ‘‘பற்குணம், அங்கயன் தனது அலுவலகத் தோழர்களோடு சேர்ந்து மது அருந்துபவன். மது அருந்தினால் அவனது புறச்சமயத்தோழனான எட்வேட் என்பவன் சைவசமயத்தை நிந்திப்பான். ஆரம்பத்தில் எட்வேட்டை எதிர்த்த அங்கயன் பின் அவனது மாயாயால வார்த்தைகளில் மயங்கி அவனது சமயத்தில் சேர விரும்பினான். இதை அறிந்த அங்கயனின் தந்தையான கெங்காதரன் சிவன் மீது பழியைப் போட்டுத் தியானத்தில் இருப்பார். ஓங்காரத்தின் உள்ளொளி வண்ணமாக இருப்பவன் சிவன். அவன் திருவருளின் தோற்றம். அதனால் அகங்காரம் அறும். அறுத்தால் சிவன் தோன்றச்

சிவனடி இன்ப நினைவு தோன்றும். இந்த நிலையை அடையாதவர்கள் இறப்பு உண்டு என்று எண்ண மாட்டார்கள். அதனால் பிறவாமையை உணரமாட்டார்கள். இத்தகைய பிறப்பு இறப்பினைத் தரும் புறச் சமய நெறியைச் சாரவிருக்கும் தனது மகனை தடுத்தாட் கொள்ளும்படி கெங்காதரன் வேண்ட எம்பெருமானான சிவன் உமது தோற்றத்தில் சென்று தடுத்தாட் கொண்டவர் என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 20. உட்சமயம்

**1532. இமையவர் தம்மையும் எம்மையும் முன்னம்**
**அமைய வகுத்தனன் ஆதி புராணன்**
**சமையங்க ளாறுந்தன் றாளிணை நாட**
**அமையங் குழல்கின்ற ஆதிப் பிரானே.**

''சிவனடியார்களே, அங்கயனின் மனதில் பெரும் மாற்றம் ஒன்று ஏற்பட்டது. எட்வேட்டோடு சேர்ந்து குடித்ததும் பின் அவனின் சமயத்தில் சேர நினைத்ததையும் நினைத்து வெக்கப்பட்டான். அவனது குடும்பம் பரம்பரைச் சைவர். சிவபூசையை ஒழுங்காகச் செய்பவர்கள். கடந்த சில தினங்களாக அவனது அலுவலகத்தில் களவுகள், ஊழல்கள், தவறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவென்று யாரோ மேலதிகாரிக்குப் புகாரிட அவர் சந்தேகத்தின் பேரில் அங்கயனை விசாரித்தார். அது அவனுக்குப் பெரும் மன உழைச்சலைக் கொடுத்தது. அதனால் அவன் ஆச்சிரமத்திற்கு வந்து நமசிவாயகத்தைச் சந்தித்தான். நமசிவாயகம் சொன்னார், ''மகனே, தேவர்களையும் சிறப்புக்குரிய மக்களையும் மல ஆற்றலின் தன்மைக்கேற்ப வினைக்கீடாகப் பொருந்தும் படி கருவுறா நுண்ணுடல் கருவுறும் பருவுடல்களை மாயையில் இருந்து படைத்தருளிய சிவன் அம்மையோடு கூடியிருக்கும் தொன்மையானவன். அறுவகைச் சமயங்களும் படிமுறையான் தன் திருவடியினை எண்ண வகுத்தருளினவன் தொன்மையான சிவபெருமானே யாவன். இவ் உண்மையை அறியாது சிலர் அச் சமயங்களில் நின்று மேல் நோக்காது உழல்கின்றனர். நீயும் வினைக்கீடாக வந்த மயக்கத்தில் வழிதவறிவிட்டாய். எம் பெருமான் அவர்களைத் தண்டிக்காது வழிப்படுத்துவார். அது தான் நடந்தது. கவலைப்படாதே என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1533. ஒன்றது பேரூர் வழியா றதற்குள**
**என்றது போல இருமுச்சமயமும்**
**நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்**
**குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே.**

“சிவனடியார்களே, நமசிவாயகம் அங்கயனுக்குத் தொடர்ந்து சொன்னார், “மகனே, திருவடிப்பேறை அடைவதற்குரிய வழிகள் ஆறாகும். அவ்வாறினையும் சமயங்கள் என்று கூறுவர். அவை படிமுறையாக மேற் செலுத்துவன. இவ் உண்மையினை உணராமல் இச்சமயம் நல்லது அச்சமயம் தீயது என்று சொல்லிச் சண்டையிடுவோர் குன்றினைப் பார்த்து குரைக்கின்ற நாயைப் போன்றவர்கள். அதனால் நன்று தீது என ஆராயது உனது பெற்றோர் கைக் கொண்ட வழிகளைப் பின்பற்று என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1534. சைவப் பெருமைத் தனிநா யகன் தன்னை**
**உய்ய வுயிர்க்கின்ற ஒண்சுடர் நந்தியை**
**மெய்ய பெருமையர்க் கன்பனை இன்பஞ்செய்**
**வையத் தலைவனை வந்தடைந் துய்மினே.**

“சிவனடியார்களே, நமசிவாயகம் அங்கயனுக்குச் சொன்னார், “மகனே, உனது சைவப்பாரம்பரியம் உன்னைத் தீமைகள் செய்யவிடாது தடுத்து நிறுத்தியுள்ளது. உனது தந்தையின் பிரார்த்தனைச்யைச் சிவன் ஏற்றமையால் தான் உனக்குத் தெரியாமலே உன்னில் மாற்றம் உண்டானது. சித்தாந்த சைவத்தின் மாண்புமிகு ஒப்பில்லாத் தலைவன் நந்தி. அவன் அனைத்து உயிர்களும் உய்யும் பொருட்டு உயிர்க்குள் உயிராக நின்று உண்மையை விளக்கும் பேரொளிப் பிழம்பு. உண்மையான நன்னெறியான சைவத்தின் மீது பற்று வைத்து வணங்கும் அடியவர்களுக்கு பேரின்பம் அருள்பவன். அன்போடு அவனது திருவடியைப் பணிந்து வழிபடுபவர்களுக்கு எல்லா நன்மைகளையும் கொடுப்பான். அவர்களை மனங்கலங்கவிடமாட்டான். அதற்கு உதாரணம் உனது தந்தையும் உனது மாமன் மகளும். அவர்கள் எவ்வேளையிலும் தமது குறைகளைத் தீர்க்குமாறு வணங்கியதால் தான் உனது மனம் மாறியது. இதை உணர்ந்து செயற்பட்டாயேயானால் எல்லாம் சிவனருளால் நல்லதாகவே நடக்கும் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1535. சிவனவன் வைத்ததோர் தெய்வ நெறியிற்**
**பவனவன் வைத்த பழவழி நாடி**
**இவனவன் என்ப தறியவல் லார்கட்**
**கவனவ னங்குள தாங்கட னாமே.**

“சிவனடியார்களே, நமசிவாயகம் அங்கயனுக்குத் தொடர்ந்து சொன்னார், “மகனே, சிவபெருமான் ஆருயிர்கள் இலகுவாக வழிபட்டு உய்யும் பொருட்டு அமைத்தருளிய தெய்வநெறியாகிய நன்நெறிகளில் பழைமையான நெறி சன்மார்க்க

நெறி. அதை ஆராய்ந்து பார்த்தால் அடியவர்கள் இவன் அவன் என்னும் வேறுபாட்டை நீக்கி ஆருயிர்களுக்கு என்றும் அருள் செய்பவன் சிவன் என்ற உண்மை தெரியவரும். இவ் உண்மையை அறிந்தவர்கள் அவ்வவ் சமயங்கள் தோறும் சிவபெருமான் நின்று பயிற்சி வேறுபாட்டிற்கேற்பப் பயன் தருவான் என்பதை உணர்ந்து கொள்வார்கள் என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1536. ஒத்த சமயங்கள் ஓராறு வைத்திடும்**
**அத்த னொருவனாம் என்ப தறிந்திலர்**
**அத்தன் ஒருவனாம் என்ப தறிந்திடின்**
**முத்தி விளைக்கு முதல்வனு மாமே.**

‘‘சிவனடியார்களே, மறுநாள் அங்கயன் வந்த போது அவனது அலுவலக நண்பனான பாலேந்திரனை அழைத்து வந்தான். அவனுடன் அவனது மனைவி யசோதாவும் வந்திருந்தாள், ‘‘சுவாமி இவர் சில நாட்களாக மனம் குழம்பிய நிலையில் இருக்கிறார். முன்பு ஒருபோதும் மது அருந்தாதவர் இப்போ அருந்துகிறார். மனக் குழப்பத்தால் செய்வது எதுவென்று தெரியாது செய்கிறார். இவர்களது குடும்பம் சிவபூசை செய்வது. அதை இப்போ அவர் மதிப்பதில்லை. வீண் செயல் என்கிறார்'' என்றாள். நமசிவாயகம் அவனது முகத்தைக் கருணையுடன் பார்த்துச் சொன்னார், ‘‘பாலா, உனக்கு இப்போ அறுவகைச் சமயங்கள் மீதும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாகச் சொல்வதாக நினைக்கிறாய். அறுவகைச் சமயங்களையும் பருவத்திற்கேற்றவாறு அமைத்தருளியவன் சிவபெருமான். அவன் ஒருவனே என்ற உண்மையைப் பலரும் அறியாததால் தான் மனம் குழம்புகின்றனர். அவன் ஒருவன் என்ற உண்மையை அறிந்து கொண்டால் குழப்பங்கள் ஏற்படாது. அவன் ஒருவன். அவன் தான் முத்தியின்பத்தைத் தருபவன் என்று எண்ணு. தத்துவங்கள் ஒன்றைப் பலவாறு சொல்லும். அப்படிச் சொன்னாலும் அவை ஒன்றென்று தத்துவங்களை உணர்ந்தோர் புரிந்து கொள்வர். அதை நீயும் புரிந்து கொண்டால் மனக்குழப்பம் ஏற்படாது என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1537. ஆமா றுரைக்கும் அறுசம யாதிக்குப்**
**போமாறு தானில்லை புண்ணிய மல்லதங்**
**காமாம் வழியாக்கும் அவ்வே றுயிர்கட்கும்**
**போமாறவ் வாதாரப் பூங்கொடி யாளே.**

‘‘சிவனடியார்களே, நமசிவாயகம் சொன்னார், ‘‘பாலா, அவரவர் நிலைக்கு ஏற்றவாறு கூறப்பட்டுள்ள ஆறு சமயங்களுக்கும் பயனான புண்ணியம் ஒன்றேயாகும். சிவபெருமானின் திருவடி இன்பத்தைச் அளிக்கும் நன்னெறியான சன்மார்க்கத்திற்குப் பயன் உயிர்களின் நிலைக்கேற்பக் கிடைக்கும் சிவப் பேறாகும் எல்லா உயிர்களுக்கும் அவற்றின் நிலைக்கேற்ப பயனறிந்து ஆட்கொள்பவள் திருவருள் அம்மை. இதை உணர்பவர்கள் மனம் குழம்பமாட்டார்கள். எது தேவையோ அதைப் பெறுவது தான் புத்திசாலித்தனம். அதை விட்டு விட்டுத் தேவையில்லாதவற்றை வாங்குவது போன்றது உனது செயல். நீ திருமணமானவன். நன்றாக விசாரித்துச் சீர் வரிசைகள் பற்றிப் பேசிச் சரியான முடிவெடுத்த பின் இப்போ சந்தேகப்பட்டால் வாழ்க்கை எப்படி நரகமாகிறதோ அப்படித் தான் சமயத்தையும் நோக்கல் வேண்டும். எதையும் ஆராயாது ஏற்க வேண்டும். அச்சமயம் கூறும் நெறிகளைப் பின்பற்ற வேண்டும். காலம் அவற்றை உனக்குத் தெளிவுபடுத்தும். அதுவரை சிவனை வணங்கிக் கொண்டிரு என்றவர்’’ என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1538. அரனெறி யாவச தறிந்தேனும் நானுஞ்**
**சிரநெறி தேடித் திரிந்தஅந் நாளும்**
**உரநெறி யுள்ளக் கடல்கடந் தேறுந்**
**தரநெறி நின்ற தனிச்சுடர் தானே.**

‘‘சிவனடியார்களே, நமசிவாயகம் பாலேந்திரனுக்குச் சொன்னார், ‘‘மகனே, மக்களில் பலர் மனதுள்ப் பல துன்பங்களைக் சுமந்து கொண்டிருந்தபோதும் தமக்கு எத் துன்பங்களும் இல்லை. நானே பெரியவன் என்று நினைத்துச் செயலாற்றுகின்றனர். மக்களும் அதையே நம்புகின்றனர். அண்மையில் காலமான ‘‘காசிநாதன் பெரும் கோடீஸ்வரன் என்று நினைத்த பலர் அவனுடன் நட்புக் கொள்வது தமக்குப் பெருமையென்று நினைத்து நட்புப் பூண்டனர். காசிநாதன் அதை நல்லவழியிற் பயன்படுத்தி அவர்களிடமிருந்த செல்வங்களைப் பெற்றான். மிக மிக ஆடம்பரமாக வாழ்ந்த அவன் திடீரென்று விபத்தில் இறந்து விட்டான். அவனுக்குக் கடன் கொடுத்த பலர் அவன் இறந்த பின்பு தான் அவனது உண்மையான நிலையை அறிந்தனர். மகனே, சிவனால் அருளிச் செய்யப்பட்ட நெறிகளை அறிந்த நான், அக்காலத்தில் வன்மையான காமம், வெகுளி மயக்கத்துக்குட்பட்டேன். அழகான பெண் ஒருத்தியை விரும்பினேன். அவள் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஒரு வெளிநாட்டுப்பணக்காரனைத் திருமணம் செய்துவிட்டாள். பெருந்துன்பத்துடன் வாழ்க்கை வெறுத்தது. ஆச்சிரமத்திற்கு வந்த போது சுவாமி அவர்கள் என்னை அறியாமையிலிருந்து விடுபடச் செய்து, எனது

துன்பங்களை நீக்கி சிறந்த நெறியினை அருளிச் செய்தார். அதற்கு உறு துணையாக நின்றவர் திருவருளம்மை. உனது மனதில் ஒரு பெண்ணின் நிழல்படிந்திருக்கிறது . அதை அகற்று என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1539. தேர்ந்த அரனை அடைந்த சிவனெறி**
**பேர்ந்தவர் உன்னிப் பெயர்ந்த பெருவழி**
**ஆர்ந்தவர் அண்டத்துப் புக்கவ் வருள்நெறி**
**போந்து புனைந்து புணர்நெறி யாமே.**

''சிவனடியார்களே, நமசிவாயகம் சொன்னார், ''பாலா திருவருளம்மையால் உணர்த்த உணர்ந்து சிவபெருமானை அடைந்த நன்னெறியானது சிவநெறியைக் கைவிட்டு வேற்று நெறியிற் சென்று துன்பங்களால் மீண்டும் சிவநெறிதான் தம்மை உய்விக்கும் என்று நம்பி வந்தவர்களுக்கு இடந்தரும் பெருநெறி சித்தாந்த நெறியாகும். இவர்கள் சிவநெறியில் ஒழுகி இறவா இன்பப் பேறெய்துவர். இதற்கு உதபுவள் திருவருளம்மையேயாகும். இந்நெறியைக் கைக்கொண்டு பின்வேறு காரணங்களுக்காக புன்நெறிகளிற் சென்றோர் அதை உணர்ந்து திரும்பிவந்து தீவிரமாக நுண்நெறியைக் கடைப்பிடித்துச் சிவனது திருவடியை அடைந்துள்ளனர். இதற்கு நாயன்மாரது வாழ்க்கை உதாரணமாகும். தவறு செய்யாது மனிதனால் வாழமுடியாது. அழகு என்பது ஒருபேய். அழகான பொண்ணைக் கண்டால் ஆசைப்படும் மனம் பின்வேறு காரணங்களால் அவளை வெறுத்து ஒதுக்கும் துன்பப்பட்டவர்களுக்குத் துன்பங்களை நீக்கி இன்பமளிப்பவள் திருவருளம்மை. அதனால் உனது துன்பங்களைத் திருவருளம்மையிடம் ஒப்படைத்துவிட்டு உனது வாழ்க்கையைத் தொடங்கு. நாளடைவில் யாவும் தீரும் என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1540. ஈரு மனத்தை யிரண்டற வீசுமின்**
**ஊறுஞ் சகாரத்தை ஓதுமின் னோதியே**
**வாரும் அரனெறி மன்னியே முன்னியத்**
**தூருஞ் சுடரொளி தோன்றலு மாமே.**

''சிவனடியார்களே, நமசிவாயகம் பாலாவுக்குச் சொன்னார், ''உலகம் துன்பமயமானது. இன்பம் என்று நினைத்து நாம் செயற்பட்டுப் பெறுபவை யாவும் துன்பத்தையே தரும். அதனால் பெறிபுலன் வழிச்செல்லும் மனத்தை அடக்குங்கள். வேறுபட்ட நெறிகளில் செல்லாதீர்கள். 'சிவ' , என்று ஓதுங்கள். அதன்பின்

‘சிவயசிவ’ என ஓதுங்கள். அப்படி ஓதும் போது சிவஒளி உள்ளொளியாகத் தோன்றும். அது தோன்றினால் வாழ்வு இனிக்கும். மனதில் உள்ள துன்பங்கள் யாவும் நீங்கி மனம் ஆனந்தக் கூத்தாடும். பழையவற்றை மனம் மறந்துவிடும். அப்படி ஒரு தன்மை இருந்தது கூடத் தெரியவராது என்றவர்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1541. மினற்குறி யாளனை வேதியர் வேதத்**
**தனற்குறி யாளனை ஆதிப் பிரான்தன்னை**
**நினைக்குறி யாளனை ஞானக் கொழுந்தின்**
**நயக்குறி காணில் அரனெறி யாமே.**

‘‘சிவனடியார்களே, அகத்தவம் செய்வோர்க்குச் சிவபெருமான் மின்னல் போன்று அருள் ஒளி அருள்வன். சிவனை முழுமுதலாகக் கொண்டு செந்தனல் ஓம்பும் சிவவேதியர்களான அந்தணர்களுக்கு அவர்கள் வளர்க்கும் அனல்வடிவமாகத் தோன்றியருள்வன். அவன் தான் ஆதிப் பிராணான அம்மை அப்பன். அவன் மெய்யன்பர்கள் நினைக்கும் திருமேனி கொண்டருள்வன். செறிவு, நோன்பு, சீலமாகிய முத்திறத்தார்க்கும் வெளிப்பட்டருளும் அகஒளி, புறவொளி, திருவடியுரு ஆகிய மூன்றும் கடந்த ஞான னெறியில் உணர்வுக்குள் உணர்வாகத் தோன்றும் பேரறிவுவப் பேரொளியை அருட்கண்ணால் காண்பதே அரநெறியாகும். ஆகையால் அருட்கண்ணை உண்டாக்குவதற்கான வழியில் செல்லுங்கள்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1542. ஆய்ந்துண ரார்களின் ஆன்மாச் சதுர்பல**
**வாய்ந்துண ராவகை நின்ற அரனெறி**
**பாய்ந்துணர் வார்அரன் சேவடி கைதொழு**
**தேர்ந்துணர் செய்வதோர் இன்பமு மாமே.**

‘‘சிவனடியார்களே, உயிர்களின் நிலைப்பாடுகள் பலவாகும். நன்னெறியாகிய அரனெறியில் சென்று உணர்ந்து ஒழுகுபவர்கள் ஒருவகையினர். அரசனின் திருவடியினை வணங்கிக் கை தொழுவார் மற்றொருவகையினர். இருவகையினரும் எய்தும் பெரும்பயன் திருவடி இன்பமேயாகும். அதனால் இரு வகையில் எதையும் செய்து சிவனது திருவடியை அடையலாம்.’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1543. இத்தவம் அத்தவம் என்றிரு பேரிடும்**

**பித்தரைக் காணின் நகுமெங்கள் பேர்நந்தி**
**எத்தவ மாகிலென் எங்குப் பிறக்கிலென்**
**ஒத்துணர் வார்க்கொல்லை யூர்புக லாமே.**

"சிவனடியார்களே, நன்னெறியாக சிவனெறியில் கொண்டு சேர்க்கும் எந்நெறிகளிலும் செய்யப்படும் தவங்கள் யாவும் அவ்அவ் நெறியைப் பின்பற்றுவோர்க்கு ஏற்புடையனவாகும். அதனால் இத்தவம் அத்தவம் என்று வேறுபடுத்திப் பேசுவோர் பித்தராவர். அத்தகையோரைக் காணில் நந்தியாகிய சிவபெருமான் சிரித்தருள்வன். எவ்வகையான தவமானாலென்ன, எவ்வகைப் பிறப்பு எய்தினால் என்ன, திருவருளின் துணையால் திருவடியுணர்வு எய்தி சிவஉலகை அடைவதே குறிக்கோளாகும்".

"சிவனடியார்களே, கிராமத்தில் இருந்து பட்டணத்திற்குத் தனது விளைபொருட்களை விற்கச் செல்லும் விவசாயி ஒரு பாதையால் செல்வான். வாங்கச் செல்பவன் இன்னொரு பாதையால் செல்வான். அதைவிடப் பல பாதைகளுடாகப் பட்டனத்திற்குச் செல்லலாம். எல்லோருடைய குறிக்கோளும் பட்டணத்துக்குச் செல்வதேயாகும். அதை அவர்கள் விரும்பியபடி செல்லலாம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாதை சிறந்ததாக இருக்கும். இது போன்றது தான் சிவஉலகம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1544. **ஆமே பிரான்முகம் ஐந்தொடு மாருயிர்**
**ஆமே பிரானுக் கதோமுக மாறுள**
**தாமே பிரானுக்குந் தன்சிர மாலைக்கும்**
**நாமே பிரானுக்கு நாரியல் பாமே.**

"சிவனடியார்களே, சிவபெருமானின் திருமுகங்கள் ஐந்து. அவை இயக்கம் ஆட்சி நடுக்கம் தோற்றுவித்தல் என்னும் தொழில்கள் பற்றிய பெயர்களுடையவை இவற்றை ஈசானம் தற்புருடம் அகோரம் வாமதேவம் சத்தியோ சாதம் எனப்படும். இத்திரு முகங்களின் இடம் முறையே உச்சி கிழக்கு தெற்கு வடக்கு மேற்கு திசைகளாகும். இவை ஆருயிர்களை உடல் உலகுடன் பொருத்துவதும், மாயையைக் காரியப்படுத்துவதும், வினை மலங்களைத் தொழிற்படுத்துவதும் ஆகும். நடப்பாற்றலாகிய ஆதிசக்தியின் முகம் கீழ்நோக்கிய திருமுகம் என்று கூறப்படும். இதனுடன் சேர்ந்து ஆறுதிரு முகங்கள் உண்டு. . இவை சிவபெருமானுக்கு உரியன.

இத்துடன் அயன் அரி முதலிய தேவர்களின் தலை மாலையும் பூண்டுள்ளார் மக்களாகிய நாம் அச் சிவபெருமானுக்கு அன்புடையராவோம்.'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1545. ஆதிப் பிரானுல கேழும் அளந்தவன்**
**ஓதக் கடலும் உயிர்களு மாய்நிற்கும்**
**பேதிப் பிலாமையின் நின்ற பராசக்தி**
**ஆதிக்கட் டெய்வமும் அந்தமு மாமே.**

''சிவனடியார்களே, அம்மையோடு கூடிய அப்பனாகிய சிவபெருமான் உலகை அளந்த மாலாகவும் அம்மாலின் நிறம் போன்ற ஒளியுடைய கடலாகவும், அக்கடலைச் சூழவாழும் பல்வேறுபட்ட உயிர்களாகவும், கலப்பால் ஒன்றாய் நிற்பன். அவன் வனப்பற்றலாகிய திருவருள் அம்மையுடன் பிரிப்பின்றி மரமும் காழ்ப்பும் போல ஒருவனே இரு நிலையாய் நிற்பன். அவ்வம்மையே நடப்பாற்றலாகிய ஆதியாவாள். அவளே ஒடுக்கத்தைச் செய்யும் ஆண்டவனுமாவாள்'' என்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1546. ஆய்ந்தறி வார்கள் அமரர்வித் தியாதரர்**
**ஆய்ந்தறி யாவண்ணம் நின்ற அரனெறி**
**ஆய்ந்தறிந் தேனவன் சேவடி கைதொழ**
**ஆய்ந்தறிந் தேனிம்மை அம்மைகண் டேனே.**

''சிவனடியார்களே, தேவர்களும் வித்தியாதரரும் சிவனை ஆய்ந்தறிந்தவர்கள். அவர்கள் ஆய்ந்து அறிய முடியாதபடி அப்பால் நின்றதாகும் அரனெறி. சிவபெருமானின் திருவடியைத் தொழும்பேறு கிடைத்தமையால் அவ்வருளின் துணையால் அவனை ஆராய்ந்துணர்ந்தேன். அம்முறைமையினால் நிலையாதனவாகிய இம்மை உம்மையாகிய மறுமைகளை வெறுத்து ஒதுக்கினேன். அதனால் செந்நெறியாகிய அம்மை என்னும் அரனெறியின் உண்மையினை உள்ளவாறு உணர்ந்தேன் என்று திருமூலர் கூறுகிறார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1547. அறியவொண் ணாதவ் வுடம்பின் பயனை**
**அறியவொண் ணாத அறுவகை யாக்கி**
**அறியவொண் ணாத அறுவகைக் கோசத்**
**தறியவொண் ணாததோர் அண்டம் பதிந்ததே.**

''சிவனடியார்களே, உயிர்களின் பெறுதற்கரிய பயன் வீடுபேறு அடைதலே. அதை அடையும் வழிவகைகளை எளிதாக்கவே சிவன் அகச் சமயங்கள் ஆறையும்

அருளினன். தொன்மையான ஆணவமலத்தை ஆறுவகையாக்கி, உணவுடம்பு, பிராண மயகோசம் வளி உடம்பு, மனவுடம்பு, அறிவுடம்பு, இன்பவுடம்பு ஆகிய ஐவ்வகை உடம்புகளாலும் அறிய முடியாத திருவருள் பெருவெளி ஆருயிர்கள் மாட்டுப்பதிந்தது. ஐவகை உடம்பினையும் முறையே அன்னமயகோசம் விஞ்ஞான மயகோசம் ஆனந்தமயகோசம் எனச் சொல்லப்படும். அகச்சமயங்களாவன ஆவிற்கற்கோள், ஆவி வேற்றுமைக்கோள், சிவனொப்புக்கோள், கருவிசென்றுபற்றுக்கோள். சிவன் செயலின் மைக்கோள், சிவத்திரிபுக்கோள் என்பன. இவற்றை முறையே பாடான வாதம், பேதவாதம், சிவசமவாதம்,

சங்கிராந்தி வாதம், ஈசுரவிகாரவாதம், நிமித்த காரண பரிணாம வாதம், சங்கிராந்த வாதம், ஈசுவரவிகாரவாதம், நிமிர்த்த காரண பரிணாமவாதம் எனக் கூறப்படும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**ஐந்தாம் தந்திரம் முற்றும்.**